

# நிகழ்காலத்தில் வாழ்தல்

## சிறுகதைத்தொகுப்பு

கலாபூஷணம் வீ.என் சந்திரகாந்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிகழ்காலத்தில் வாழ்தல்'

சிறுகதை தொகுப்பு.

கலாபூஷணம் வீ. என். சந்திரகாந்தி

வெளியீடு-
தி/ஜெயகாந்தி கலை கலாச்சார
விளையாட்டு மேம்பாட்டு கழகம்
572A ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரப் பட்டியல்.


| | | |
|---|---|---|
| வெளியீடு | :- | 07 |
| நூல் | :- | நிகழ்காலத்தில் வாழ்தல். |
| இலக்கிய வகை | :- | சிறுகதை |
| ஆசிரியர் | :- | கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி.<br>572A , ஏகாம்பரம் வீதி<br>திருக்கோணமலை. |
| பதிப்புரிமை | :- | திருமதி. செல்வச்சோதி சந்திரகாந்தி. |
| முதற் பதிப்பு | :- | 28.12.2018 |
| கட்டுரைகள் கணனி மயப்படுத்தலும் அட்டைப்பட வடிவமைப்பும் | :- | ச.சதீஷ்காந்தன். |
| அச்சுப்பதிப்பு | :- | A.R.Traders, திருஞானசம்பந்தர் வீதி<br>திருக்கோணமலை |
| வங்கி கணக்கு விபரம் | :- | V.N.Chandragandi<br>( HNB PLC . Main St. Trincomalee) |
| கணக்கு இலக்கம் | :- | 031020435441 |
| E-Mail Address | :- | vnchandragandi@gmail.com |
| ISBN | :- | 978-955-78979-5-8 |
| பக்கம் | :- | 144 |
| சொற்கள் | :- | 21135 (சிறுகதைகள்) |
| நூல்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் | :- | 572A, ஏகாம்பரம் வீதி, திருக்கோணமலை. |
| தொடர்புக்கான தொலைபேசி | :- | 071-9392190 / 026-2224706 |
| விலை | :- | 400.00 |


**(ஒரு நூலினை கொள்வனவு செய்வதானது புதிய நூல் ஒன்றின் பிரசுரத்திற்கு வழி வகுப்பதாகும்.)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே....

I. சமர்ப்பணம்

II. கட்டுரை விபரம்.

III. அணிந்துரை - திரு.ப(f)ரினாஸ் இஸ்மைல் (S.L.A.S)

IV. முகவுரை — திரு.தி.லலிதகோபன்.

V. எனதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்.

இலக்கியப் பரப்பில் தமிழை
வாழ்வாங்கு வாழவைத்த
முக்கால முணர்ந்த முனிவர்களுக்கும்.....

பல நூறு களங்கள் அமைத்த
சங்க காலம் முன்னிட்ட புலவர்களுக்கும்
சமயகுரவர்களுக்கும்.....

தமிழின் பெருமை உணர்ந்து...
தமிழை உலகளாவிய ரீதியில்
பிரபல்யமடைய செய்யும் புலம்பெயர்ந்தோர்க்கும்...

தாய் நாட்டில் கல்வி பயின்றவாறு
தாய் மொழியாம் தமிழுக்கு அணிசேர்க்கும்
அனைத்து உள்ளங்களுக்கும்....
இந் நூல் படையல்!

திருமலை
வீ.என்.சந்திரகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதைகள் பிரசுரமான பத்திரிக்கைகள் மற்றும் திகதிகள்....

| | | | |
|---|---|---|---|
| 1. | நிகழ்காலத்தில் . வாழ்தல் | - | தினக்குரல் - 02 ஓக் 2011 |
| 2. | அக்கினி பூக்கள் | - | வீரகேசரி - 10 நவம்பர் 2013 |
| 3. | சிறுபிள்ளைத்தனம் | - | ஞானம் - செப்டம்பர் 2015 |
| 4. | வருவது போல் வரும் | - | ஞானம் - ஒக்டோபர் - 2012 |
| 5. | மங்கை ஒரு வேங்கையாக | - | ஞானம் - பெப்ரவரி - 2013 |
| 6. | நிமா என்கின்ற நிரோஷிமா | - | ஞானம் - செப்டம்பர் - 2008 |
| 7. | என்னவள் நீதானே | - | ஞானம் - ஜனவரி -2011 |
| 8. | உந்துருளி | - | வீரகேசரி- 07 டிசம்பர்-2014 |
| 9. | கைபேசி | - | தினக்குரல் - 26 ஆகஸ்ட்- 2012 |
| 10. | நனவாகும் கனவுகள் | - | ஜீவநதி – மார்ச் 2014 |
| 11. | சுடுபவனுமாய்.....சூடுபடுபவனுமாய்... | | தினக்குரல் - 25 ஜனவரி 2009. |
| 12. | சம்ஹாரம் | - | வீரகேசரி – 2007 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



வாசிப்பு ஒருவனை முழுமையடைய செய்கிறது. அதற்கு வாசிப்பு இன்றியமையாததாகும். நல்ல புத்தகங்களே அதற்கு உறுதுணையாகும். அது உங்கள் உற்ற நண்பனாகவும், பயணத்தோழனாகவும் இருந்தால் மாத்திரமே சாத்தியமாகும்!

நல்ல புத்தகத்தின் தெரிவிற்கு தேடல் அவசியம். அப்போதே சிறந்த புத்தகம் உங்கள் தெரிவாகலாம். தேடல் உள்ளவரை வாழ்வில் வாசிப்பு தாகம் தீராது.

சிறந்த புத்தகத்தின் தெரிவு அமையபெறுவது நல்ல சிந்தனை வளமுள்ள எழுத்தாளர்களைப் பொறுத்ததாகும். அத்தகைய எழுத்தாளர்களது எழுத்தினால் வாசிப்பவரது எண்ணத்தில் மாற்றம் நிச்சயம் பிரதிபலிக்கும்.

உண்மையில் நல்ல எழுத்தாளர்களை நாங்கள் எப்போதும் ஊக்கப்படுத்தல் வேண்டும். அது அவர்களை எப்போதும் மனதளவில் மகிழ்விப்பதோடு அத்துறையில் மேலும் மேலும் வளர்ச்சியடைச் செய்வதோடு, மேலும் படைப்புக்களை வெளிக்கொண்டுவருவதற்கு எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தும்.

அந்த வகையில் அண்மையில் எனக்கு கிடைத்த புத்தகம் ''வாழ்வியல் அனுபவ பகிர்வு'' பாகம் 1 ஆகும். அதனை மேலோட்டமாக வாசித்ததில்பிடித்து போனதனால் ஓரிரு நாட்களுக்குள் முற்றாக வாசித்து முடித்துவிட்டேன்.

பின்னர் தொலைபேசியின் மூலம் அவ் எழுத்தாளரிடம் தொடர்பு கொண்டு அதன் சிறப்புக்களை சிலாகித்து கூறியதும் அவரே மெய்மறந்துவிட்டார். அப்போது தான் எனக்கு தெரியவந்தது. அவரது 'வாழ்வியல் அனுபவ பகிர்வு பாகம் 2 வெளிவந்துவிட்டதை. அவரிடம் இருந்து சில புத்தகங்களைப் பெற்று எனது இன்றைய விடுமுறைப்பயணத்தில் முற்றாக படித்து சுவைத்துவிட்டேன்.

எவ்வளவு அற்புதமாக வாழ்வியல் அனுபவபகர்வுகளை அவரது எழுத்தின் மூலமாக ரசித்து ருசித்து நடைமுறையினூடாக மீண்டும் பதித்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நான் இந்த பொதுதளத்தில் பாராட்டுவது என் கடமை என்று நினைக்கின்றேன். அந்த எழுத்தாளன் வேறு யாருமல்ல நாடறிந்த கலாபூஷணம் திருமலை வீ.என்.சந்திரகாந்தி ஆவார்.

இவரது எழுத்துக்கள் காலத்தால் பெறுமதியானதாகும். இவர் மேலும் தமிழ் வாசகர்களுக்கு கனதியான படைப்புக்ளை ஆக்க வேண்டும் என்று அவரை வினயமாக கேட்டுக்கொள்வதோடு , விரைவில் வாழ்வியல் அனுபவ பகிர்வு பாகம் - 3 வெளிவரவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

அதற்கு எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நீண்ட ஆயுளையும், மன பலத்தையும் , பண பலத்தையும் நல்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

திரு.ப(f)ரினாஸ் இஸ்மைல் (S.L.A.S)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை



திருமலை வீ.என்.சந்திரகாந்தியின் கலை ஆர்வம் மிக்க எழுத்துக்களை அவரது முன்னைய படைப்புக்களான சிறுகதைத்தொகுப்புக்கள் நாவல் மற்றும் கட்டுரைத்தொகுப்புக்களை ஆழ்ந்து படித்ததால் என்னால் உணரமுடிந்தது.

இந் நிலையில் அவரது ஏழாவது வெளியீடாக பிரசுரமாகும் ''நிகழ்காலத்தில் வாழ்தல்'' சிறுகதை தொகுப்புக்கு முகவுரை எழுதும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்!

இத்தொகுப்பில் உள்ள சில கதைகளின் போக்குகள் தெளிந்த நீரோடை போன்றே இருக்கும். அதன் இறுதிப்பகுதியில் எதிர்பாராத திருப்பங்கள் நிறைந்திருக்கும்!

அந்த வகையில் இந்த தொகுதியின் முதலாவது கதையான நிகழ்காலத்தில் வாழ்தல் என்பதிலும் வெளியுலகத்திற்கு ஆதர்ச தம்பதிகளாக திகழும் செல்லம்மா , சொக்கநாதர் இடையே அதாவது அவர்களின் தாம்பத்திய வாழ்கையில் முள் ஒன்று இருக்கின்றது. கடைசிப் பகுதியில் அந்த முள் என்ன என்பதை எழுத்தாளர் சிலேடையாக கூறிவிடுகின்றார். அவரின் அந்த புதிரை அவிழ்க்க முடிந்த வாசகன் நிச்சயமாக தேர்ந்த ஒரு வாசகனே ஆவான்.

மேலும் நிகழ்காலத்தில் வாழ்தல் என்பது ஒரு ஆன்மீக தெளிவுபடுத்தல். கடந்த காலத்தை எண்ணி கவலையுறாமலும் எதிர்காலத்தை எண்ணி அச்சம் கொள்ளாமலும் நிகழ்காலத்தில் வாழ்தலே ஒவ்வொருவரினதும் பண்பாக இருக்க வேண்டும் என்பதை இத்தொகுப்பின் தலைப்பு கதை மட்டுமின்றி ஒவ்வொரு கதையுமே வலியுறுத்துவதை அவதானிக்க முடியும்.

தற்போதய சிறுகதைகளில் அனேகமானவை போர்கால பின்னணி சார்ந்து எழுதப்படுபவையே. முப்பது ஆண்டுகால கொடிய யுத்தமும் அதன் விளைவுகளும் தமிழினத்தின் இறுதி இருப்பு வரைக்கும் எழுதிக்குவிக்க கூடிய பல்லாயிரம் கதைளை எம்முன்னே தந்துள்ளன. அந்த வகையில் '' அக்கினி பூக்கள்'' என்ற இவரின் இரண்டாம் சிறுகதை போரின் பிற்பகுதியில் வாழ்கின்ற இரண்டு சகோதரிகள் பற்றிய கதையாகும். கிளிநொச்சி நகரின் எழுச்சியும் வீழ்ச்சியும் பூடகமாக கூறப்படும் இந்த கதையின் ஒரு பெண் ஆண் துணையின்றி எதிர்நோக்கும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களும் ' ஊர் வாய்களும்' திறம்படவே எழுத்தாளரினால் நோக்கப்படுகின்றன. எல்லா ஆண்களுமே ' கருணாதிலக' போன்று அமைந்துவிட்டால் நள்ளிரவில் பெண் தனியாக பயணிக்கும் 'அந்த நாள்' நாளையல்ல இன்றே கூட மலர்ந்துவிடக்கூடும். கதையின் முடிவு தேசிய வாதிகளுக்கு சாட்டையடியாக அமையினும் கூட அதுவே யதார்த்த தரிசனம் என்றால் மிகையாகாது!

காதல் என்பது வேறு , யதார்த்த வாழ்வியல் என்பது வேறு . அதனை இன்றைய தலைமுறைக்கு உணர்த்தும் ஒரு கதையே 'துடுக்கு தனம்' ! இந்த கதையின் ஓட்டமாக விளங்குவது கதாநாயகி திவ்யாவின் துடுக்குத்தனமே. கதாசிரியரின் திறமை என்பது திவ்வியாவை ஒரு புரியாத புதிராக்கி கதையினூடே உழல விடுவதே. கடைசியில் திவ்வியாவை தந்தையினுடைய வாக்கு மூலத்தின் ஊடாக திவ்வியா ' காதல் துரோகி' என்ற பழிசொல்லில் இருந்து விடுவிக்கப்படுகின்றாள். முடிவு திவ்வியாவின் விழிகளில் இருந்து மட்டுமின்றி வாசகனின் விழிகளிலிருந்தும் கண்ணீரை வரவைக்கின்றது.

தமிழ் சமூகத்தின் தவிர்க்க முடியாத அம்சங்களில் ஒன்று புலம் பெயர்தலும் ,புலம் பெயர்ந்தோரில் தங்கி வாழ்தலுமாகும். வெளிநாட்டு பணத்தின் மோகத்தால் வாழ்ந்தோர் சிலர் தாழ்ந்தோர் பலர் , ஆனாலும் மீண்டாரில்லை. கதாசிரியரின் புதுமையான கற்பனையில் இந்த கதையும் ஒன்று . எதிர்பார்ப்புக்களின் உச்சத்திலிருக்கும் அந்தக் குடும்பத்தின் ஏக்கங்கள் கதாநாயகன் கொண்டுவரும் பணத்தினால் தீர்ந்ததா என்பது கேள்விக்குறி. ஆனாலும் ' சிந்துஜன் பற்றிய நிஜங்கள் கதையின் இறுதியில் வெளிப்படுகையில் புருவங்கள் உயர்வதனை தடுக்க இயலவில்லை. ஆனாலும் இரட்டைத்தனமான அவரின் வாழ்வினை ஒரு அபலைப்பெண்ணிற்கு பரிசளித்த சமூகத்தின் நியாயங்கள் குறித்து கதாசிரியர் எழுப்பும் கேள்விகள் ஒவ்வொன்றும் யாவரையும் சம்மட்டியால் அடித்துச்செல்கின்றன.

வருவது போல் வரும் என்பது துன்பத்தின் போக்கா இன்பத்தின் போக்கா என்பது தீர்மானிக்கப்படாத வினாவாக தொக்கி தொடர்கின்றது... ஒரு சமூகத்தில் கதை என்பது என்ன ? வெறுமனே சொற்களை இட்டு நிரப்பி ' வானத்தில் நாலு நிலவு பூமியில் தோரணம் போட்டது' என எழுதுவதன்று. கதையில் யதார்த்த போக்கும் உயிரோட்டமும் நிரம்பியிருத்தல் வேண்டும். வெறுமனே சொற்களை நிரப்பி எழுதப்படும் கதைகளை விடவும் யதார்த்தம் கலந்து எழுதப்படும் கதைகளே வெற்றி பெறுகின்றன. அந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு விருதுகளுக்கு உரித்தான கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி அவர்களால் வெளியிடப்படும் தொகுப்பே ' நிகழ்காலத்தில் வாழ்தல்' இதில் உள்ள கதைகளை ஊன்றி படிப்போருக்கு புலப்படுவது யாதெனின் இங்கே கூறப்பட்ட சம்பவங்களும் பாத்திரங்களும் நமது வாழ்வில் எங்கோ ஒரு மூலையில் சந்தித்ததாக இருப்பதே. இந்த இடமே கதாசிரியர் வெற்றி பெறும் இடமாகும்.

இவரது கதையின் கருப்பொருளாக ஏதேனும் சமூக பிரச்சனைகள் சார்ந்த நிகழ்வுகள் இருப்பதுடன் அடுத்தடுத்து திருப்பங்களுடன் இந்த கதைகள் வாசகரை தன்னுள் வைத்து இறுதிவரைக்குமாக அழைத்து செல்கின்றன.

ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகள் மாத சஞ்சிகைகளில் பிரசுரமான சிறுகதைகளை தொகுத்து வெளியான இந்த நூலாக்கம் காலத்தின் தேவையே.

பூ ஒன்று புயலானது பழைய கதை ' மங்கை ஒரு வேங்கையாக' என்பது புதிய கதை. ஈழபோரில் பெண்களின் பங்காற்றுதல் பற்றிய வாசிப்புக்கள் யாவுமே வலியின் வேரிலிருந்து பூத்த செம்பூக்களே... ' நிலவில் புதிய கவிதை எழுத நிமிர்ந்த புயல்களே..." என பாடினான் ஒரு கவிஞன். மற்றுமொரு புலவன் புதிய புறநானூற்றுப்பதிகமாக பாடினான். பெண்களை அதுவும் ஈழத்து பெண்களை தனித்தனியாக பகுத்து ஆராயும் போது ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வோர் கதை. காரணங்களும் காரியங்களும் வேறாயினும் போராட்ட வாழ்வியல் பெண்களின் மீது வலிந்து திணிக்கப்பட்டது என்பது மறுப்பதற்குரியதன்று. பருவ மயக்கத்தின் மீதான ஆண்மையின் அத்துமீறலும் அந்த பெண் இறுதியாக எடுக்கும் முடிவும் பெண்களாலும் புதிய சரித்திரங்கள் படைக்கப்படும் என்பதற்கு எடுத்துக்காட்டு.

இலங்கையில் இரு தேசிய இனங்களான தமிழர்களும் , சிங்களவர்களும் மொழியில் வேறுபட்டிருப்பினும் கலாச்சார ரீதியான பிணைப்புக்கள் பிரிக்க கூடியன அன்று. ' நிமா என்கின்ற நிரோஷிமா' என்கின்ற கதை இன ஐக்கியத்தை மையமாக கொண்ட ஒன்று. கதையின் ஆரம்பத்தை படிக்கும் போதும் கதையின் தலைப்பும் ஒரு சிங்கள யுவதியின் மன அவலங்களை வெளிப்படுத்துவதை உணரலாம். சிறிது காலத்திற்கு முன்னர் அரச சார்பற்ற நிறுவனங்களில் இணைந்து ஒருமித்து பணியாற்றிய சிங்கள , தமிழ் , முஸ்லிம் மக்களின் ஐக்கியம் அழகாகவும் சுவையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' என்னவள் நீதானே'' என்ற கதை ஓர் காதல் காவியம் , ' காதல் காதல் காதல்...போயின் சாதல் என்பது பாட்டுக்கோர் புலவனின் வரிகள். அறியாத பருவத்தில் தவறு செய்த ஒரு ஏழைப்பெண்ணின் வாழ்வு சமூகத்தின் பார்வையில் என்னவாகும் என்பதை கருப்பொருளாக கொண்ட கதை இது. ' ஒருத்தனுக்கு ஒருத்தி...' என்கின்ற வாழ்வியல் தத்துவம் தொடர்பான ஆத்மார்த்த விசாரணைகளையும் பருவ வயதில் தவறு செய்யும் ஒரு பெண் ஆயுள் முழுவதும் தான் செய்த தவறுகளுக்காக வருந்தி அழுது முடங்கி இருக்க வேண்டுமா. என்ற வினாவையும் இந்த கதையின் மூலம் கதாசிரியர் முன்வைக்கின்றார். கதையின் நாயகன் முற்போக்கு எண்ணம் கொண்டவனாயினும் கூட அவளை அவன் கைப்பிடிப்பதாயின் எதிர்கொள்ளவேண்டிய இடர்பாடுகளையும் கூட கதாசிரியர் நசூக்காக எடுத்துரைக்கின்றார்.

கதாசிரியரின் அடுத்தடுத்த கதைகள் இரண்டுமே நமது வாழ்வில் பிரிக்க முடியாது போய்விட்ட இரண்டு சாதானங்கள் பற்றியதாகும். ஒன்று ' உந்துருளி' இரண்டாவது 'கைபேசி'

'உந்துருளி' கதையினை நோக்குகையில் அதன் மைய கருவே உந்துருளியின் தேவைபற்றியும் அதன் பயன்பாடு மற்றும் தீங்குகள் பற்றியதாகவுமே அமைகின்றது. எனினும் இது ஒரு உளவியல் சார்ந்த கதை என்றால் மிகையாகாது. பழைய தலைமுறையை சேர்ந்த தந்தை ஒருவர் உந்துருளிபற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டவராக இருக்காவிடினும் கால ஓட்டத்தில் அவரது மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் விபத்தொன்றில் சிக்கிய பின்னரும் கூட உந்துருளி மேல் பற்றுக்கொள்ள வைக்கின்றது. காலத்துடன் மாறுபடும் மனிதரின் மனநிலையை தந்தை கதாபாத்திரம் மூலம் அழகாக தந்த கதாசிரியர் மிகவும் சாமர்த்தியம் நிறைந்தவரே...

அடுத்து ' கைபேசி ' விவகாரம்.... எதன் பொருட்டு தாய் தந்தையர் கைபேசியை வாங்கித்தராமல் விட்டனரோ அதனை அந்த பெண் இலகுவாக கடந்து செல்கின்றாள். தானே நல்லதொரு 'பக்கேஜை' தெரிவுசெய்கின்றாள். அதற்கு துணையாக தொலைக்காட்சி விளம்பரங்கள் துணைபோவதை அவள் வாயிலாக தெரிந்து கொண்ட தந்தை தொலைக்காட்சி சேவையையும் சந்தேககண் கொண்டு பார்ப்பவராக சூசகமாக எடுத்துரைத்த ஆசிரியரின் மதிநுட்பம் மெச்சுவதற்குரியது. அதே சமயம் கைப்பேசியின் விலை வெறுமனே மூவாயிரம் ரூபாய் என்று கூறவைத்ததன் மூலம் அது வெறும் உரையாடலுக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டியதன் கட்டாயமும் கூறப்படுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நனவாகும் கனவுகள்' சிறுகதை சாதியக்கட்டமைப்பின் மீது காட்டுத்தனமாக இயங்கிக்கொண்டிருக்கும் சமூகத்தின் மீது எறியப்படும் ஒரு அம்பு ஆகும். கால மாற்றத்தின் விளைவுகள் எவ்வாறு ஒரு மனிதனை தனது பிடியில் இருந்து இறங்கி வர வைக்கின்றது என்பதை கதாசிரியர் கதையின் நகர்வு வாயிலாக தெளிவுபடுத்துகின்றார். அதே சமயம் ஒரு மனிதனில் ஏற்படும் மாற்றங்கள் சமூகத்தில் மாற்றங்களை கொண்டு வரும் என்பதையும் ஆசிரியர் பூடகமாக கூறுகின்றார்.

இறுதிக்கதையான 'சம்ஹாரம்' இரசிகமணி கனக செந்தில் கதாவிருது பெற்ற போர்கால சிறுகதையாகும்.

மொத்தத்தில் ஆசிரியரின் சிறப்பியல்பு யதார்த்தமான கருப்பொருளை வேறுபட்டதும் வாசகர்களுக்கு புதியதுமான பின்னணியில் வழங்குவதாகும்!

என்றும் அன்புடன்

தி.லலிதகோபன்.
44/2B, கிருஷ்ணபுரம் ,
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

இப்பொழுதெல்லாம் இரண்டு விடயங்கள் பற்றி அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஒன்று வாசிப்பு பழக்கம் அருகிவிட்டதென்பது ... மற்றறையது நூல்கள் வெளியிடப்படுவதில் ஒரு அசமந்த போக்கு காணப்படுகின்றது என்பது...!

இரண்டுமே ஏற்றுக்கொள்ளப்பட கூடிய உண்மைகளேயாகும்! அதற்கு காரணம் வாசிப்பும் எழுத்தும் ஒன்றொடு ஒன்று தொடர்புபட்டு இருத்தலேயாகும்!

நல்ல வாசிப்பு பழக்கம் இருக்கும் ஒருவரால் தான் சிறந்த நூல்களை படைக்க முடியும். அவ்வாறான சிறந்த நூல்கள் தான் வாசகர்களின் எண்ணிக்கையை உயர்த்த முடியும்...

அந் நாட்களில் நல்ல நூலாசிரியர்களுக்கு பெரும் வாசகர் வட்டம் இருந்தது. வாசகர்கள் அவர்களது நூல்களை விரும்பி படிப்பதோடு அவர்களை மெச்சவும் செய்தனர்.

இந்நாட்களில் வாசகர் வட்டம் என்று எதுவும் இல்லை. பதிலுக்கு முகநூல் நண்பர்கள் தான் இருக்கின்றார்கள். ஒரு நூல் வெளியீடு பற்றி முகநூலில் பதிவு செய்தால் 'LIKE' என குறிப்பிடுவார்கள். வெளியீடு நடைபெறும் நாளில் அவர்களை காணவும் கிடைக்காது...
நூல் வெளியீட்டாளர்களாகப் பார்த்து நண்பனாக இருக்கிறானே என எண்ணி தபால் செலவும் ஏற்று நூலை அனுப்பி வைத்தால் கதை முடிந்தது! நூல் கிடைத்ததாக ஒரு தகவல் கூட அனுப்பமாட்டார்கள். வெளிநாட்டவர்களாயிருந்தாலும் கூட அதுதான் நிலைமை!

ஒன்று எழுத்தாளனானவன் இந்த பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும். மற்றையது தனது எழுத்தில் புதுமையையும் உத்வேத்தையும் கொண்டுவரவேண்டும். நான் ஒரு கவிஞனாக வேண்டும் என்று எண்ணி கவிதைகள் எழுதுபவர்கள் பலர் இருக்கின்றார்கள். அதே போன்று கதாசிரியராக வேண்டும் என்ற விருப்பம் அதிகம் பேருக்கு உண்டு. இவர்கள்தான வாசிப்பு பழக்கத்திற்கு பாடை கட்டுபவர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கு சொல்லாற்றல் மிக மிக முக்கியம். அதே போன்று உணர்ச்சிகள் நெஞ்சில் பிரவாகிக்கவேண்டும்!

கதை சொல்லும் காலம் ஒன்று இருந்தது. இப்போதெல்லாம் அதற்கு இடமில்லை. சிறுகதையாக இருக்கலாம் நாவலாக இருக்கலாம் சம்பவங்களை கண்முன்னே கொண்டுவருவதன் மூலம் கதை நகரவேண்டும். கதையின் பின்புலம் வாசகனுக்கு புதிதாக இருக்கவேண்டும். பாத்திரங்கள் யதார்தமாக இருக்கவேண்டும். முடிவு வாசகனால் ஊகிக்கப்பட முடியாததாக இருக்கவேண்டும். சிறுகதையோ நாவலோ அதை படிப்பவர் மனத்தில் பதிவொன்றை ஏற்படுத்த வேண்டும்.

வீரகேசரி, தினக்குரல் ஆகிய வாரமஞ்சரிகளிலும் ஞானம் , ஜீவநதி ஆகிய மாத சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியதன் மூலம் அச்சு அங்கீகாரம் பெற்ற எனது பன்னிரண்டு சிறுகதைகளை இந் நூலில் தொகுத்து வழங்கியுள்ளேன். உங்களுக்கு பரிச்சயமற்ற பின்புலத்தில் படைத்துள்ளேன். நிச்சயம் படியுங்கள்.

எனது கலை இலக்கிய பணியில் தாங்கள் நீட்டும் நேசகரத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

என்றும் அன்புடன்
திருமலை.வீ.என்.சந்திரகாந்தி
தி/ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு மேம்பாட்டு கழகம்.
572A ஏகாம்பரம் வீதி.
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்.

1. ஸ்திரீ இலட்சணம்
சிறுகதை தொகுப்பு 2002.

2. தொடரும் தலைமுறைகள்.
தினமுரசு சிறுகதைகள் தொகுப்பு 2003.

3. மீண்டும் வசந்தம்.
நாவல் 2004.

4. இந்திரர்கள் நாடும் அகலிகைகள்
சிறுகதை தொகுப்பு 2006.

5. வாழ்வியல் - அனுபவபகிர்வு
பாகம் - 1 2016

6. வாழ்வியல் - அனுபவபகிர்வு
பாகம் - 11 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# "நிகழ் காலத்தில் வாழ்தல்"

நியாயபூர்வமான சொகுசு வாழ்க்கையை வாழ்வதற்காகத்தான் ஒவ்வொரு மனிதனும் முயற்சிகள் பல செய்கின்றான்....

பலருக்கு அது கிட்டுவதில்லைத்தான்! ஆனால் சொக்கநாதர் அந்த சொகுசு வாழ்க்கைக்கு கொடுத்து வைத்திருந்தார். அது தான் அவர் செய்த பெரிய பாக்கியம். தனது வாழ்க்கையில் அவர் ஒரு பூரணத்துவத்தை உணர்ந்தார்.

இளமையில் வசதிகள் பல படைத்த பெற்றோருக்கு செல்லப்பிள்ளை....

இளைஞன் ஆகிய கையுடன் அரச தொழில் வாய்ப்பு....

அவர் விரும்பியபடியே அழகான மனைவி. குணத்தில் குன்றம். தெய்வபக்திக்கு ஒரு படி மேலாக பதி பக்தி. கணவனுக்கு பணிவிடை செய்வதையே தனது சேவையாகக் கொண்டவள்.

காலையில் 'பெட் காப்பி'... குளிக்க சுடுநீர்.... மனம் விரும்பிய படியான காலை ஆகாரம்.... ஸ்திரிக்கை செய்த மடமடப்பு மாறாத அலுவலக ஆடைகள். 'பொலிஷ்' செய்யப்பட்டு பளபளக்கும் பாதணிகள்.... அவரது எல்லாத் தேவைகளையும் அவர் படுக்கைக்கு செல்லும் வரை நிறைவேற்றுவதில் அவள் அபரிமிதமான மகிழ்ச்சி அடைந்தாள்.

அதற்கு மேலாக அவருக்கு ஏதாவது வசதிகள் தேவைப்பட்டால் 'செல்லம்மா... செல்லம்மா....' என்று அழைத்தபடி அவள் பின்னால் போனால் போதும்...! அத்தனையும் நிறைவேறிவிடும்!

பிள்ளைகள் மூவரையும் விவாகம் செய்து வைத்து பொறுப்புக்களை நிறைவேற்றிய மகிழ்ச்சி அவரது வாழ்வின் குறிக்கோளை நிறைவு செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மருமகன் ஒருவர் மற்றும் மருமகள்மார் இருவர், பேரக்குழந்தைகள் என அனைத்துச் செல்வத்தையும் அடைந்த நிலையில், ஓய்வூதியம் பெற்று, சாய்மனைக் கதிரையில் அமர்ந்து பத்திரிகை படிப்பதும் செல்லம்மாவின் உபசாரங்களில் ஆனந்திப்பதும் எல்லாமே அவரை சுவர்க்க போகத்தில் திழைக்க வைத்தது.

இந்த உலகமே மாயை தானே...!

அனைத்துமே கண்திருஷ்டி பட்டது போலாகிவிட்டது...!

இன்று சொக்கநாதர் சற்று அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்துவிட்டார்.

அறையின் மறு ஓரம் போடப்பட்டிருந்த கட்டிலில் செல்லம்மா நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

எந்த அசுகையும் இல்லாமல் அறையை விட்டு வெளியேறிய சொக்கநாதர் நேரே குளியலறை சென்று நீராடினார். பின்னர் சுவாமிப்பட அறைக்குச் சென்று நெற்றி நிறைய திருநீற்றினை அப்பிக் கொண்டார். பின்னர் ஒரு கோலுடன் மலர்கள் கொய்யப் புறப்பட்டுவிட்டார்.

ஒவ்வொரு பூக்களை கொய்யும் போதும் அவரது வாய் ராம மந்திரத்தை உச்சரிக்க தவறாது.

'ஹரே ராம ஹரே ராம...ராம ராம ஹரே ஹரே...'

மனைவி நன்றாகத் துயிலட்டும் என்கின்ற நல்லெண்ணத்தில் அவர் பூக்கள் கொய்யும் நேரத்தை கொஞ்சம் நீடித்துக் கொண்டார்.

அவர் இப்போதெல்லாம் வீட்டை விட்டு வெளியே செல்வதில்லையாதலால் அவ்வூர் கோயில் பூசகரே அவர் இல்லம் நாடி வந்து மலர்களைப் பெற்றுச் செல்வார்.

பொழுது நன்றாகத்தான் புலர்ந்து விட்டது. இனியும் மனைவியை துயில் எழுப்பாவிட்டால் சிணுங்குவாள்.

சேகரித்த மலர்களை உரிய இடத்தில் வைத்து விட்டு நேரே சமையல் கட்டுக்குச் சென்றார். தேநீரை சுடச் சுட ஊற்றி இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்களில் நிறைத்து வைத்துவிட்டு மற்றொரு அகன்ற பாத்திரத்தில் அளவான சுடுநீர் கலந்து எடுத்துச் சென்று மனைவியை துயில் எழுப்பினார்.

செல்லம்மா மெதுவாக எழுந்து முகத்தை மூடி வைத்திருந்த மென்கைகளை விலக்கி கணவனின் முகத்தில் விழித்தாள். அதில் அவளுக்கு ஒரு திருப்தி. பின்னர் கணவன் கொணர்ந்த நீரால் முகத்தை அலம்பி தலைமாட்டிலிருந்த துவாய் ஒன்றினால் அழுந்த துடைத்துக் கொண்டாள்.

அறையின் ஓரமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த சக்கரநாற்காலியை சொக்கநாதர் அவள் அருகே நகர்த்தி அவளை அதில் அமரச் செய்து தேநீர் பாத்திரத்தையும் கையில் கொடுத்தார்.

நம்ப முடியாது தான்! வாழ்வின் நிலையாமையை நம்ப முடியாது... மாயையின் கைங்கரியம் அளப்பரியது. அதைப்புரிந்து கொண்டு வாழ்ந்தால் கவலை இல்லை. கடந்த கால நிகழ்வுகளிலேயே பலர் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். எதிர்காலத்தை வைத்துக் கொண்டு கற்பனைக் கோட்டையை கட்டிக் கொண்டிருப்பர் சிலர். அப்படியென்றால் கவலை தான். உண்மையைச் சொல்லப் போனால் காலம் தேசம் வர்த்தமானம் என்கின்ற எல்லாமே பொய். நிகழ்காலம் ஒன்றுதான் உண்மை. நிகழ்காலத்தில் வாழ்ந்தால் துன்பத்தை தவிர்க்கலாம்.

தேநீர் பருகிய பின் வெறுமையான பாத்திரத்தை கணவனிடம் கொடுத்தாள் செல்லம்மா... அவளது விழிகளில் நீர் திரையிட்டது.

'இப்படியும் ஒரு காலம் வரும் எண்டு நான் நினைக்கேல்லை... உங்களை கஷ்டப்படுத்துகிற என்னை கடவுள் இன்னும் ஏன் மேலை எடுக்காமல் வைத்திருகிறான் என்று தெரியேல்லை...'

அவளது அழுகை விம்மலாக மாறியது...

சொக்கநாதர் அவளது வார்த்தைகளை கேட்டு அதிர்ந்து விட்டார். அவள் இல்லாத ஒரு வாழ்கையை அவரால் கற்பனை பண்ணிப்பார்க்க கூட முடியவில்லை. அவரது விழிகள் நீரால் நிரம்பிவிட்டது. அதனைக்காட்டிக்கொள்ளாமல் மனைவியை ஆசுவாசப்படுத்தினார்.

'காலம் காலமாய் நீர் எனக்கு செய்தபணிகளுக்கு நன்றிக்கடன் செலுத்துறதுக்கு கடவுள் எனக்கு ஒரு சர்ந்தர்ப்பத்தை தந்திருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலுக்கு மேல் கால் போட்டு அமர்ந்திருந்தபடி நான் உம்மட்டை வேலை வாங்கினனான். அதெல்லாத்தையும் பார்த்துக்கொண்டிருந்த கடவுளுக்கு நியாயம் புரியாதே ?

சக்கரநாற்காலியை குளியலறைக்கு அருகே நகர்த்திவிட்டால் செல்லம்மா காலைக்கடன்களை முடித்து நீராடிமாற்று ஆடை அணிந்து வருவாள்...

அந்த வீட்டின் பெரிய மண்டபத்தில் அவளது சக்கரநாற்காலி சுழன்று சுழன்று ஓடி மனைக்கு புத்துயிரூட்டும்.

சொக்கநாதருக்கு வீட்டு வேலை, சமையல் கலை, உடுதுணி தோய்த்தல் ஆகிய துறைகளில் உள்ள அறிவு சூன்யம்.

ஆனால் இன்றைய நிலையில் அந்த கருமங்கள் அனைத்தையும் ஆற்ற வேண்டிய பெரும் பொறுப்பு அவரை சார்ந்து விட்டது. அதற்காக அவர் எதற்கெடுத்தாலும் செல்லம்மாவின் ஆலோசனையை நாடுவார்.

வெளியிருந்து யாராவது புது 'விசிற்ரர்ஸ்' வந்து பார்த்தால் செல்லம்மா அவரை ஓட ஓட விரட்டி வேலை வாங்குவது போல இருக்கும்.

அதற்கெல்லாம் அவர் நாணிக் கோணமாட்டார். செல்லம்மா தற்போதைய இயலாமை நிமித்தம் அவரை சினந்தால் கூட அதனை பொறுத்துக்கொள்ளும் பக்குவம் அவருக்கு வந்துவிட்டது. அவளை அவர் மதித்து அன்பு பாராட்டினார்.

செல்லம்மாவை பொறுத்தவரை அவளது கற்பும் பொறுமையும் ஏனைய நற்பண்புகளும் அவளுக்கு வழங்கிய கொடையாகவே அதனை அவள் கருத வேண்டியிருந்தது.

காலைச் சாப்பாட்டுக்கு தேவையான மாவை பாத்திரத்தில் போட்டு செல்லம்மாவிடம் கொடுத்துவிட்டால் சக்கரநாற்காலிக்கு குறுக்கே போடப்பட்ட சட்டம் ஒன்றில் அதனை வைத்து பிட்டாகவோ, இடியப்பமாகவோ தயார் செய்யும் திறமை அவளிடம் இருந்தது. அதற்கும் மேலாக தேங்காய் துருவுதல், 'காஸ்' அடுப்பில் பலகாரத்தை அவித்தல், 'கிரைண்டரில்' சம்பல் அரைத்தல் ஆகிய பணிகள் சொக்கநாதரை சாரும்.

காலை ஆகாரம் தயார் செய்யப்பட்டு சாப்பாட்டு மேசைக்கு வந்ததும் செல்லம்மா அதனை கணவனுக்கு அன்புடன் பரிமாறுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகால தாம்பத்திய வாழ்கை அவர்களுக்கிடையில் ஆழ்ந்ததொரு அன்னியோன்னியத்தை ஏற்படுத்தியிருந்தது. ஒருவருக்கொருவர் உதவி செய்தல் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை புரிந்துணர்வு ஆகிய பண்புகள் அவர்களை மனமொத்த தம்பதிகளாக உலகுக்கு காட்டின.

காலை ஆகாரம் அருந்தி முடிந்ததும் சொக்கநாதர் பாத்திரங்களை "சிங்கில்" கழுவி எடுத்து 'பிளேட் ட்ரக்கில்' நீர் வடிய அடுக்கி வைத்தார்.

'ஒரு உயர் அரச அதிகாரியாக இருந்து பல நூறு அலுவலர் களை மேற்பார்வை செய்து வேலை வாங்கினார்... இண்டைக்கு தன்ரை பெண்சாதிக்கு பணிவிடை செய்ய தன்னை தயார்ப்படுத்திப் போட்டார். "ஏலாக்காலத்திலை எங்களை ஆர் பாப்பினம் என்று உறுதியாய்ச்சொல்ல முடியாது. ஒருவரை ஒருவர்தான் பார்க்க வேணும்" எண்டு மனுஷன் சொல்லேக்கை என்ரை நாடி நரம்பெல்லாம் பதறுவதைத் தவிர்க்க ஏலாமல் கிடக்கு...' செல்லம்மாவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது.

செல்லம்மாவுக்கு ஒவ்வோர் தடவை குளிக்கும் போதும் மாற்று உடுப்புத் தேவை. அதனால் அடிக்கடி சலவை செய்ய வேண்டிய ஆடைகள் குவிந்துவிடும்.

சொக்கநாதர் தனதும் மனைவியினதும் உடுதுணிகளை சலவை இயந்திரத்தில் இட்டு ஓடவிட்டார். முற்று முழுதாக இயந்திரத்தில் தங்கியிராது துணிகளை கசக்கி சுத்தமான நீரில் தனது கைகளினாலேயே அலம்பி ' ட்ரையரில்' போட்டு எடுத்தார். பின்னர் வெயில்பட கொடியில் விரித்தார்.

அவரது முதுமை அவருக்கு சில இயலாமைகளை உணர்த்தியது. எந்த வயதில் அவருக்கு மனைவியின் ஒத்தாசை தேவைப்பட்டதோ அந்த வயதில் அவர் அவளுக்கு பணிவிடை செய்ய வேண்டி ஏற்பட்டு விட்டது. அது தான் விதி !

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அந்த அநாவசியமான உந்துருளி விபத்து செல்லம்மாவின் வலது காலினை முழங்காலுடன் எடுத்து விட்டது. உந்துருளி ஓட்டுவதில் அவளுக்கிருந்த திறமை, இலாவகம் எல்லாம் அந்த ஒரு நொடியில் இல்லாமல் போய் விட்டதா? அல்லது விபத்து காரணமாக 'லாண்ட் மாஸ்டரின் ' இயங்கு தளத்தை சரியாகக் கணிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தவறிவிட்டாளா? விபத்து என்பது அதுதானே... காரணத்தை கணிக்க முடியாதது....!

ஒரு மாத கால 'ஐ.சி.யூனிற்' வாசம். சொக்கநாதர் ஓடி ஓடி அவளது தேவைகளை நிறைவேற்றினார். பலவாறு முயன்றும் அவளது கால் ஒன்று அகற்றப்படுவதை தடுக்க முடியவில்லை.

ஆதவன் உச்சத்திற்கு வந்துவிட்டான். மதிய போசனத்திற்காக செல்லம்மா சில ஆயத்த நடவடிக்கைகளை செய்திருந்தாள். மரக்கறி, பச்சைமிளகாய், வெங்காயம், பழப்புளி, உப்பு, தூள் என்று எல்லாமே தயார் நிலையில் இருந்தால் சமையல் வேலை பெரிய பொருட்டல்லதான்.!

செல்லம்மா ஒரு நாள், மேசையில் பொருத்தப்பட்டிருந்த 'தேங்காய் துருவியில் ' தேங்காயை அழுத்தி துருவ முனைந்தபோது சக்கர நாற்காலியின் சில்லொன்று வழுக்கியதால் அவள் தூக்கி எறியப்பட்டாள். அன்று அன்பின் நிமித்தம் சொக்கநாதர் அவளை சற்று கடுமையான வார்த்தைகளால் சாடித்தான் விட்டார். அதன் பின் அப்படியான கடும் வேலைகளை தான் தான் செய்வேன் என அவர் பிடிவாதமாக இருந்தார்.

கடந்த இரு வருட காலங்கள் அவரை சில கருமங்களுக்கு தயார் செய்து விட்டிருந்தது. செல்லம்மாவின் ஒத்துழைப்பும் இருந்ததால் வீட்டுக்கருமங்கள் சுமூகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மதிய உணவு தயாராகி விட்டது. அவற்றை மேசைக்கு எடுத்தார் சொக்கநாதர். சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே செல்லம்மா உணவு பரிமாறினாள்.

வாழ்க்கையில் துன்பம் என்று ஒன்று பதிவு செய்யப்பட்டு விட்டால் நடைமுறை வாழ்க்கை சுவைக்காது. அனைத்தும் இருந்தும் அனைத்து உறவுமுறைகள் இருந்தும் வெறுமையைத் தவிர்ப்பது எப்படி என்ற கேள்விதான் எஞ்சி நிற்கும். சமாதானம் அனைத்தும் வெகுதூரம் போய் விடும்.

மதிய உணவு அருந்திய கையுடனேயே சொக்கநாதர் பாத்திரங்களைக் கழுவி எடுத்து அடுக்கி வைத்தார். எஞ்சிய உணவினை குளிரூட்டியில் இட்டார். பிறகு என்று ஒரு கருமத்தை அவர் என்றுமே ஒத்திப்போடுவதில்லை. வழக்கப்படி மதிய போசனத்திற்குப் பின்னர் இருவருமே ஒரு தூக்கம் போட்டு எழுந்தனர். அது அவர்கள் இழந்த சக்தியை மீட்பதற்கு உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கநாதர் வெயிலில் நன்கு உலர்ந்துவிட்ட ஆடைகளை எடுத்து அலுமாரியில் மடித்து வைத்தார்.

அந்த நேரம் தொலைபேசி அழைப்பு வந்தது.....

'சொக்கர்...நான் ராசன் பேசுறன்....?

'ஓம் சொல்லுங்கோ.... சொல்லுங்கோ....?'

'உம்முடைய மனைவியின்ரை அண்ணரும் பெண்சாதிக்காரியும் அவுஸ்திரேலியாவிலிருந்து வந்து என்னுடைய வீட்டிலை நிக்கினம். உம்முடைய வீடு தெரியாததால் என்னைத்தான் காட்டச் சொல்லி கேட்டு இஞ்சை வந்தவை. நான் குறிப்புச்சொல்லியிருக்கிறன். பொழுதுபட ஆறுமணிக்கு உங்கட வீட்டை வந்து விடுவினம்'

'சரி சரி அவையை வரச் சொல்லுங்கோ.... நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறம் '

செல்லம்மாவுக்கு நல்ல சந்தோசம். அண்ணை வாறார்...!

செல்லம்மா சக்கர நாற்காலியில் மீண்டும் மண்டபத்திற்கு வந்து விட்டார்.

'இஞ்சருங்கோ.... இப்ப நாலுமணி. இரண்டு மணித்தியாலத் துக்குள்ளை சாப்பாட்டை தயார் செய்து வச்சாத்தான் நல்லது. அவையள் எங்களைப்போல ' சைவம் ' சாப்பிட மாட்டினம். நீங்கள் ஓடிப்போய் கோழி இறைச்சி இரண்டு கிலோ... முட்டை... 'ஐஸ் கிறீம்' எல்லாம் வாங்கி வாங்கோ. மற்ற எல்லாச் சாமான்களும் கிடக்குத்தானே? ஓ..... பட்டரை சொல்ல மறந்து போனேன். பழவகை யையும் மறந்து போனேன். வாழைப்பழம் வேண்டாம். அன்னாசி வாங்கி வாங்கோ. திராட்சையும் பரவாயில்லை. அவையள் எங்களோட நிற்க மாட்டினம். 'ஹோட்டலல' தான் நிற்பினம். அந்த சாப்பாட்டுக்கு சோடை போகக் கூடாதெல்லோ.... கெதியாய் ஓடிப் போங்கோ.....'

சொக்கநாதர் அசந்து போனார். தனது உந்துருளியை தள்ளி எடுத்துக் கொண்டு 'சுப்பர் மாக்கற்றுக்கு' ஓடினார். அனைத்துப் பொருட்களையும் சேகரித்தார். 'கிறடிக் காட்டில்' பணத்தை செலுத்தினார். அரை மணித்தியாலத்துக்குள் செல்லம்மா முன்னால் ஆஜராகினார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாவின் சக்கர நாற்காலி பம்பரம் போல் சுழன்றது.

'என்னப்பா யோசிச்சுக் கொண்டு நிக்கிறியள், 'கரட்டையும்' மற்ற மரக்கறிகளையும் என்னட்டத்தாங்கோ. நீங்கள் கோழி இறைச்சியை துண்டு துண்டாய் வெட்டுங்கோ.... நாங்கள் மச்சம் சாப்பிடாட்டி என்னப்பா... அவையள் சாப்பிடுவினம். பிரட்டலாய் வைப்பம். அரிசி மாவை தாங்கோ, இடியப்பத்துக்கு பதமாய் குழைச்சுத்தாறன். நீங்கள் பிளியுங்கோ.'

சொக்கநாதர் தான் ஓய்வு பெற்ற அரச ஊழியர் என்ற ஞாபகமே இல்லாமல் ஓடி ஓடி செல்லம்மாவின் கட்டளைகளை நிறைவேற்றினார்

இடியப்ப புரியாணி, கோழி இறைச்சிபிரட்டல் , பழவகை அனைத்துமே மேசைக்கு வந்துவிட்டது.

சொக்கநாதர் வியர்வையில் தோய்ந்துவிட்டார். சிறிது களையாறிக் கொண்டு குளித்து ஆடைமாற்றிக் கொண்டார்.

செல்லம்மாவுக்கு கவலையாகத்தான் இருந்தது

'என்னப்பா செய்யிறது .... சொந்த அண்ணையெல்லோ... என்னாலை முடியுமெண்டால் உங்களைத் தொந்தரவு செய்வேனா....'

தொலைபேசியில் கூறியபடியே அவர்கள் மாலை ஆறு மணிக்கெல்லாம் வந்துவிட்டார்கள்.

செல்லம்மாவின் அண்ணன் ஓடிவந்து சகோதரியை அணைத்தபடி....

'உனக்கு இப்படி ஒரு நிலை வரவேணுமா....' என்று கூறி கதறி அழுதார். செல்லம்மாவும் தனது இன்றைய நிலையை எண்ணி அழுதாள்.

சொக்கநாதர் கவலையடைந்தவராய் ஒரு மூலையில் போடப்பட்ட கதிரையில் அமர்ந்திருந்தார்.

அவுஸ்திரேலிய நாட்டுப் புதினங்கள்... இலங்கைப்பிரச்சனை... ஒப்புக்கு சில உபசார வார்த்தைகள்.... என்று கதை நீடித்தது

இரவுச்சாப்பாடு வெகு பிரம்மாதம் என்று பாராட்டும் பெற்றது. என்னதான் செய்தாலும் தேங்காய்ப்பாலும் மிளகாய்த்தூளும் எமது சமையலுக்கு அலாதியானதொரு ருசியை ஊட்டிவிடும் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மாவுக்கு கால் ஒன்று பொருத்துவதற்கு தம்மால் உதவி செய்ய முடியும் என்று அவளது அண்ணி உறுதியளித்தாள்.

அன்றிரவு தங்களுடனேயே தங்க வேண்டும் என்று செல்லம்மா வற்புறுத்தினாள்.

குளிரூட்டி வசதியில்லாமல் தம்மால் தூங்க முடியாது என கூறி தம்பதிகள் மறுத்துவிட்டனர்.

அவர்கள் விடைபெற்றுச் செல்லும் போது நேரம் பத்து மணியாகிவிட்டது.

செல்லம்மா அந்த நாள் நடந்தேறிய சம்பவங்களையெல்லாம் நினைவு கூர்ந்தாள். அவை அவளுக்கு திருப்தி அளிப்பனவாக இருந்தன. உடற்சோர்வு உறுத்தியதனால் கணவனுக்காக காத்திராமல் தனது படுக்கைக்கு சென்று விட்டாள்.

சொக்கநாதர் சாப்பாட்டு மேசையை ஒதுக்கி மேசைவிரிப்பை சுத்தம் செய்தார். எஞ்சிய அசைவ உணவுகளை வெளியே கொட்டினார். பாத்திரங்களை 'விம்' போட்டு நன்றாக கழுவி எடுத்தார். மண்டபத்தை 'மொப்' பண்ணி துலங்கச் செய்தார்.

சொக்கநாதர் நன்றாகத்தான் களைத்துவிட்டார். சிறிது சுடுநீர் வைத்து அலுப்பு நீங்க நீராடினார். 'பனடோல்' வில்லைகள் இரண்டினை பருகினார்.

வீட்டின் கதவு, ஜன்னல் அனைத்தையும் பூட்டி 'நைற் லாம்ப் ' தவிர ஏனைய அனைத்து மின் விளக்குகளையும் அணைத்த பின்னர் தனது கட்டிலுக்குச் சென்றார்.

செல்லம்மா தூக்கம் வராமல் கட்டிலில் உழல்வது புரிந்தது.

களை நிமித்தம் சொக்கநாதர் புரண்டு புரண்டு படுத்தார். அப்படியான நேரங்களில் செல்லம்மா அவரது பாதங்களை அழுத்திவிட்டால் அவர் ஒரு கணத்தில் தூங்கி விடுவார். அது வெறுமனே அந்தநாள் ஞாபகம் மட்டுமே....

சொக்கநாதர் தனது மன உழைச்சலை ஆற்ற முடியாமல் கூறினார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செல்லம்மா.... விபத்துக்கு பிறகு என்றில்லாமல் விபத்துக்கு முதலிலேயே நீ எனக்கு செய்து வந்ததொரு பணியை நிறுத்தி விட்டாய்...'

அவரது குரல் தள தளத்தது.... அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை.

செல்லம்மா, அது என்ன என்று கேட்கவில்லை கணவர் களை நிமித்தம் தூங்க முடியாமல் உழன்றால் அவர் தூங்கும் வரையில் அவர் பாதங்களை அழுத்தி விடுவாள்.

அந்த நினைவு இப்போ தூண்டப்படவும் அவளது சிந்தனை ஓட்டம் பின் நோக்கி நகர்ந்தது... 'நிகழ்காலத்தில் வாழ்தல்' என்ற இலட்சியத்தை மறந்தாள்... இதயம் வேகமாக அடித்தது.... அவை வார்த்தையாக வெளிப்பட்டபோது அவளது ஆழ் மனம் பயங்கர உருக்கொண்டு உறுமியது!

'நான் தடுத்தும் கேளாமல் நீங்கள் அந்த அயல் வீட்டு சிறுக்கியுடன் என் கண்காண, காது கேட்க கதை பேசி சிரித்தீர்கள்... அந்த நாளையும் அந்த சம்பவத்தையும் அண்டைக்கும் இண்டைக்கும் நான் மறக்கேல்லை... இனி மேலும் மறக்க மாட்டன்....!

சொக்கநாதர் அதிர்ந்தே விட்டார்... நீண்டதொரு உள்மூச்சினை இழுத்தார்.. அது உஷ்ணக் காற்றாக வெளியேறிய போது... அனேகமாக அவரை தூக்கம் ஆட்கொண்டு விட்டது...

நேர காலத்துடன் தூங்கினால்தான் அதிகாலை மூன்று மணிக்கு அவருக்கு நிஷ்டை கைகூடும் !

தினக்குரல் - 02.நவ.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# அக்கினி பூக்கள்.

அது ஒரு காலம்...! கிளிநொச்சி நகரம் ஸ்ரீலங்காவின் ஒரு சில நகரங்கள் தவிர்ந்த ஏனைய நகரங்களுடன் போட்டி போட்டு முன்னேறிக்கொண்டிருந்தது.... இரணைமடு சந்தியில் இருந்து பரந்தன் வரையிலும் வீதியோரம் இரு மருங்கிலும் கடைகளும் ஏனையகட்டிடங்களும் கம்பீரமாக எழுந்து நின்று காட்சி அளித்துக்கொண்டிருந்தன. சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்ததால் கொழும்பு கண்டி போன்ற தூர இடங்களில் இருந்து கூட வாகனங்கள் முண்டியடித்துக்கொண்டு பிரயாணத்தை மேற்கொண்டிருந்தன. சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களுக்கு சரி நிகராக சுற்றுலாக்களை விரும்பி மேற் கொண்டிருந்தனர்...

வாகன நெரிசல் காலி வீதியை விஞ்சும் அளவிற்கு அதிகரித்திருந்தது. தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சீருடை அணிந்து வாகன போக்குவரத்து விதிகளை அமுல்படுத்திக்கொண்டிருந்தமை கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. அவர்களில் நானும் ஒருத்தியாக...

அப்பா கால் வாதத்தால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த தாலும் அண்ணன் மாவீரனாகிவிட்டதாலும். அக்கா திருமணமாகியிருந்ததாலும் என்னையும் தங்கையையும் உள்ளடக்கிய எமது குடும்பம் வருமானம் ஏதும் இன்றி நிர்க்கதியான நிலையில் இருந்தது. அக்காவின் கணவன் வெளிநாட்டில் இருந்தான், தங்கை பாடசாலை போய்கொண்டிருந்தாள். வருகிற வருடம் உயர்தரம் எழுத உள்ளாள்

அண்ணாவின் நண்பர்கள் எமது பரிதாப நிலையை அவதானித்து எனக்கு அந்த வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தார்கள்.

நான் கருமையாக இருந்தாலும் எனது கூரிய மூக்கும் வட்ட முகத்தில் அமைந்திருந்த செம்மையான நாடியும் எனக்கு கவர்ச்சியைக் கொடுத்தது. சின்னஞ்சிறிய இடையும் சிறிது பருத்த தொடையும் என்னை அழகு படுத்திக்காட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் மகிழ்ச்சியுடன் வீதி போக்குவரத்து விதிமுறைகளை கண்காணித்ததுடன் எனது தங்கையின் படிப்புக்கும் ஊக்கம் ஊட்டினேன். அப்பாவுக்கு தேவையான மாத்திரைகளை பெற்றுக்கொடுத்ததால் அவரும் எழும்பி நடமாடினார்.

பேருந்து நிலையத்தை அண்டியிருந்த ஒரு வெதுப்பகத்துக்கு முன்பாக அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டன. அதற்கான காரணத்தை சுயமாக எழுதி சமர்ப்பித்ததால் எனது திறமை மேலிடத்தால் பாராட்டப்பட்டதுடன் பதவி உயர்வும் சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட்டது.

தமிழ் மக்கள் கற்பனை பண்ணியிருந்த சுதந்திரத்தினையும் சுபீட்சத்தையும் நிதர்சனமாக்கிய அக்கோட்டை சுக்கு நூறாக சிதற... பலர் சதி செய்தார்கள்... காட்டிக்கொடுப்புக்கள் .... நம்பிக்கை துரோகங்கள்...

பாசமுள்ள மனைவி... ஆசைமிகு பிள்ளைகள்... சேகரித்த மாட மாளிகைகள், சொத்துக்கள் ஆகியவற்றின் மேல் போராளிகளுக்கு ஏற்பட்டிருந்த அதீத பற்று, போராட்டம் மீதான மன ஒருமைப்பாட்டைத் தகர்த்து விட்டிருந்தது.

ஏவுகணைகளும் விமான குண்டு வீச்சுக்களும் தமிழர் தம் நாகரீகம் என்று போற்றத்தக்க எமது நகரங்களை தகர்க்கத் தொடங்கின...

இந்துக்கோயிலுக்கு அண்மித்ததாக பரவிப்பாஞ்சான் ஒழுங்கையில் அமைந்திருந்த எமது இல்லத்தில் இருந்து மக்களுடன் மக்களாக தோள்களில் சுமையையும் மனத்தில் கவலையையும் தாங்கியபடி புறப்பட்டோம்.

விசுவமடு, உடையார்கட்டு, தேவிபுரம், சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம், பொக்கணை என நடைப்பயணம் மேற்கொண்டு முள்ளி வாய்காலை அடைந்தோம்.

மாவீரனான எனது அண்ணையின் செல்வாக்கோ எனது பதவிக்கான அனுதாபமோ கைவிட்டுப்போய் பல நாட்களாயின...

அப்பாவின் கைகளில் ஒரு மண்வெட்டியும் பிக்கானும்தான் எஞ்சியிருந்தன. பகல் பூராகவும் நடை.... மாலையில் சேரும் இடங்களில் திடீர் 'பங்கர்களை' அனைவரும் சேர்ந்து அமைப்பது ஒன்றே எமது உயிருக்கான உத்தரவாதமாக இருந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்காலில் மீண்டும் போராளிகளை சந்தித்தோம்... சுதந்திரத்தை பெற்றுத்தரப்போவதாக உறுதியளித்திருந்த அவர்கள் எமக்கு உயிராபத்து நேர்ந்த நிலையில் இன்னும் இன்னும் கட்டுப்பாடுகளை விதித்தார்கள்.

தப்பியோட முனைந்த மக்களை சுதந்திரத்தை முன்னிறுத்தி தடுத்தார்கள்...

கடற்கரையில், காலை கடனை முடிப்பதற்காக பொழுது புலரும் முன்னரே பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள்வர். ஆண் பெண் முதியோர், சிறியோர் என்ற பேதமின்றி அனைவரும் முண்டியடித்தனர்.

இயற்கைத் தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு எமது சுதந்திர போராட்டம் எப்படி படுபாதாளத்திற்கு இட்டுச் செல்லப்பட்டது என்று எண்ணி நான் அழுதேன்...

யாரும் யாரையும் பற்றி கவலை கொள்ள முடியாத அளவுக்கு அந்த சிறிய இடம் தகர்ந்து கொண்டிருக்க, ஒரு நாள் இரவு அக்காவும் நானும் அப்பாவை கைத்தாங்கலாக தூக்கியபடி காட்டுப்பாதைகளால் நடக்கத் தொடங்கினோம்...தங்கை அழுதபடி பின்னால் வந்தாள்... இடையிடையே மக்கள் கூட்டம் கூட்டமாக சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கென்றாற்போல் பாதை தெரிந்துகொண்டு செல்கின்றார்கள் என்றில்லை. துரத்துபவனிடமிருந்து ஓடுவதே அவர்களுடைய ஒரே நோக்கம்!

பரவிப்பாஞ்சானில் எங்கள் வீடு தரைமட்டமாகியிருந்தது. அதை விட இராணுவம் அப்பிரதேசத்தை கைப்பற்றியிருந்தது...

உருத்திரபுரத்தில் அப்பாவுக்கு கால் ஏக்கர் அளவில் ஒரு மேட்டு நிலம் இருந்தது.

இடம் பெயர்ந்தவர்களுக்கு வீட்டுத்திட்டதின் கீழ் இந்திய அதிகாரிகள் நிதி உதவி செய்ய நாங்களும் ஒரு வசதியான கல் வீட்டை கட்டி அதில் குடிபோக முடிந்தது.

அக்காவின் அத்தானுக்கு இப்போ பிரான்சில் நல்ல தொழில் வாய்ப்பு கிடைத்திருந்தது. இரண்டு ' சிப்ட்' சுதந்திரமாக வேலை செய்ய முடிந்தது.

மீண்டும்... இரணைமடுச்சந்தியில் இருந்து பரந்தன் வரையிலும் வீதியோரம் இரு மருங்கிலும் கடைகளும் ஏனைய கட்டிடங்களும் கம்பீரமாக எழுந்து நின்று காட்சியளித்துக்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள பொலிஸ் படை போக்குவரத்து கட்டுப்பாடுகளை கண்காணித்துக்கொண்டிருந்தது. எனதும் எனது நண்பிகளின் இடத்திலும் சிங்கள கிராமத்துப் பெண்கள் கடமை மேற்கொண்டிருந்தனர். அம் மகளிர் புதிதாக கிராமங்களிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு கடமைகளுக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள்....

போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரிகள் அப் பெண்களை கிண்டல் செய்யும் போதெல்லாம் அவர்களது முகம் சிவந்து நாணுவது பார்ப்பதற்கு கிளர்ச்சி ஊட்டுவதாக இருந்தது.

எங்கடை பெடியள் எங்களுடன் எப்படி நாகரீகமாக நடந்து கொள்வார்கள் என்று நினைத்துப்பார்க்கும் போது பெருமையாக உள்ளது.

இளம் சிங்கள அதிகாரிகள் தமிழ் பெண்கள் உந்துருளிகளில் வரும் போது கட்டாயமாக மறித்து பரிசீலிப்பார்கள். அப்போதெல்லாம் அப் பெண்கள் வாகன வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஒன்றையேனும் சமர்ப்பிக்க தவறினால் அதிகாரிகளுக்கு குஷி ஏற்பட்டு விடும். அதை வைத்துக்கொண்டே அப் பெண்ணின் குடும்ப விபரங்களையெல்லாம் விசாரிப்பார்கள். எவளாவது விவாகம் செய்து புருஷன் வெளிநாட்டில் என்றால் அதிகாரிகளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகிவிடும்.

அப்போது அவர்களது ' சில்மிஷம்' களுக்கு சிங்கள பெண்கள் வழங்கும் விட்டுக்கொடுப்பும் ஆதரவும் இருக்கிறதே... அது அபாரம்... அபாரம்...! அந்த இரசனையை அனுபவித்தவர்கள் தான் புரிந்து கொள்ள முடியும்!

அக்காவுக்கு அத்தான் இப்போ ஒழுங்காக பணம் அனுப்புவதுடன் எனக்கு ஒரு தொழில் கிடைக்கும் வரை எமது செலவுக்கும் மேலதிகமாக அனுப்புவார். அக் காசு அப்பா, நான், தங்கை மூவருக்கும் அபரிமிதமாக போதும்!

நாங்கள் எல்லோருமே அக்காவை தலைமேல் தூக்கிவைத்து கொண்டாடினோம்.

சில மாதங்களுக்கு முன்னர் அத்தான் கைப்பேசியில் அக்காவுக்கு உந்துருளி ஒன்று பார்க்கும்படியும் தான் பணம் அனுப்புவதாகவும் கூறியிருந்தார். மேலும் விலையைப்பற்றி யோசிக்கவேண்டாம். என்றும் கூறியிருந்தார். நல்ல வகை உந்துருளியாக பார்க்கும் படியும் கூறியிருந்தது அக்காவை கொஞ்சம் தலைக்கனம் பிடிக்குமளவுக்கு உயர்த்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவில் சில வித்தியாசங்களை நான் அவதானிக்க கூடியதாக இருந்தாலும் எங்கள் மீதான அவளது அன்பில் ஒரு ‘ காரட்’ கூட குறையவில்லை.

‘ஹீரோ கொண்டாவில்’ ‘ பிளெசர்’ வகையை சேர்ந்த ஊதா நிற உந்துருளி ஒன்றை அவள் வாங்கினாள்.

ஏற்கனவே அவளோ நானோ துவிச்சக்கர வண்டி ஓட்டுவதில் மிகவும் கைதேர்ந்தவர்களாக இருந்ததால் உந்துருளி மீது ஒருவர் அமர மற்றவர் பின்னால் தள்ளி ‘ ரயல்’ பார்த்தோம் அதில் எந்த பிரச்சனையும் இல்லை...

உந்துருளியும் ‘ செல்ப் ஸ்ராட்’ என்பதுடன் ‘கியர்’ அமைப்பும் இலகுபடுத்தப்பட்டிருந்தது.

இருவரும் சேர்ந்து விரைவிலேயே உந்துருளியை ஓட்ட கற்றுக்கொண்டோம். அதிலும் அக்காளுக்கு உந்துருளி ஓட்டுவது ஒரு கலையாக அமைந்துவிட்டது.

இப்போதெல்லாம் எங்கள் வீட்டுத்தேவைகளை உந்துருளியின் உதவியுடனேயே மேற்கொள்ள கூடியதாக உள்ளது. நானோ அக்காவோ தங்கையை பாடசாலைக்கு அழைத்துச்செல்வதும் கூட்டி வருவதும் நாளாந்த விடயமாகிவிட்டது.

அப்பாவுக்கு பெரும் ஆறுதல். இடையிடையே தமிழ் மக்களின் விதியை பற்றி பிரஸ்தாபிப்பார். தமிழ் மக்களின் விழுமியங்களை விதந்து பேசுவார்.

அவரது காலத்தில் திரையரங்குகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு வரிசைகளில் ஆசனங்கள் போடப்பட்டிருக்கும். தமிழ் கிராமங்களுக்கு புதிதாக நியமனம் பெற்று வரும் சிங்கள ‘ பொலிஸார்’ அதனை அலட்சியம் செய்து பெண்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் வரிசையில் போய் அமர்வார்களாம். மாற்றாரின் வாடை கூட எங்கள் தமிழ் குமரிகள் மேல் படக்கூடாது என உறுதிபூண்ட தமிழ் இளைஞர்கள் தான் முதலில் போராட்டத்தை ஆரம்பித்தார்களாம்!

இன்று எங்கள் தமிழ் பெண்களுக்கு நேர்ந்து விட்ட கதியை ஒப்பு நோக்கும் போது சிரிப்பதா அழுவதா என்று கூட புரியவில்லை.

ஒரு நாள் அக்காள் உந்துருளியில் எங்கோ சென்று விட்டு திரும்பிய போது அவளது முகமும் உடலும் சோர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளை தனியே அழைத்துச்சென்று விசாரித்தேன்...

அவள் நகருக்கு சென்றுவிட்டு திரும்பிய போது உருத்திரபுரமும் பிரதான தெருவும் சந்திக்குமிடத்தில் எதிர்பாராத விதமாக பொலிஸார் வாகனங்களையும் அனுமதிப்பத்திரங்களையும் பரீட்சித்துக் கொண்டிருந்தார்கள்....

அக்காவுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்திற்குரிய 'ரயல்' முடியாததால் அவள் 'எல் போர்ட்' போட்டு ஓடுவது தவறு என்று கூறி இளம் 'ராபிக் சார்ஜன்ட்' ஒருவன் எழுத முற்பட்டிருக்கின்றான். அக்காள் பயந்து விட்டாள். எப்படியாவது எழுதாமல் தடுக்க வேண்டும் என்பதற்காக பலவாறு முயன்றிருக்கிறாள். இலஞ்சம் கொடுக்க முற்பட்டபோது அந்த 'சார்ஜன்' மறுத்துவிட்டான். தனக்கு கடமையில் இருக்கும் கண்ணியம் தான் பெரிது என்று சாதித்திருக்கின்றான்.

அக்காளும் விடவில்லை... தனது கணவன் வெளிநாட்டில் இருப்பதாகவும் குடும்பத்தில் ஆண் துணை இல்லாததாலும் தயைவு காட்டும்படியும் மன்றாடியிருக்கின்றாள்.

அதனால் 'சார்ஜன்' மனமிரங்கி தனது பெயர் கருணாதிலக என்றும், தான் ஒரு பிரமச்சாரி என்றும் பயப்படவேண்டாம் என்றும் ஆறுதல் கூறி தனது கைபேசி எண்ணையும் கொடுத்து உதவி தேவையான நேரங்களில் தன்னை தொடர்பு கொள்ளுமாறு கூறி அனுப்பியுள்ளான்.

அந்த நடுக்கம் தான் அக்காவின் சோர்வுக்கு காரணம்...

அதில் அக்கா எனக்கு கூறாமல் தவிர்த்த இரண்டு விடயங்களில் ஒன்று எமது வீட்டுவிலாசத்தை அவனுக்கு தெரிவித்தது... மற்றது அவளது கைப்பேசி இலக்கத்தையும் கொடுத்துவிட்டது!

அதன் பலனாக ஒரு நாள் கருணதிலக்க எங்கள் வீட்டுக்கு வருகை தந்தமை எனக்கும் அப்பாவுக்கும் அதிர்ச்சி தரும் சம்பவமாக அமைந்து விட்டது.

அக்கா அவனை வரவேற்று உபசரித்த போது அவனுக்கு எதிராக தான் அமர்வது மற்றவர்களுக்கு அசாதாரணமாக இருக்ககூடாது என்பதற்காக என்னையும் தன்அருகாக அமர்த்திக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த உரையாடலில் எனக்கு வெளிப்பட்ட மற்றொரு மறைக்கப்பட்ட உண்மை அக்காள் பல சமயங்களில் அவனை சந்தித்திருக்கின்றாள் என்பது.

அப்பாவுக்கு அச் சம்பவம் அதிர்ச்சி தரும் என்றாலும் அவர் முன்னைய வலிமையை இழந்திருந்தார்.

ஆனாலும் தான் ஊன்றி நடக்க பயன்படுத்தும் கைத்தடியால் சடார்.. என அருகாக இருந்த கதவொன்றுக்கு பலமாக அடித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

அவன் கண்டியை சேர்ந்த இளைஞன் . கம்பீரமாக இருந்தான் தனது சகோதரிகள் அழகாகவும் எடுப்பாகவும் இருப்பார்கள் என்றும் கவர்ச்சியாக உடையணிவார்கள் என்றும் பெருமை பேசினான்.

எனது அழகை அவன் பொருட்படுத்தவில்லை என்பது புரிந்தது. ஆனால் எனது அக்காளும் தங்கையும் நிறத்தாலும் அழகாலும் எவருக்கும் சோடை போபவர்களாக இருக்க முடியாது.

அக்காளுக்கும் எனக்கும் இடையில் ஒரு கருத்து வெற்றிடம் கருக்கொண்டுவிட்டது...

அக்கா ஏன் கருணாதிலக்கவை சந்திக்கிறாள்..? ஏன் அதை எனக்கு மறைக்கிறாள்...?

மறுதினம் எதிர்பாராதவிதமாக அக்காவின் தோழி ஒருத்தி அக்காவை தேடி வந்தாள். உண்மையில் அக்காவின் உதவி அவளுக்கு தேவைப்பட்டது.

தான் உந்துருளி ஓட்டிவரும்போது 'ட்ரபிக் பொலிஸார்" காப்புறுதி இல்லாததற்காக எழுதிவிட்டார்கள் என்றும் அதுவும் அது நீதி மன்ற விசாரணைக்கு போகும் குற்றமாகையால் தனக்கு பயமாக இருப்பதாகவும், அக்காவின் செல்வாக்கை பயன்படுத்தி எப்படியாவது வழக்கை இல்லாமல் செய்து தருமாறும் கேட்டு விம்மி விம்மி அழுதாள்.

அக்கா பற்றி அவள் கூறிய விடயங்கள் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பா தனது கைத்தடியால் கதவொன்றினை ஓங்கி அறைவது கேட்கிறது. அக்காவுக்கு அப்படி என்ன செல்வாக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலுக்கு அக்கா அவளுக்கு ஆறுதல் கூறினாள்.

தனது தொலைபேசியை எடுத்து கருணதிலகவுடன் தொடர்புகொண்டாள். ஒரு தேவையை முன்னிட்டு அவனை உடனே சந்திக்கவேண்டும் என்று கூறி... அவனை எங்கு சந்திக்கலாம் என்று கேட்டும் தெரிந்துகொண்டாள்.

பின்னர் தனது தோழியையும் உந்துருளியில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டாள். தோழிக்கு முகம் விடிந்தது.

அக்காவில் அவ்வளவு நம்பிக்கை!

கருணாதிலகவிடம் அக்கா உதவி பெற பெற அவன் வீட்டுக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களும் அதிகரித்தது.

ஆனால் அவனைப் பற்றி அக்கா அத்தானுக்கு மூச்சும் விடாமல் இருப்பது எனக்கு அசாதாரணமாக இருந்தது.

கருணாதிலகவை எப்படியாவது வீட்டுக்கு வராமல் செய்ய வேண்டும் என எண்ணினேன்...

இரண்டு குமர்கள் வீட்டில் இருக்க அக்கா பொறுப்பில்லாமல் நடப்பதாக அப்பா ஒரு நாள் குற்றம் சாட்டினார்.

சாரதி அனுமதிப்பத்திரம் வந்த பின்னரும் அக்காவுக்கு கருணாதிலகவின் சிநேகிதம் எதற்கு என்று வினவினார்....

அப்பாவின் சந்தேகம் நியாயம் என்பதில் ஐயம் இல்லை.

கருணதிலகவை நான் விலக்கி நடந்தேன். ஆனாலும் அக்காவுடன் அவன் தகாத முறையில் நடப்பதாக என்னால் ஒரு சமயத்திலும் அனுமானிக்க முடியவில்லை.

தங்கைக்கு புத்தி கூறுவான், கவனமாக படித்து 'கம்பஸ்' போக வேண்டும் என்று உற்சாகப்படுத்துவான்.

சில சமயங்களில் 'கன்டொஸ்' போன்ற சிறு சிறு அன்பளிப்புக்களைக் கொடுப்பான்.

அந்நேரங்களில் எல்லாம் அப்பா கொதித்தெழும்புவார். ஆனால் அவர் வலிமையற்றிருந்தார். அடிவாங்கி அடிவாங்கி கதவும் ஆட்டம் கண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை அக்காவின் ' பாஸ் போட் ' சம்பந்தமாக அவள் கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. யாழ்பாணத்தில் இருந்து இரவு தனியார் பஸ்ஸில் வரும் நண்பி, அக்காவுக்கும் ' சீற் புக்' பண்ணி வர ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நான் உரிய நேரத்துக்கு உந்துருளி மூலம் அக்காவை பேரூந்து நிலையத்திற்கு இட்டுச்சென்றேன்.

அக்கா கொழும்பில் தங்கியிருந்த மூன்று தினங்கள் கருணதிலக வீட்டுக்கு வரவில்லை...

முன்னர் அக்காவிடம் உதவி பெற வந்த தோழி வந்திருந்தாள். அக்கா கொழும்பு சென்றுவிட்டதாக கூறியதும் அதிர்ந்து விட்டாள்...

என்னை முற்றத்தின் ஓரத்திற்கு அழைத்துச்சென்றாள். மரநிழலில் அமர்ந்தோம்.

அக்கா கொழும்பு செல்லவேண்டியதன் அவசியம் பற்றி துருவி துருவி விசாரித்தாள். பின்னர்...

'நான் உங்கடை அக்கா எனக்கு செய்த உதவிக்கு அவாவை நேரிலை சந்தித்து நன்றி கூறத்தான் வந்தனான்... நீர் என்ரை தங்கச்சி மாதிரி... ஆனபடியால் மனம் திறந்து சொல்லுறன்... எங்கடை தமிழ் பெடிச்சிகள் சிலரின்ரை இப்படியான சினேகிதங்களாலைதான் தமிழருடைய கலாச்சாரம் பற்றின ஐயம் சர்வதேசத்துக்கும் ஏற்பட வழிவகுத்தது... தங்கச்சி ... நம்பினால் நம்பும் என்ரை ஒரு சினேகிதி இதே சூழ்ச்சி வலையிலை விழுந்து ஒரு 'ட்ராபிக் சார்ஜனுடன்' சினேகிதம் ஆகினா. அவளின்ரை புருஷனும் வெளிநாட்டிலை . அது எல்லாத்துக்கும் வசதி பார்... அவன் இழுத்த பாட்டுக்கெல்லாம் அவா இழுபட்டா.. பல 'ரெஸ்ரோறண்டுகளை' பார்த்தா ஒரு நாள் அவனே 'செட்' பண்ணி தனது நண்பர்களை 'யுனி போர்மில் '' வரப்பண்ணி சட்ட விரோத செயலில் ஈடுபட்டீங்கள் என்று குற்றம் சாட்டி அவனை அடித்து விரட்டி விட்டு அவாவை அணுகிய போதுதான் அவா விழித்தா. தைரியத்தை வரவழைச்சுக்கொண்டு குளறிக்கொண்டு ஓடினதாலைதான் தப்பினா.'

எனக்கு தலை சுற்றியது. என்னதான் இருந்தாலும் அந்த நாட்களில் நான் போக்குவரத்து கண்காணிப்பு கடமைகளில் ஈடுபட்டிருக்கேக்கை எங்கடை தம்பிமார் எவ்வளவு கண்ணியத்தோடை நடந்தவங்கள். பொம்பிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் எங்களை எப்படி மதிச்சு எங்களுக்கு பெருமை சேர்த்தவங்கள். இண்டைக்கு எல்லாம் தலை கீழ்!

'ஏன் அக்கா... ஒரு சில தமிழ் பெடிச்சியள் இப்படி சூழ்ச்சி வலையிலை விழுகிறதுக்கு என்ன காரணம்? நான் வினாவினேன்.

'' எல்லாம் செல்வாக்கின் மீதுள்ள விருப்பம் எண்டு மட்டும் சொல்லேலாது. அதைவிட மோசமான ஒரு சமூகச் சீர்கேட்டுக்கான தூண்டு கோல் ஒண்டு அறிஞ்சும் அறியாமலும் நடக்குது. அது.'சீ.டி' வழியாயும் 'மொபைல் போன்' வழியாயும் போதைவஸ்துக்கள் வழியாகவும் எடுத்துச்செல்லப்படுகிறது...

எங்கடை தம்பிமார் மட்டும் இருந்தால் அதற்கான தண்டனை பாரதூரமாய். இருக்கும் ! நான் அழுத்திக்கூறினேன்.

'தங்கச்சி... தெரியும் தானே கசிப்புக்கும் போதைவஸ்த்துக்கும் அந்த நாட்கள்ளை வழங்கப்பட்ட மரண அடி... இண்டைக்கு நிலைமை தலை கீழ். அதாலை தான் களவும் , கொள்ளையும் தலைவிரிச்சாடுது...! எதுக்கும் அக்காவை கொஞ்சம் கட்டுப்படுத்துங்கோ.'

தோழி விடைபெற்றுச் சென்ற பின்னர் உந்துருளியை எடுத்துக்கொண்டுபோய் நகரில் ஒரு சுற்று சுற்றினேன்.

கருணதிலக வழமைபோலவே தனது கடமையில் ஈடுபட்டிருந்தான். என்னைக்கண்டதும் ஆர்வத்துடன் 'நங்கி' என்று கூவி அழைத்து ' பை' காட்டினான்.

எனக்கு அவன் மீதான பாசம் ஒரு கணம் பிரவாகித்து அடங்கியது. அக்காவும் வந்து விட்டாள்.

அவளது தோழி நன்றி கூறி சென்றது பற்றி தெரிவித்தேன்.

கருணதிலக்க இடையில் ஒரு நாள் வருகை தந்து சிங்கள தமிழ் புதுவருட பிறப்புக்காக தனது கிராமத்துக்கு செல்வதாகவும் வரும் போது 'கவும்'( பலகாரம் ) கொண்டு வருவதாகவும் கூறிச்சென்றான்.

நீண்ட நாள் 'லீவில்' நின்றுவிட்டு திரும்பியதும் நேரே எங்கள் வீட்டுக்கு தனது தங்கையுடன் வந்தான். தான் தங்குமிடத்தில் அவளை வைத்திருக்க முடியாதென்றும் அவளை எங்களுடன் விட்டுச்செல்வதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிச்சென்றான். நிறைய பலகாரங்களை பெற்றோர் எங்களுக்காக செய்தனுப்பியிருந்தனர்.

அவளது தங்கை மிகவும் கவர்ச்சியாக இருந்தாள். தமிழ் மொழி நன்றாக பேசினாள். பாசத்துடன் பழகினாள். எங்கள் தங்கையுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தாள்....

கருணதிலக தனது தங்கையை எங்களை நம்பி எங்களை மதித்து எங்களிடம் ஒப்படைத்தமை எனக்கு அக்காவினதும் கருணதிலகவினதும் நடத்தை மேல் நம்பிக்கையை உண்டுபண்ணியது. சர்வதேசமும் தமிழினத்தை கலாச்சார சீர்கேட்டுக்குட்பட்டுவிட்ட சமுதாயம் என குற்றம் சாட்டட்டும்!

எங்கள் சகோதர இனம் எங்கள் மேல் நம்பிக்கையும் மதிப்பும் வைக்கும் படி எம்மால் நடக்க முடிகின்றமைக்காக நாம் நிச்சயம் பெருமை கொள்வோம்.

அக்கா ஏதோ தையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள்... தங்கை வீட்டு பாடங்களை செய்து கொண்டிருந்தாள்..... நான் கருணதிலகவின் தங்கையிடம் கதைகள் கேட்டுக் கொண்டிருந்தேன்.... அவள் , ஆவலுடன் எனக்கு பதில் சொல்வதும் என்னை அணைத்து கொஞ்சுவதுமாக இருந்தவள் வராந்தா மூலையில் கைத்தடியுடன் அமர்ந்திருந்த அப்பாவை நோக்கி ஓடினாள்... பிள்ளைகள் எங்கள் மூவரினதும் பார்வை அவள் மீது திரும்பியது... அவள் பேசினாள்...

'தாத்தா ...உங்களை பற்றியும் உங்கள் பிள்ளைகள் பற்றியும் எனது அண்ணா எனது தாயருக்கு நிறைய கூறியிருக்கின்றார்... கஷ்டத்திலும் கலாச்சாரத்தை கடைப்பிடிக்கும் உங்களுடைய பெண் பிள்ளைகளை அவா மனதார நேசிக்கிறா. நான் சின்னப்பிள்ளை பேசுகிறேன் என்று நீங்கள் தப்பாக நினைக்ககூடாது... அம்மா உங்கடை இரண்டாவது மகளை தனது மகனுக்கு பெண் கேட்டுவரச் சொல்லித்தான் என்னை உங்களிடம் அனுப்பினவா!

நாங்கள் எல்லோருமே அதிர்ந்து விட்டோம்! அப்பா தனது கைத்தடியை நழுவவிட்டார். அவர் கண்களிலிருந்து நீர் சரமாரியாக பொழிந்தது...

அக்கா ஓடோடி சென்று அந்த சிங்கள சிறுமியை வாரி அணைத்துக் கொண்டாள்.

வீரகேசரி - 10.நவ.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

# சிறுபிள்ளைத்தனம்.

இப்போதெல்லாம் நான் காலையில் எழுந்து விழிப்பது எதிர்வீட்டு ஜன்னலில் தான். எனது இருபத்தியோராவது வயது வரை படிப்பு படிப்பு என்று இருந்தேனேயல்லாமல் காதல் என்றால் என்ன என்பதை உணராமல் இருந்தேன்.... தொழில் சார் இடமாற்றம் நிமித்தம் எனது எதிர்வீட்டுக்கு பெற்றோரும் மூன்று அழகு பதுமைகளும் என்று குடி வந்தார்களோ அன்று எனது மனம் என்ற குளத்தில் சிறிய கல் ஒன்று வந்து வீழ்ந்தது. உணர்வு அலைகள் பரவத்தொடங்கின. எனது உணர்வுகள் சிறகடித்து பறந்தது போன்ற தோற்றம் என்னுள் முகிழ்த்தது. எனது மனஆழத்தில் திவ்யா பதிந்துவிட்டாள்.

அரைத்தாவணியில் அவளது அங்க வளைவுகள் என்னை கிறங்கடிக்க வைத்தன...

தனது வீட்டின் நிலா முற்றத்தில் அவள் கையில் தினம் மலரும் ரோஜா மலர்களுடன் காந்திருந்தது எனக்காகத்தான் என்பதை உணர்ந்து கொள்ள எனக்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. அவளது துடிப்பும் படபடப்பும் அதற்கு இடமளிக்கவுமில்லை. சைகைகள் பல செய்து என்னை பேச்சுக்கு அழைத்தாள்...

நானும் மருண்டு விட்டேன்... அவளில் வீசிய நறுமணம் என்னை அவள்பால் கவர்ந்து இழுத்தது. அவளது ஆடைகளின் ஸ்பரிசமே என்னை மதிமயங்க வைத்தது. அவளது ஸ்பரிசத்துக்காக என்னை அர்ப்பணிக்கவே நான் சித்தமானேன்... அவள் அந்த குடும்பத்தில் இரண்டாவது பெண். மூத்தவளுக்கு ஊரில் விவாக பேச்சு நடந்து கொண்டிருந்தது.

திவ்யாவிற்கு எனது கம்பீரமும் நடை பாவனையும் மிகவும் பிடித்துவிட்டதாக கூறினாள்... உயர்தர பரீட்சையில் தனக்கு வெற்றி கிடைக்காததால் தான் தொழில் நுட்பகல்லூரியில் ஆங்கிலம் கற்க தீர்மானித்திருப்பதாக கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் எனது நிலைப்பாட்டை கூறினேன். குடும்பத்தில் நான் தனியொருவன். மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டி இருப்பதுடன் தொழிலையும் தேட வேண்டிய கட்டாயம் இருப்பதாக அவளுக்கு தெரிவித்தேன்.

தான் எத்தனை ஆண்டுகள் எனக்காக காத்திருக்கவேண்டி ஏற்பட்டாலும் பரவாயில்லை, என்னை அடையாவிட்டால் தன்வாழ்வு சூன்யமாகிவிடும் என்று கூறி உணர்ச்சி வசப்பட்டு விம்மி விம்மி அழுதாள். நான் அவள் மேல் உரிமை எடுத்துக்கொண்டு அவளது நாடியை உயர்த்தி கண்ணீரை துடைத்து விட்டேன்... அது அவளுக்கு பெரும் ஆறுதலாகவும் தைரியமாகவும் போய்விட்டது போலும்.... எனது இரு கரங்களையும் பற்றி தனது முகத்தில் ஒற்றிக்கொண்டாள்...

இன்று காலையில் நான் எழுந்ததும் எனது விழிகள் எதிர்வீட்டு நிலா முற்றத்தை துளாவியது... அது வெறுச்சோடிக்கிடந்தது. வீட்டின் கதவு பூட்டிக்கிடந்தது.

எனது கைப்பேசிக்கு ஒரு குறும் செய்தி வந்திருந்தது. 'நாம் ஊர் போகிறோம். விரைவில் திரும்பிவிடுவோம்' திவ்யாதான் அனுப்பியிருந்தாள். அவள் புறப்படும் போது என்னிடம். விடைபெறாதது எனக்கு பெரும் கவலையளிப்பதாக இருந்தது. காலையில் அவளை சந்திக்கமுடியாமல் போனது பெரும் ஏமாற்றமாகப் போனது. அதனாலேயே எனது இதயம் வலித்தது...

திவ்யா இலேசான பெண்ணல்ல. அவள் இலகுவில் எனது பெற்றோரை கவர்ந்துவிட்டாள்...

அம்மா அவள் மேல் பெரிதும் பிரியம் வைத்திருந்தாள்... நான் படிப்பு படிப்பு என்று இருந்ததாலும் திவ்யா வெறுமனே பதினெட்டு வயது நிரம்பிய சிறுமியாக எனது அன்னைக்கு தெரிந்ததாலும் எங்களை அவள் சோடி சேர்த்து பார்க்கவில்லை.

திவ்யாவின் துடுக்குத்தனம் அவளை மிகவும் கவர்ந்தது. எங்கள் வீட்டு மண்டபத்தில் கெந்தி விளையாடுவாள். அம்மாவுடன் தாயம் போட்டு விளையாடுவாள்... அதே நேரம் அம்மா சமையல் குளியலறை என்று போய்விட்டால் எனது அறையினுள் புகுந்து அட்டகாசம் புரிவாள். நான் மேசையில் எழுதிக்கொண்டிருந்தால் எனது இடது கையோரமாக மேசையில் சாய்ந்து கதைபேசிக்கொண்டிருப்பாள். எனக்கு ஆச்சரியமாக இருக்கும். இவளா என்னை விலைபேசி வாங்கினாள் என்று எண்ணுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளை அணைக்கும் தூரத்தில் அவள் நெருங்கி நெருங்கி வந்தாள். நான் அந்த தவறை செய்யவும் இல்லை. அவள் எதிர்பார்க்கவும் இல்லை.

அன்றே ஊரில் இருந்து அவள் தொலைபேசியில் தொடர்புகொண்டாள். தனது மூத்த சகோதரிக்கு விவாக பேச்சு நடைபெறுவதாகவும். பெண்பார்க்கும் படலம் முடிந்து நிச்சயதார்த்தம் முடிந்தால் தாம் ஊர்திரும்ப உள்ளதாகவும் அன்றே தான் என்னை வந்து சந்திப்பதாகவும் உறுதியளித்தாள்.

அன்றிரவு எனக்கு நீண்ட நேரம் தூக்கம் வரவில்லை. காதல் எனக்கு புது அனுபவம். ஒரு ஆணுக்கு பெண்ணின் தேவை எத்தகையது என்பதை உணர்த்துவது காதல்தான் என்பதை நான் இப்போது தான் புரிய ஆரம்பித்திருக்கின்றேன். திவ்யா என்னை சந்தித்ததும் தன்னை என்னிடம் ஒப்படைத்த அவளது துணிச்சலும்... என்னிடம் நெருங்கி பழகுவதும் எனக்கு திகிலூட்டுவதாக இருந்தது. இன்றோ தனது ஊரிற்கு சென்ற நிலையில் ஒரு மனைவி பொறுப்புடன் தனது நிலைப்பாடுகள் பற்றி கணவனுக்கு அறிவிப்பது போல உடனுக்குடன் தகவல் தருவது எனக்கு இனம் தெரியாத கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

அரைத் தூக்கத்தில் சென்றிருப்பேன். திவ்யா தாய் வீட்டில் இருந்து திரும்பும் மனைவிபோல ஒருகையில் கூடை நிறைந்த சாமானும் மறுகையில் பொதியுமாக என்னை தேடி எனது அறைக்கு வந்தாள். அதன் பின்னர் எனக்கு பொறுமை இல்லை... அவளை அணைத்துக்கொண்டேன். விடிய விடிய தூக்கம் வரவில்லை. அவள் நினைப்பாகவே இருந்தது.

மறுநாள் நானே அவளது கைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திக்கொண்டு கதைத்தேன். சகோதரியை பெண்பார்க்கும் படலம் முடிந்துவிட்டதாகவும் நிச்சயதார்த்தம் தள்ளிப்போவதாகவும். அப்பாவுக்கு விடுமுறை முடிந்துவிட்டதாகவும் மறுநாளே திரும்புவதாகவும் கூறினாள்.

திவ்யா பெரிதாக படிப்பில் சுட்டி இல்லை. ஆனால் அவளில் தன்னம்பிக்கை நிறைய இருந்தது. தனது அழகாலும் சாதுர்யத்தாலும் எதையும் சாதிக்கமுடியும் என்பது அவளுக்கு புரிந்திருந்தது. அவளது நினைவுகள் எனது மனதில் தடங்களை பதித்துக்கொண்டிருந்தன. எனது உள்ளத்தோடு அவளது உறவுகள் ஒட்டிக்கொண்டன. எனது வாழ்கையில் அவள் ஒரு பங்காளி என்பதை நான் உறுதிசெய்துகொண்டேன்.

அவள் வீட்டு நிலாமுற்றம் அவள் இல்லாமல் வெறிச்சோடிக்கிடந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வீட்டில் அவள் புரியும் அட்டகாசம் அடங்கியதால் அம்மா கூட சற்று சோர்வுடன் காணப்பட்டாள்.

மறுநாள் அவளிடம் இருந்து ஒரு குறும்செய்தி காத்திருந்தது. 'புறப்பட்டுவிட்டோம்'.

அவளை எதிர்பார்த்து நான் வீட்டை விட்டு எங்கும் செல்லவில்லை. அவள் என்னை தேடி வரும் சமயம் நான் இல்லாதிருந்தால் அவள் கவலையடைவாளே என்று எண்ணினேன்.

எனது எதிர்பார்ப்புக்கு மாறாக அன்று காலையில் ஒரு இளைஞன் எதிர்வீட்டுக்காரரை தேடிவந்தான். அவர்கள் இல்லை என்றதும் நேரே எங்கள் இல்லத்திற்கு வந்து என்னை சந்தித்தான்.

நான் அவனை அமரவைத்து விசாரித்தேன் . அவன் தன்பெயர் இளையபாரதி என்றும் தான் தனியார் துறை ஒன்றில் தொழில் புரிவதாகவும். அவர்களது பெண் தன்னை காதலிப்பதை அறிந்து அதை தவிர்ப்பதற்காக இந்த ஊருக்கு மாற்றலாகி வந்துவிட்டதாகவும் அதெற்கெல்லாம் காரணம் வெறும் சாதிப்பிரச்சனைதான் என்றும் மிகவும் கவலைப்பட்டு கூறினான்.

எனக்கு இப்போதுதான் புரிந்தது ஏன் இருபது வயது நிரம்பிய தமது மூத்த மகளுக்கு விவாகம் செய்ய எத்தனித்தார்கள் என்று. எனினும் நான் அவனை தூண்டும் வகையில் எந்த தகவலையும் வழங்கவில்லை.

'இளையபாரதி.... உங்களுக்கு நல்ல அனுபவம் இருக்கும் என்று நம்புகின்றேன். எங்கள் சமூகத்திற்கு கிடைத்த பெரும் சாபம் தான் இந்த சாதிப்பிரச்சனை. இதை இல்லாமல் செய்வது பற்றி சமூகமே சிந்தித்தால் தான் எமக்கு விடிவுண்டு. ஆனால் இந்த பிரச்சனையை தனியொருவனாக எதிர்க்க முற்பட்டால் விளைவுகள் மோசமாகிவிடும். இனி அந்த பெண் இளமை முறுக்கில் காதலிக்க ஆரம்பித்துவிட்டாள் என்று வையுங்கள். உண்மையில் அது அவளுக்கு விவாக வயதாகவும் இருக்கமாட்டாது. நீங்கள் இப்போ அவளை விவாகத்துக்கு வற்புறுத்தினால் அவள் உங்கள் மேல் உள்ள கவர்ச்சிக்காக அல்லாவிட்டாலும் தான் உங்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானிப்பாள். விளைவு தனது பாசத்திற்குரிய பெற்றோர் சகோதரங்களை துறக்க வேண்டிய முடிவுக்கு அல்லாமல் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களிற்கு உள்ளாவாள். அவள் உங்களுடன் புறப்பட்டு வந்தாலும் அவளை நீங்கள் காதலிக்க தொடங்கிய போது இருந்த மகிழ்ச்சியும் அழகும் பறிபோனவளாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் எது அவசியமோ அது இல்லாமல் உங்கள் வாழ்கை என்ற ஓடம் நகரும்.'

நான் கூறியவற்றை அவதானமாக கேட்டுக்கொண்டிருந்த இளையபாரதி எனது கருத்துக்களுக்கு நன்றி கூறினான். தான் ஒரு கவிஞன் என்று தன்னை பார்ப்பதாகவும் இழிசாதிக்காரனாக பார்க்கவில்லை என்றும் கவிஞன் உணர்ச்சிகளுக்கே முதன்மை கொடுப்பான் என்றும் சமூகத்தின் தடைகளை உடைப்பதே அவன் கடமை என்றும் வாதிட்டான். நான் அமைதி காத்தேன். ஒவ்வொருவரும் தமது வாழ்வின் போக்குகளை தாமே தீர்மானிப்பர் அல்லவா? அவனும் விடை பெற்றுச்சென்றுவிட்டான்

எனக்கு மீண்டும் திவ்யா பற்றிய சிந்தனை வந்தது....

அந்த இளைஞனின் காதலை ஏதோ ஓர்காரணத்திற்காக அவன் துறக்கவேண்டும் என்ற பாணியில் நான் செய்த உபதேசத்தை இப்போ என்மேல் ஏற்றிப்பார்த்தேன்.

இப்போதான் எனக்கு அதன் தாக்கம் புரிந்தது... எந்த ஒரு காரணத்துக்காயினும் என்னால் திவ்யாவை துறக்கவோ மறக்கவோ முடியுமா?

திவ்யா எனது மனதில் நிரப்பிய மனைவி என்ற ஸ்தானத்தை எந்த ஒரு பெண்ணால் தான் நிரப்ப முடியும்? அப்படி திவ்யாவை துறந்து மற்றொருத்தியை வாழ்க்கைத் துணைவியாக கொண்டுவர நேர்ந்துவிட்டால் வாழ்க்கை பூராகவும் திவ்வியாவின் நினைப்பு என்னை கொன்றே விடுமல்லவா?

இப்போ இளையபாரதிக்காக நான் கவலைப்பட்டேன். அவனுக்கு எதாவது ஒரு வழியில் சில தகவல்களை வழங்கி உதவி செய்யலாமல்லவா என எனது மனம் ஏங்கியது. இளையபாரதியின் தாடியும் சோகம் நிரம்பிய முகமும் என்னை வருத்தியது.

மாலையில் எங்கள் வீட்டு மண்டபத்தில் அம்மாவின் குரல் ஒலிப்பது கேட்டுக்கொண்டிருந்தது.... எனது அறைத் திரைச்சீலையை நீக்கி எட்டிப்பாத்தேன்...

ஆச்சரியம்! திவ்யா அம்மாவுடன் தாயம் விளையாடிக் கொண்டிருந்தாள்... ஏன் இவள் என்னை சந்திக்காமல் அம்மாவுடன் நீண்ட நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்துவிட்டாள் என்று எனக்கு கோபம் கோபமாக வந்தது. அவளுக்கு சந்தர்ப்பம் சூழ்நிலை அப்படி அமைந்திருக்கலாம் ... சரி .... செய்கிறேன் வேலை என்று தீர்மானித்து... ' அம்மா... கோப்பி கொண்டு வாங்கோ...' என உரத்து குரல் கொடுத்தேன்.

அம்மா சமையலறைக்கு சென்றதும் திவ்யா ஒரே பாய்ச்சலாக என்னிடம் ஓடிவந்தாள்... நான் அவள் காதை திருகி... ' ஏன் எனக்கு பயணம் சொல்லாமல் புறப்பட்டாய்? ' ஏன்று செல்லமாக கோபித்தேன். எனது கரத்தை அன்பாக தட்டிவிட்டு ... தான் வீட்டில் திடீரென்று எடுத்த முடிவுக்கு கட்டுப்படவேண்டியதாலேயே அப்படி நேர்ந்தது என்று விளக்கினாள். நான் ஏன் உங்கள் அக்காவின் காதலுக்கு விரோதமாக கட்டாய திருமணம் செய்ய முயல்கின்றீர்கள்?' என்று வினவினேன்.

பின்னர் இளையபாரதி வந்தமை பற்றியும் கவலைப்பட்டு கதைத்தமைபற்றியும் விளக்கினேன். திவ்யாவின் முகத்தில் சோகம் இளையோடியது... அதற்குள் அம்மா கோப்பியுடன் வந்துவிட்டாள்...

' திவ்யா... நீயும் கோப்பி குடி ...' என்று கூறி அவளுக்கு ஒரு 'கப்பை' கொடுத்துவிட்டு... 'ட்ரேயை' என் மேசை மீது வைத்துவிட்டு சென்றாள்.

திவ்யா கோப்பியை ருசித்தபடி பேசினாள்...

'ஒரு குடும்பத்திற்கு ஒரு பெண்பிள்ளை என்றாலே பெரிய சுமை ! மூன்று பெண்பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர்களது கவலைகள் பற்றி முதலில் சிந்திக்கவேண்டியது யார்?' என்று என்னை வினவினாள்.

நான் ஒரே தீர்மானமாக ' பிள்ளைகள் தான்! ' என்று பதிலிறுத்தேன். மீண்டும் வினவினாள்... இளையபாரதி போன்ற உணர்ச்சிகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கும் இளைஞர்களால் பெற்றோரின் கவலைகளை புரிந்து கொள்ள முடியுமா?'

மீண்டும் நான் ஒரே தீர்மானமாக 'இல்லை' என்று அடித்துச்சொன்னேன். அப்படியாயின் இளையபாரதியை மறந்துவிடுங்கள் என்று எனக்கு ஆலோசனை கூறினாள்.

அவளது துடுக்கான விவாதத்தால் நான் திகைத்துவிட்டேன். பெற்றோர்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற சிந்தனையுள்ள இவள் எப்படி எனது அறைவரைக்கும் வந்து நெருங்கிபழகுகிறாள்? அது என் மீது அவள் கொண்ட நம்பிக்கையா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாயின் ஏதாவது அற்ப ஆசை நிமித்தம் நான் அவளை தீண்டினால் அவள் என்னை எரித்துவிடுவாளா? கட்டிலில் அமர்ந்திருந்த நான் எழுந்து சென்று எனது மேசைக்கதிரையில் அமர்ந்து கொண்டேன். அதே நேரம் அவளை சோதிக்கவேண்டும் என்ற விபரீத ஆசையும் என்னுள் முகிழ்த்தது. ஆனால் பயம் காரணமாக அதை ஒத்திப்போட்டுக்கொண்டேன்...

திவ்யாவைத் தவிர அவள் வீட்டுக்காரர் எவரும் எங்கள் வீட்டுப்பக்கம் வருவதில்லை. அவர்களுக்கு வெவ்வேறு சோலிகள் இருக்கலாம்.

திவ்யா மட்டும் அப்பா அம்மா வீட்டில் இல்லாத வேளைகளிலும் ஓடி வருவாள்.

ஒரு நாள் அவளுக்காக மலர்ச்சாடி ஒன்றை வாங்கி வைத்து பரிசளித்தேன். அவளும் நன்றி கூறி வாங்கிக்கொண்டாள். ஒரு பரீட்சார்த்தமாகத்தான் நான் அவளை கடமைப்படுத்த முயன்றேன். பின் வினவினேன்....

' திவ்யா, ஏதாவது ஒரு காரணத்தின் பொருட்டு நீ என்னை உனது பெற்றோருக்காக மறுதலிக்கும் கட்டம் வருமா?'

'அப்படி ஒரு கட்டம் வரமாட்டாது என்பதை உறுதிசெய்து கொண்டுதான் நான் உங்களுடன் பழக தொடங்கினேன்...'

'எப்படி ?' நான் வினவினேன்...

'நாங்கள் இங்கு வந்த புதிதில் உங்கள் அப்பா எங்கள் வீட்டுக்கு வருகை தந்து அப்பாவை வரவேற்றும் மகிழ்ச்சி தெரிவித்தும் பேசினார். அப்போ அவர்கள் இருவரும் தாம் தூரத்து உறவு என்று பேசிக்கொண்டதை நான் அவதானித்தேன். எனவேதான் நான் பயமின்றி உங்களை நெருங்கினேன்...'

அனைத்து காரணிகளைக் காட்டிலும் சாதி எப்படி காதலிலும் திருமணத்திலும் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதை எண்ண எனக்கு எனது சமூகத்தின் மீது பெரும் பரிதாபம் தான் ஏற்பட்டது!

திவ்யா என்னை எரித்து விடுவாள் என்று எனக்கிருந்த பயம் அவளின் கதை பேச்சால் குறைந்து சென்றது.

இப்போ அவள் ஆங்கிலம் கற்பதற்காக ஒரு தொழில் நுட்பக்கல்லூரியில் இணைந்திருந்தாள்... பாடத்தில் உள்ள சந்தேகங்களைக் கேட்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் இரவு என்று பாக்காமல் எந்நேரமும் என்னிடம் ஓடிவந்தாள். கல்வியில் அவளது உற்சாகத்தை ஊக்குவிப்பதற்காக அவளது பெற்றோரும் அதை பெரிதாக கண்டுகொள்ளவில்லை.

ஒரு நாள் அம்மா எனக்கு மதிய போசனம் பரிமாறிக் கொண்டிருந்தாள். அப்போ எதிர்பாராதவிதமாக திவ்யா ஓடி வந்தாள். நாம் உணவருந்துவதை கண்டு விட்டு வந்தவரத்தில் திரும்ப இருந்தவளை அம்மா தடுத்து ' திவ்யா நீயும் சாப்பிடு' என்று கூறி மேசையில் அமர வைத்துவிட்டாள். அது ஒரு மறக்கமுடியாத தினமாக எனக்கு அமைந்துவிட்டது. எனது கையால் நான் அவளுக்கு உணவு பரிமாறியது எனக்கு பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. அவள் கண்களும் ஆனந்த கண்ணீரால் நிறைந்தது.

அந்த சம்பவத்தின் பின்னர் அம்மாவில் பெரும் மாற்றம் ஒன்று தெரிந்தது. திவ்யாவை பற்றி அடிக்கடி கதைத்தாள்.... அவள் வராவிட்டால் விசாரிக்கதொடங்கினாள். அவளுக்காக சிற்றுண்டிகள் செய்து வைத்து பரிமாறினாள்.

ஒரு நாள் திவ்யா முழுசேலை அணிந்து எங்கள் வீட்டுக்கு வந்தாள்... வந்ததும் அம்மாவை தேடிச்சென்றாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. காரணம் விசாரித்தபோது அம்மாதான் அவளை சேலையில் பார்க்க விரும்புவதாக கூறியிருந்ததாக கூறினாள்.

அம்மா பெண் பிள்ளை இல்லாத குறைக்கு அவளில் அன்பு செலுத்துவதாக இருக்கலாம் என்று எனக்கு தோன்றியது.

திவ்யாவும் இப்போது அம்மாவில் நன்றாக இடம் பிடித்துவிட்டாள். அடிக்கடி எனது அறைக்கு ஓடி வருவதும் கும்மாளம் அடிப்பதும் அதிகரித்தது.

ஒருநாள் நான் வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பினேன். எனது அறைக்கு சென்று பார்த்த போது திவ்யா எனது கட்டிலில் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்தாள். எனது இதயம் அப்படியே உறைந்துவிட்டது. இந்தக் கணங்கள் நீடிக்க கூடாதா என்று எண்ணி எனது மனம் படபடத்தது. அவள் மேல் அத்துமீறல் புரிய வேண்டும் என்ற எண்ணம் தவிடுபொடியாகியது. யாராவது மனைவிமேல் அத்துமீறல் புரிவார்களா?

தூக்கத்தில் அவளது பிஞ்சு முகம் என்னை மேலும் மேலும் வசீகரித்தது. எனது மனச்சாட்சி என்னை உறுத்தியது. ஒரு பெண் தூங்கும் பொழுது அவளது அழகை இரசிப்பதென்பது மிருகத்தனம். வல்லுறவு கொள்வதற்கும் அதற்கும் என்ன வேறுபாடு உண்டு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளை தூங்கவிட்டு வெளியே சென்று அமர்ந்துவிட்டேன்.

சிறிது நேரத்தில் தூக்கம் கலைந்து வந்தவள் என்னை மண்டபத்தில் கண்டு அதிர்ந்துவிட்டாள்.... ஆடைகளை சரிசெய்து கொண்டே....

'நீங்கள் எங்கே இங்கு ?'

என்று விசாரித்தாள்.

' திவ்யா... இது உன் வீடு இல்லை; எங்கள் வீடு' என்று பதிலிறுத்தேன். தனது தவறை உணர்ந்து கால்களை திரும்ப திரும்ப நிலத்தில் உதைத்து சிணுங்கினாள். அப்போதும் அழகாகத்தான் இருந்தாள்.

அன்றைய தினம் திவ்யா தொழில்நுட்ப கல்லூரிக்கு சென்றுவிட்டாள். சனிக்கிழமையாதலால் ஏனையோர் வீட்டிலேயே இருந்தார்கள். யாரோ அவர்கள் வீட்டின் முற்றத்தில் நின்று உரத்து சத்தமிடுவது எனது செவிகளுக்கு எட்டியது. வெளியே வந்து பார்த்தேன்....

ஆச்சரியம்... இளையபாரதிதான் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் உரத்துபேசிக் கொண்டிருந்தான்...

திவ்யாவின் தந்தை மற்றிரு மகள்மாரையும் வீட்டினுள் வைத்துப் பூட்டிவிட்டு முற்றத்தில் இறங்கிவிட்டார். அவரது முறுக்கெடுத்த உடம்புக்கு அவர் யாருக்காவது பயப்படக்கூடியவர் என்று தெரியவில்லை!

இளையபாரதி முதலில் கெஞ்சிப்பார்த்தான், பின்னர் வாதாடிப்பார்த்தான்: இயலாக்கட்டத்தில் திட்டத் தொடங்கினான்...

இவனை எல்லாம் கவிஞன் என்று எப்படி கூற முடியும்? தனது காதலையே பிரதானமாகக் கொண்டு சண்டையிட்டான். திவ்யாவின் அப்பா தனது பொறுப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து பதிலுக்கு வாதாடினார். அவரது வாதத்தில் கவலை தெரிந்தது...

ஒரு கட்டத்தில் இளையபாரதி என்னைக் கண்டுவிட்டான். நான் அவனுக்கு கூறிய ஆலோசனைகளுக்கும் இப்போ அவன் நடந்து கொண்டிருக்கும் முறைக்கும் பெரும் முரண்பாடு இருப்பதை அவனது மனச்சாட்சியே அவனுக்கு புட்டுக் காட்டியது போலும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை கவிழ்ந்தபடி அவன் விலகிச்சென்றான். மாலையில் திவ்யா எங்கள் வீட்டுக்கு வருகை தந்த பொழுது அவள் முகத்தில் எந்த ஒரு மாறுதலும் இருக்கவில்லை. அது அவர்கள் வீட்டு பிரச்சனை.... அதற்குள் நான் மூக்கை நுழைக்ககூடாது என்ற நாகரீகத்தை நான் கடைப்பிடிக்க வேண்டும்.

பதிலுக்கு திவ்யா வழமைபோலவே உற்சாகமாக இருந்தாள். எனது அறைக்கு சென்று பொருட்களை ஒழுங்குபடுத்தினாள்.

இளையபாரதிக்கு எதிராக அவளது தந்தை ஆத்திரமுற்றதை காலையில் அவதானித்த எனக்கு நான் திவ்யாவுடன் எப்படிப்பட்ட அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது உறுதியாயிற்று.

திவ்யாவில் நான் ஒரு போதும் 'செக்ஸ்' உணர்வை அவதானிக்க வில்லை. அதுதான் அவளது சிறப்பு அம்சம். !

அடுத்தடுத்த நாட்கள் வழமைபோல கழிந்தது... அம்மாவுடன் திவ்யாவின் நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க திவ்யா என்னுடன் அதிக உரிமை எடுத்துக்கொண்டு சண்டித்தனம் விடுவதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

ஓரிரு நாட்கள் கழிந்திருக்கும், அதிகாலையில் திவ்யா அழைப்பு மணியை அடித்து... தாங்கள் அக்காவின் நிச்சயதார்த்தத்துக்காக ஊர் செல்வதாகவும் கைபேசியில் தொடர்பு கொள்வதாகவும் கூறினாள்... அவள் தற்காலிகமாகவேனும் பிரிவது எனக்கு கவலையளிப்பதாக இருந்தது.

திவ்யாவிடமிருந்து மறுநாள் கைப்பேசி அழைப்பு வந்தது. அது வேறோர் இலக்கத்தில் இருந்து வந்தது. அது தனது இளைய சகோதரியின் கைப்பேசி என்றும் தனது கைப்பேசி பழுதடைந்து விட்டதால் அந்த இலக்கத்தை குறித்துவைத்துக்கொள்ளும் படியும் மாலையில் நிச்சயதார்த்தத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் வர உள்ளதாகவும் கூறி எனது சுகம் பற்றியும் விசாரித்தாள்.

அன்று இரவு ஒரு குறும் செய்தி வந்தது. 'அக்காவின் விவாகம் நளையதினம் நடைபெற உள்ளது.'

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏன் இந்த அவசரம் என்று எண்ணிகவலைப்பட்டேன். இளையபாரதி போன்றோர் இருக்கும் வரை பெண்களுக்கு இப்படியான நிர்ப்பந்தங்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் கைபேசி அழைப்பு எதுவும் வரவில்லை. மாலையில் குறும் செய்தி ஒன்று வந்தது. 'அக்காவின் விவாகம் முடிந்துவிட்டது. நாளை புறப்படுகிறோம்.'

மறுநாள் மாலை ஒரு 'வான்' எதிர்வீட்டு வாசலில் வந்து நின்றது. தாயும் மற்றும் இரு பெண்களும் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றவர்கள் ஒரு ஆராத்தி தட்டுடன் வெளியே வந்தார்கள். வானிலிருந்தவர்கள் கீழே இறங்கி நின்றனர். தந்தை வானின் முன் ஆசனத்தில் இருந்து இறங்கி நேரே என்னை நோக்கி வந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது...

எனது இரு கைகளையும் தனது கரங்களால் பற்றி கண்ணீர் மல்கும் தனது கண்களில் ஒற்றிக்கொண்டார். பின்னர்...

'நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். திவ்யா, தான் உங்களை காதலிப்பதாக எவ்வளவு கூறியும் இளையபாரதியின் நிர்ப்பந்தத்தில் இருந்து அவளை காப்பாற்றுவதற்காகவும் குடும்ப பிரிவை விலக்குவதற்காகவும் அவளின் திருமணத்தை எங்கள் உறவுக்கார பையன் ஒருவனுடன் நடாத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதில் திவ்யாவின் பிழை எதுவும் இல்லை.' என்று கூறி விம்மி விம்மி அழுதார்....

எனக்கு உலகமே சுற்றியது... அப்படியாயின் இளையபாரதி காதலித்தது மூத்தவளை அல்ல. திவ்யாவையே! இறுதியாக வந்த இரண்டு குறுஞ்செய்திகளும் திவ்யாவிடம் இருந்து வந்தவையல்ல. இளைய சகோதரியிடமிருந்து வந்தவையே!

புதுமணத்தம்பதிகள் மாலைகள் சகிதம் 'வானில்' இருந்து இறங்கினார்கள். உறவுப்பெண்கள் ஆராத்தி எடுத்தார்கள்...

திவ்யா தலையை திருப்பி என்னைப் பார்த்தாள்....

கண்களால் நீர் பொல பொல என்று கொட்டியது.

இது என்ன சிறுபிள்ளைத்தனம்...!

ஞானம் - செப்.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# வருவது போல் வரும் .....

வருஷம் தப்பாமல் தன்ரை மனைவி பிள்ளைகள் எண்டு எண்ணி ஏங்கி , வெளி நாட்டிலை தான் கஷ்டப்பட்டு செய்யிற ' பக்டரி" வேலைக்கும் லீவு போட்டுவிட்டு ஒடி வாற மனுஷன்.

'விசா' 'ஓகே' பண்ணி, விமானத்துக்கான ஆசனமும் பதிவு செய்து விட்டு 'மொபைல் போனில்' தான் இலங்கைக்கு வரும் திகதியை எனக்கு சொன்னபோது எனது உடம்பு என்னை மறந்து சிலிர்த்து அடங்கியது.

இண்டைக்கு மதியத்திற்கு முன்னர் வந்து சேர்ந்து விடுவார்...

என்ரை பதினாறாவது வயதிலை , ஐயா பாரிசவாதத்திலை முடங்கிப் போனதாலை, கையாலாகாத எனது அம்மா என்னை சாம்பிராணிக்குச்சி தயாரிக்கும் ஒரு நிறுவனத்திலை சேர்த்துவிட்டாள்.

காலையிலை ஒரு 'கிலோமீற்றர்' தூரம் நடந்து சென்று, பத்து மணித்தியால வேலை நேரத்தை முடித்துக்கொண்டு மாலையில் வீடு திரும்புவேன்.

என்ரை வயது சிறுமிகள் எல்லாம் பாடசாலைப்படிப்பில் தீவிரம் காட்ட , நான் மட்டும் குடும்ப சுமையை சுமக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது, எனக்கு மிகுந்த கவலையை அளித்தது.

பாடசாலை '' யூனிபோர்ம் '' ' அணியாத சிறுமி ஒருத்தி, வேறு பாதுகாப்புக்களும் அற்ற நிலையில், தினமும் தெருவில் நடந்து செல்வது, பல அண்ணன்மார்களுக்கு கிளு கிளுப்பை ஏற்படுத்தியது. தங்கள் அலகால் என்னை கொத்திக்கொண்டு போய்விட அவர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

அந்த நேரத்தில் எனக்கு அறிமுகமானவர்தான் சிந்துஜன். நான் வேலைக்கு செல்லும் போதும் வரும் போதும் தான் ''ஹயர்" ஓடும் ' ஓட்டோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன் ''லிப்ட்" தந்ததால் மற்ற மற்ற இளைஞர்கள் விலகிக் கொண்டார்கள்.

நான் சிந்துஜனுக்கு உறவுக்கார பெண் என்று யாரோ கதைகட்டியும் விட்டதால் போலும் எவரும் என்னை ஜாடைமாடையாக பார்க்கவும் துணியவில்லை.

நாள் செல்லசெல்ல சிந்துஜன் என்னில் அதிகளவு அக்கறை எடுக்க தொடங்கியதாக நான் உணர்ந்தேன்.

நான் யாரோடு பேசலாம் , யாரோடு பேசக்கூடாது எண்டும் எவரிடம் உதவி பெறலாம் எவரிடம் உதவி பெறக்கூடாது எண்டும் நிபந்தனைகள் போட்டார். ஒரு பெண் பிள்ளையை ஆபத்துக்கள் எப்படி சூழும் என்பதை விஸ்தாரமாக விளக்கினார்.

எனது வீட்டுக்கும் தொழில் பார்க்கும் இடத்துக்கும் இடையேயான தூரத்தை நடந்து கடப்பதில் எனக்குள்ள கஷ்டத்தை நீக்குவதற்காக தனது 'ஓட்டோவில்' தினமும் 'லிப்ற்' தந்தார். உண்மையை சொல்வதென்றால் என்னை சந்திப்பதற்கும் என்னுடன் சுதந்திரமாக பேசுவதற்கும் அவர் அச் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொண்டார். மற்றும்படி பணம் செலுத்தி ஒரு "ஓட்டோவை" அமர்த்த முற்பட்டால் எனதுசம்பளம் பாதி நாட்களுக்கு போதாது.

எனது வீட்டு கஷ்டமான நிலைமைகளை என்னை வற்புறுத்திக்கேட்டு தெரிந்துகொண்டார்.

நான் மறுத்தும் ஒரு தடவை எனக்கு பெரிய தொகைப் பணத்தினை அன்பளிப்பாக கொடுத்தார். ஆண்களிடம் பண உதவியோ வேறு எந்த உதவியோ பெறகூடாது எண்டு எனக்கு அறிவுறித்திய அவரே எனக்கு பணம் கொடுத்து என்னை தலை குனியச் செய்ததானது எனது மனதில் பெரும் உறுத்தலை உண்டுபண்ணியது.

ஆனால் எனது கஷ்டமானதும் பரிதாபகரமானதுமான குடும்ப நிலைமை என்னை எனது கொள்கையில் உறுதியாக இருக்க அனுமதிக்கவில்லை.

அம்மாவும் அப் பணத்தை கையேந்தி ஏற்றுக்கொண்டு தான் முகம் கொடுக்க நேர்ந்த பிரச்சனைகளை தீர்த்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வீட்டுக்கு சிந்துஜன் தைரியமாக வருவதற்கும் ஐயா அம்மா இருவர் அன்பையும் பெறுவதற்கும் அந்த சம்பவமே இடம் அளித்தது.

''நான் உன்னைக் காதலிக்கின்றேன்.... நான் உன்னை கைபிடிப்பேன் '' என்றவாறான எந்த உறுதியையும் எனக்கு தராத நிலையிலேயே சிந்துஜன் என்னை கட்டிலில் பகிர்ந்து கொண்டார். அதனால் நான் பெற்ற சுகங்களும் அனுபவங்களும் எனக்கு சிந்துஜன் மீது மேலும் காதலை அதிகரித்தது.

சகல ஆயத்தங்களையும் முடித்து... எங்கள் நல்வாழ்வுக்காக.... சுபீட்சமான எதிர்காலத்திற்காக அவர் வெளிநாடு செல்ல புறப்பட்ட போது... எனது மூத்த மகள் எனது பிஞ்சு வயிற்றில் கருக்கட்டியிருந்தாள்!

பதின் மூன்றாவது தடவையாக அவர் தனது இளம் பாசமிகு மனைவியையும் மகளையும் பத்து வயது நிரம்பிய மகனையும் பார்ப்பதற்காக... இதோ ஓடோடி வந்துவிட்டார்!

பாடசாலை நேரமானதால் நான் மட்டும் அவரை எதிர் கொண்டு தழுவி அவர் பாதங்களை கண்ணீரால் பூஜை செய்தேன்.

எனது தோளைப் பற்றி அலாக்காக தூக்கிய அவர், ''என்ன மேனகா...'' என்று அழைத்து அணைத்துக்கொண்டார். எனது உடம்பு நடுங்கியது.

அவரை உபசரித்து களையாற்றினேன். நான் மதிய போசனத்திற்காக தயார் செய்து வைத்திருந்த ஆகார வகைகளை பார்த்துவிட்டு.... 'பிள்ளைகளுக்கு இப்படியா சாப்பாடு போடுகிறாய்...' கொஞ்சம் பொறுத்துக்கொள் என்று கூறி வெளியே சென்றார். சென்றவர் நான்கு "புரியாணி '' பொதிகளுடன் திரும்பி வந்தார்.

பிள்ளைகள் இருவரும் பாடசாலையால் வந்ததும் வீடு பெரிய அட்டகாசமாக இருந்தது. 'அப்பா... அப்பா..' என்று அழைத்து இருவரும் தங்கள் தங்கள் புதினங்களை கூறி ஆர்ப்பரித்தார்கள். அவர் '' கன்டொஸ்' பார்சல்களை பிரித்து வழங்கினார்.

'புரியாணி' சாப்பிட்ட பின்னரே 'கன்டொஸ்' சாப்பிடலாம் என்ற அவரது நிபந்தனையை பிள்ளைகள் ஏற்றுக்கொண்டார்கள்.

சிந்துஜன் நிதானம் தப்பாதவர்... மாதம் தவறாமல் குடும்ப செலவுக்கு பணம் அனுப்புவார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பழக்கம் , புகைப்பழக்கம் அற்றவர், ஆனால் " ஸ்போட்ஸ்" அவரது உயிர். வெளிநாட்டுக்கு புறப்பட முன்னர், இங்கிருக்கும் போது அவருக்கு ஒரு விளையாட்டுக்கழகம் இருந்தது. அவரது தலைமையில் கரப்பந்தாட்ட சுற்று போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இரவு பகலாக மின்னொளியில் விளையாட்டு இடம் பெறும். அறுபதுக்கு மேற்பட்ட கழக அங்கத்தவர்கள் அவருக்கு பேராதரவு வழங்கினார்கள். இதனால் போட்டி கழகங்கள் அவரை நெருங்க முடியவில்லை.

இவையெல்லாம் நினைவுகளாக எனது மனதில் நன்கு பதிந்திருந்தது....

ஆனாலும் இவை பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு எனது வீட்டு நிலைமை இல்லை. நீண்டகாலமாக பாரிச வாதத்தில் முடங்கிப்போயிருக்கும் அப்பா... உயர் இரத்த அழுத்தம் , நீரிழிவு போன்ற நோய்களுக்கு ஆட்பட்டிருக்கும் அம்மா.

நானும் பிள்ளைகளும் முகம் கொடுக்கும் பிரச்சனைகளை சிந்துஜனுக்கு கூறுவதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன்.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தை எனக்கு அளியாமலே சிந்துஜன் பெரிய தொரு குண்டை தூக்கி போட்டார்...

"மேனகா... நான் ஒரு மாத காலமளவில் உன்னுடன் இருப்பேன் . நீ சாவகாசமாக என்னுடன் உனது பிரச்சனைகளை மனம் விட்டு கதைக்கலாம். ஆனால் இரண்டு கிழமைகளில் ஒரு பாரிய மின்னொளி சுற்றுப்போட்டியை நடாத்துவதற்குரிய சகல ஆயத்தங்களையும் பூர்த்தி செய்துவிட்டுத்தான் நான் இங்கு வந்தேன். மாற்று கழகங்கள் எங்கள் கழகத்துக்கு எதிராக கங்கணம் கட்டி நிற்கின்றன. அவர்களை எதிர்த்து சுற்றுப்போட்டியை வெற்றிகரமாக முடிப்பது எனது பொறுப்பு..."

எனக்கு திகைப்பாக இருந்தது. குடிகாரன் கூட இரவு பட்டால் மனைவியை தேடி வீட்டுக்கு வருவான். ஆனால் விளையாட்டு என்பது அதனையும் மீறிய வெறி ... மனைவி என்ன... பிள்ளைகளையே மறக்கடிக்கும் திறன் அதற்கு உண்டு...ஒரு வருடத்திற்கு ஒரு முறை கிடைக்கும் விடுமுறையை குடும்பத்துடன் கழிக்காமல் விளையாட்டு மைதானம்.... அடிபாடுகள்... 'பொலீஸ்' நிலையம் என்று செலவிடுவதை எந்த குடும்ப பெண்ணாவது விரும்புவாளா...?

மதியம் சிந்துஜன் களையாற தூங்கி விட்டு மாலையில் கழக அங்கத்தவர்களை சந்திக்கவும் விளையாடவும் சென்று விட்டார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரத்தியேக வகுப்புக்கள் முடிவடைந்து மகளும் மகனும் அப்பாவை மீண்டும் சந்திக்கவும் விளையாடவும் ஓடோடி வந்துவிட்டார்கள்....

அப்பா வீட்டில் இல்லை !

மகள் நிவேதாவுக்கு இப்போ குடும்ப நிலைமை நன்கு விளங்கும் . அப்பா இல்லாத நேரங்களில் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் நினைவு கூராவிட்டாலும் முக்கியமான பிரச்சனைகளை எனக்கு நினைவூட்டினாள்...

அம்மா .... சொந்த வீடு இல்லாததாலை நாங்கள் எத்தனை துயரங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இந்த வீட்டு சொந்தகாரன் கூட உங்களை வீட்டை விடும்படி கூறி எத்தனை தரம் சண்டை பிடித்துப்போட்டான். அப்பா வெளிநாட்டிலை... எங்களை யார் தட்டிக்கேட்க இருக்கிறார்கள் எண்ட துணிவிலை எத்தனை இளைஞர்கள் என்னிலை சேட்டை விடுகினம். செலவுக்கு காசு தட்டுப்பட்டால் கௌரவமான முறையிலை கடன் எடுக்கிறதுக்கு ஒரு ' கிறடிற் காட்' இல்லாததாலை பலசரக்கு கடைக்காரனிலை இருந்து எத்தனை பேரிட்டை ஏச்சு வாங்க வேண்டி இருக்குது...

இதெல்லாவற்றையும் அவரிடம் கூறி, தீர்வு பெற வேண்டும் என்பது தான் எனது கவலையும். புருசனை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு இருக்கிற பொம்பிளைகளை நல்ல மனதோடை அணுகி உதவிசெய்கிற மனுசர் எங்கடை சமூகத்திலை எத்தனை பேர் இருக்கினம்.

எனது கண்கள் நீரை சொரிந்தன...

இரவு பிள்ளைகள் தகப்பனுக்காக காவல் இருந்து களைத்து தூங்கிவிட்ட பின்னரே சிந்துஜன் வீடு திரும்பினார்.

அவருக்கு விருப்பமான இரவு ஆகாரத்தை தயார் செய்து பரிமாறினேன்.

அவர் ஆறுதலாக இருந்தார்... பிரச்சனைகளை அவருக்கு முன் வைக்கும் நேரம்தான் அது... ஆனால் அவர் முந்திக்கொண்டு....

" மேனகா... நல்ல கரப்பந்தாட்ட கழகங்கள் எல்லாம் உடைந்து போய் விட்டன. மத்தியஸ்தர்கள் விளையாட்டை மறந்த நிலையில் இருக்கின்றார்கள். நான்கு பேர் கொண்ட நல்ல விளையாட்டுக்குழுக்களை தேடிப்பிடிக்க வேண்டும்... நல்ல மைதான வசதியை அமைத்துக்கொள்ள வேண்டும். உரிய நேரத்தில் தற்காலிக மின்சார சேவையை பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுசெய்ய வேண்டும்... உசார் அடைந்திருக்கும் எதிர் தரப்புக்களைப் பற்றி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்..."

தனது கவலைகளை கூறினார். அவருக்கு அவரது கவலை பெரிது!

சிந்துஜனும் நானும் தனி அறையில் இருந்து எவ்வளவு காலம். இன்று தனி அறையில் அவர் அருகாக நான் இருப்பது எனது மனதில் சொல்லொணா கிளர்ச்சிகளை ஏற்படுத்தியிருந்தது... நான் பாலை சுடச்சுட காய்ச்சி எடுத்து வந்து குடிக்க பதமாக ஆற்றிக் கொடுத்தேன். அவரது முகத்தை பார்க்க எனக்கு நாணமாக இருந்தது. அறை நடுவில் காலை நீட்டி அமர்ந்திருந்த அவருக்கு பின்புறமாக சென்று அவரது முதுகுடன் முதுகை சாத்தி அமர்ந்தேன்....

எந்த வித உணர்ச்சி வெளிப்பாடும் இல்லாமல் சிந்துஜன் பலத்த யோசனையுடன் எழுந்து சென்று கட்டிலில் சாய்ந்து சுகமான தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்.

இரவு , நீண்ட நேரம் விழித்திருந்து சிந்துஜனின் முகத்தையே பார்த்தபடி இருந்தேன்...

எப்படியாவது சிந்துஜனுக்கு குடும்ப பிரச்சனைகளை உணர்த்தவேண்டும்....

அம்மா அப்பாவுக்காக நான் வெளிநாடு செல்லாமல் எவ்வளவு காலம் காவல் இருப்பது...

மறுநாள் காலை எமது வாடகை வீட்டு சொந்தக்காரன் தனது மனக்குரோதங்களை கடும் சொற்களால் உணர்த்தினான்.

" பிள்ளை ... நீங்கள் முற்பணமோ வாடகையோ கூட்டித்தர வேணும் எண்டு நான் நினைக்கேல்லை... உங்கடை ஐயாவும் அம்மாவும் சாவிறுதி காலத்திலை இருக்கினம்.. எங்கடை புது வீட்டிலை இன்னும் நல்ல காரியம் எதுவும் நடக்கேல்லை. இந்த நிலைமையிலை உங்கடை அம்மாவோ ஐயாவோ இறக்க நேரிட்டால் அது எங்கடை வீட்டுக்கு கூடாத பெயரை கொண்டுவாறதோடை மற்ற மற்றவை வாடகைக்கு குடியிருக்க வரவும் பயப்படுவினம். உங்கடை மனுஷன் வந்திருக்கிற இந்த நேரத்திலையாவது எங்கடை வீட்டை காலி செய்யுங்கோ. இல்லாட்டி தேவையில்லாத பிரச்சனைகளுக்கு நீங்கள் முகம் கொடுக்க வேண்டி வரும்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்காரனட்டை இருந்து அடிக்கடி கேட்கிற புறுபுறுப்புத்தான் !

சிந்துஜன் நல்ல தூக்கத்தில் இருந்தார். வெளிநாட்டு நேரத்திற்கு பழக்கப்பட்ட உடம்பு. காலையில் நேரத்திற்கு எழும்ப இடம் கொடுக்கவில்லை. ஓரிரு தினங்கள் அப்படித்தான் இருக்கும். பின்னர் பழக்கத்துக்கு வந்து விடும்....

வீட்டுப்பிரச்சனைகளை பற்றி அவருக்கு விலாவாரியாக கூறினேன். ' சரி... சரி...' என்று கூறி கேட்டுக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தின் பின்னர்...

'மேனகா... நீ கவலைப்படாதை. உனக்கு சொந்த வீடு வாங்கித் தருவேன். நீயும் பிள்ளைகளும் மற்றவர்களுடைய தொந்தரவு இல்லாமல் சுதந்திரமாக இருக்க வேணும் எண்டு எனக்கு ஆசை இல்லையா...?' அவர் அப்படிக் கூறவும் எனக்கு பெரிய ஆறுதலாக போய்விட்டது.

இப்போதெல்லாம் நேர காலத்துடன் துயில் எழும்ப தொடங்கிவிட்டார். விளையாட்டும் பயிற்சியும் எண்டு திடகாத்திரமாக வளர்ந்த உடம்பு...

காலையில் பிள்ளைகள் இருவரும் சீருடை அணிந்து ஆயத்தமானதும் தானே இருவரையும் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று பாடசாலையில் விடுவார். பின்னர் மதியம், திரும்ப கூட்டி வருவார். மாலையில் பிரத்தியேக வகுப்புக்களுக்கும் கூட்டிச்சென்று விட்டால், பின்னர் மைதானமும் அவரும்தான்!

விளையாட்டு போட்டிக்கு நாட்கள் நெருங்க நெருங்க அவரை தேடிவரும் கழக அங்கத்தவர்கள் தொகை அதிகரித்தது...

பாடசாலைக்கு செல்லும் வழியில் ஒரு நாள் மகள் சில வாலிபர்களை அவருக்கு காட்டி அவர்கள் தனக்கு தரும் தொல்லைகள் பற்றி கூறிவிட்டாள்.

மறுநாள் மகளை, அவளது 'சைக்கிளில்' தனியே அனுப்பி விட்டு தான் பின்னால் சென்று நோட்டம் விட்டார்.

மகள் இரவு அவருடன் செல்லம் கொஞ்சி விளையாடிக்கொண்டிருக்கும் போது அவர் அவளுக்கு கூறினார்...

'மகள் .... நீ ஒண்டுக்கும் கவலைப் படாதையம்மா... நீ சொந்தக் 'காரிலை' பாடசாலைக்கு போய் வாற ஒழுங்கை நான் செய்வேன்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு நல்ல சந்தோஷம். குதிக்கால் நிலத்திலை படாதவாறு துள்ளிக் குதித்து குதூகலித்தாள்...

சிந்துஜன் வீட்டிலை இருக்கிற நேரம் இப்போ வர வர குறைந்து சென்றது. சுற்றுப்போட்டிக்கான வேலைகள் துரிதமடைந்து வந்தன. வீட்டில் அலுமாரியில் வைத்திருந்த 'டொலர்கள்' குறைவடைந்து வந்தது.

அன்று இரவு காலை நீட்டி கைகளை மார்புக்கு மேலாக கோர்த்த படி கட்டிலில் படுத்திருந்தார். பாதங்கள் வேகமாக ஆடிக்கொண்டிருந்தன. முகட்டைப் பார்த்தபடி தனக்கு தானே பேசிக்கொண்டிருந்தார்.

"இண்டைக்கு " ட்றோ" (Draw ) போட்டாச்சு. நால்வர் கொண்ட நூறு " ரீம்" பங்கு பற்றுது! மத்தியஸ்தர்கள் ஒருவர் தவறாமல் அனைவரும் வர சம்மதிச்சு விட்டாங்கள். வெளியூர் கழக வீரர்கள் தங்க பாடசாலை ஒன்றில் இட வசதி செய்தாச்சுது. இரண்டு 'வொலிபோல் கோட்" ( Volley Ball Code ) ஆயத்தம். தற்காலிக மின்சார இணைப்புக்கு காசு கட்டியாச்சு. ஒரு இலட்சம் ரூபாய்க்கு கேடயங்களும் (Shield) பரிசுப் பொருட்களும் வாங்கியாச்சு. பொலிஸ் அனுமதி எடுத்தாச்சு. ஒலி பெருக்கி , மின் விளக்கு (Focus Lights) படங்கு ( Tent ) சோடனை, ஆசனங்கள் , மேசைகள் , பாத்திரங்கள், எல்லாம் ஓடர் செய்தாச்சு. மூன்று நேர சாப்பாட்டுக்கும் குளிர்பானத்துக்கும் ஒழுங்குகள் செய்தாச்சு. சுற்றுப்போட்டி நடைபெற மூன்று நாள் தான் இருக்கு. முதல் நாள் காலை விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் போட்டிகள் இரவிரவாக மின்னொளியில் நடைபெற்று மறுநாள் மதியம் பரிசளிப்புடன் முடிவடையும். என்னுடைய குரல் ஒலிபெருக்கியில் சுற்றுப்போட்டியை நிர்வகிக்கும்".

சிறிது நேரத்தில் அவரது குரல் தளர்ந்து அவரை தூக்கம் ஆட்கொண்டது.

நடக்கப்போகும் எந்த விடயங்களையும் மனதில் திட்டமிடுவதும் அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதும் அவருக்கே உரிய கலை!

இருந்தும் விளையாட்டு எண்டு சும்மா செலவழியிற காசை நானும் குடும்ப தேவைகளுக்காக ஏன் பயன்படுத்தக்கூடாது என்ற நினைப்பில் வீட்டுக்குதேவையானதும் மேலதிகமானதுமான பொருட்களை கேட்டு பட்டியல் ஒன்றை கொடுத்தேன்.

செலவை பாராமல் அனைத்தையும் வாங்கி வந்து போட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் அவரிடம் கூறினேன்...

"என்னப்பா... நீங்கள் எங்களோடை நிக்கிறபடியால் எங்களுக்கு காசு தேவையில்லை. நாங்கள் தனியே இருக்கேக்கை காசு தட்டுப்பாடெண்டால் எவரட்டையும் உதவி கேட்க ஏலாமல் கிடக்கு. எவரட்டை உதவி பெற்றாலும் பிறகு பல்லிழிக்கவேண்டியிருக்கு".

நான் கண்ணீர் வடிக்காத குறை...

எந்த பிரச்சனையையும் எளிதாக எடுத்துக்கொள்வது அவரது வழக்கம்.

'சரி... சரி... என்னட்டை சொல்லிப் போட்டாயெல்லோ, இனி விடு 'கிரடிட் காட்' ஒண்டு சொன்னது கேட்கும்...'

அவர் உறுதியளித்தார்.

அன்று சுற்றுப்போட்டி தினம். அதிகாலையிலேயே எழுந்தவர் சுடுதண்ணியும் குடியாமல் மாயமாக மறைந்துவிட்டார் !

பத்து மணி போல வீட்டுச்சொந்தக்காரன் வந்தான். நசிந்து நசிந்து பேசினான்...

'பிள்ளை... நீர் நல்லாய் பயந்து போய் விட்டீர் போலை...வீட்டைப்பற்றி கவலைப்படாதையும். அம்மா அப்பாவுக்கு ஒண்டெண்டால் எங்கடை வீட்டிலை செய்யாமல் வேறை எங்கை செய்யிறது.'

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சிந்துஜன் பிரச்சனைகளை அணுகும் விதம் ஒண்டு இருக்குது. அது சம்பந்தப்பட்டவர்களின் முடிவுகளையும் பிடிவாதங்களையும் தலைகீழாக மாற்றிவிடும்... பணம் பாதளம் மட்டுமல்ல... அதற்கப்பாலும் செல்லும் என்பதை நன்கு உணர்ந்தவர் தான் சிந்துஜன்!

பாடசாலைக்கும் விஷேட வகுப்புக்களுக்கும் சென்ற மகளும் மகனும் சுழித்துக்கொண்டு சென்று அப்பாவின் சுற்றுப்போட்டியை பார்த்து விட்டு வந்து எனக்கு தகவல் தந்தார்கள்.

'அம்மா... மைதானம் சோடனையாலும் மக்கள் கூட்டத்தாலும் நிரம்பி வழியுது. போட்டிகள் நடக்கேக்கை சத்தம் காதை பிளக்குது. விசில் சத்தங்கள் கேட்குது. அப்பாவின் குரல் தொடர்ந்து ஒலிபெருக்கியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைகளை இடுகிது. அப்பாவின் கழக வீரர்கள் ஓடி ஓடி கருமமாற்றுகின்றார்கள். கேடயங்களும் பரிசுப்பொருட்களும் மேடையை நிறைத்து அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. உபசாரங்கள் தொடர்கின்றன. குழுக்களிடையே சண்டைக்கும் குறைவில்லை. அப்பா அனைவரையும் சமாதானம் பண்ணுகின்றார்... '

இரவு போட்டிகளை நானும் பார்ப்பதற்கு 'ஓட்டோ' ஒன்று ஒழுங்கு செய்து கொடுத்திருந்தார்.

புகழுக்காக சொல்லேல்லை, இப்படி ஒரு திருவிழாவை இதுவரை நான் பார்க்கேல்லை. இனியும் பார்க்க முடியுமோ என்பது சந்தேகம் தான்! மறு நாளும் விளையாட்டுப்போட்டி தொடர்ந்த வண்ணம் இருந்தது.

பிள்ளைகள் பாடசாலை போய்விட்டார்கள். சில இளைஞர்கள் வீடு தேடி வந்திருந்தார்கள். மூவருக்கு கையிலும் தலையிலும் முகத்திலும் காயங்கள். அழுதபடி இருந்த அவர்களைப் பார்க்க பரிதாபகரமாக இருந்தது...

'அம்மா... எங்களை மன்னித்துக்கொள்ளுங்கோ. இனிமேல் நாங்கள் உங்கடை மகளுக்கு எந்த தொல்லையும் கொடுக்கமாட்டோம். தொல்லை கொடுக்கிற எவரையும் விடமாட்டோம்.'

எண்டு கூறி சென்றுவிட்டார்கள்.

சிந்துஜனுக்கு கோபம் வரமாட்டுது. கோபம் வந்தால் எத்தனை எதிரிகள் நிற்கிறாங்கள் எண்டும் யோசியாமல் பாய்ந்து பாய்ந்து அடிப்பார். அவருடைய கழகத்துக்கு வெற்றிகளை அள்ளிக்கொடுத்ததும் அவருடைய துணிச்சல்தான்.

பத்து மணி இருக்கும் ... தபால்காரர் வங்கி கடிதம் ஒன்றை கொணர்ந்து தந்தார். உடைத்துப் பார்த்தேன்... ஆச்சரியமாக இருந்தது... அது ஒரு "கிரடிட் காட்." கடன் தொகை இருபதாயிரத்துக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. கடன் பெற்றால் மாதாந்தம் அவர் அனுப்பும் செலவுப்பணத்தில் இருந்து தானே அந்த தொகையை செலுத்தவேண்டும்.

அன்று மாலை வரை சுற்றுப்போட்டி நிகழ்ச்சிகள் நீடித்தன. பரிசுகள் நிறையவே வழங்கப்பட்டதால் அனைத்து கழகங்களும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன் மிகுந்த களையுடனும் அலுப்புடனும் வீடு திரும்பினார்... படுக்கையில் விழுந்தார்... குளிப்பு , சாப்பாடு, பானம் அனைத்தையும் துறந்து மறுநாள் நீண்ட நேரம் வரை தூங்கினார்.

பிள்ளைகள் பாடசாலை சென்று விட்டதால் வீடு அமைதியாக இருந்தது. பத்து மணி போல அவரை துயில் எழுப்பி குளிக்க வைத்து சுடுபானம் வழங்கினேன்.

திடீரென " ஓட்டோ " ஒன்று வாசலில் வந்து நின்றது. ஒரு பள்ளி ஆசிரியையும் எனது மகளும் மற்றுமொரு மாணவியும் அதில் இருந்தார்கள். ஆசிரியை இறங்கி வந்து காதோடு காதாக அந்த இரகசியத்தை கூறினார். எனது கண்களால் ஆனந்தக் கண்ணீர் பெருகியது...

நான் முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் 'எங்கள் மகள் பெரிதாகும் வயதை நெருங்கிவிட்டாள்' என்று சிந்துஜனுக்கு கூறிய போது அவர்... அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்தால் இருபத்தைந்து லட்சம் ரூபா செலவு செய்வேன் ..." என கூறியமை எனக்கு இப்போ நினைவு வந்தது.

சிந்துஜன் இளகிய மனம் உடையவர். அன்று முழுநாளும் வீட்டிலேயே தங்கியிருந்து விழாவுக்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று என்னுடன் ஆலோசித்தார். செலவினங்களை கணக்கு போட்டார். " ஹோல்" எடுத்து சாமத்திய வீட்டை செய்வதென்றால் மூன்று இலட்சம் அளவில் செலவாகும்... இனி பிள்ளைக்கு நகைகள் செய்ய வேண்டுமென்றால் அதற்கு பிறிதொரு தொகை வேண்டும்.

அன்றைய தினம் அவருக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்பு ஒன்று வெளிநாட்டில் இருந்து வந்து கொண்டிருந்தது. அவரது முகம் கறுத்தது. கவலையில் மூழ்கினார்.

"மேனகா... நான் உடனே வெளிநாடு போக வேண்டி இருக்குது. இண்டைக்கே வெளிக்கிட்டால் தான் கொழும்பிலை நிண்டு விமான பதிவு செய்து பயணம்செய்ய முடியும்.

எனக்கும் என்னுயிர் பிள்ளைகளுக்கும் பல வாக்குறுதிகளை அளித்த நிலையில் அவர் அன்று மாலையே தனி " வான் " ஒன்று ஒழுங்கு செய்து கண்ணீருடன் பயணம் புறப்பட்டார்.

என்னுடன் மகளும் ஓவென்று கதறி அழ, சிந்துஜன் பயணம் செய்த வான் எம்மேல் தூசியை வாரி இறைத்தபடி வேகமாக பாய்ந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜன் புது வீடு வாங்கி கொடுப்பது... தனி 'கார்' வாங்குவது... 'கிரடிட் காட்.' பெற்றுக்கொடுப்பது... பெரும் செலவில் சாமத்திய வீடு செய்வது என்பதெல்லாம் எங்களுக்கு தந்த வெறும் வாக்குறுதிகளே!

வெளிநாட்டில் அவருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சட்ட பூர்வமான மனைவி பிள்ளைகளுக்கு அவர் அந்த வசதிகள் அனைத்தையும் எப்போதோ பூர்த்தி செய்திருந்தார்...!

ஆனாலும் அவர்களது புதிய சிணுங்கல்களுக்கான காரணங்களை இனம் கண்டு, அவற்றுக்கு விரைந்து தீர்வு காண, அவர் எம்மை மறந்து அங்குதான் ஓடிக்கொண்டிருக்கிறார்!

ஞானம் - ஒக்.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

# "மங்கை ஒரு வேங்கையாக..."

என்னுடைய வாழ்கையில் நான் விட்ட மகா தவறை நிவர்த்தி செய்வதற்கு உசிதமான பாதைகள் எல்லாம் அடைபட்ட நிலையில் இன்று ஒரு நீண்ட பாதுகாப்பற்ற பயணத்தை மேற்கொள்வதற்காக என்றுமே கால் பதித்திராத இந்த இறங்குதுறைக்கு வந்து சேர்ந்திருக்கின்றேன்.

தபால் கந்தோர் வீதியால் உட்துறைமுக வீதியை வந்தடையும் சந்தியில் பிரதேச செயலகத்திற்கு எதிராக திருக்கோணமலை இறங்குதுறை மிகுந்த பொலீஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அமைந்துள்ளது.

'பத்தொன்பது வயது குமரிக்கு இந்த ஆட்டம் தேவைதானோ' என்று சக அலுவலர்களும் உயர்அதிகாரிகளும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் விமர்சிப்பதற்கு ஏதுவாக நான் விட்ட தவறுகள் இரண்டு. ஒன்று மலரவனை மனதார காதலன் என்றும் எதிர்கால கணவன் என்றும் நம்பி அவன் என்மீது பாலியல் உறவு பூண வாய்ப்பு அளித்தது! இரண்டாவது அந்நிகழ்வை பகிரங்கப்படுத்தியது.

என்மீது தீராக்காதலும் அழகில் மயக்கமும் பழக்கத்தில் பாசமும் கொண்டவன் என்று நான் திடமாக நம்பியிருந்த அவனை பொறுத்த வரையில் சுவர்களுக்கு மத்தியில் நடந்து முடிந்துவிட்ட அந்த நிகழ்வை வெளிச்சத்திற்கு கொண்டுவந்ததை எனது வக்கிரமான பாலுணர்வு வெளிப்பாடு என்று கொச்சைப்படுத்தினான்...!

நான் அதிர்ந்து விட்டேன்.

அவன் என்னை தனது காதலியாக மட்டும் பார்க்காமல் தனது மனைவி என்று உறுதி பூண்டிருந்தால் மட்டுமே என்மேல் உரிமை பாராட்டியிருக்க முடியும்! நான் எனது காதலன் என்று மட்டும் நேசிக்காமல் கணவன் என்று திடமாக நம்பியதன் வெளிப்பாடே எனது கள்ளம் கபடமற்ற நடத்தையும் பேச்சும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் என்னை காதலியாக மட்டுமே பார்த்தான் என்பதை சந்தர்ப்பங்கள் எனக்கு நன்கு உணர்த்தி விட்டது.

தொலைபேசியில் சமாதானம் செய்ய பலதடவைகள் முயன்றேன். என் சார்பில் பலர் அவனை வழிக்கு கொண்டுவர முயன்றனர்.

கிழமைகள் மாதங்களாயின.... மாதங்கள் வருடங்களாயின...

என்மேலான மலரவனின் காதல் மொட்டாகவே கருகிவிட்டது...

நல்ல குடும்பத்தில் பிறந்து இரண்டு சகோதரிகளுக்கு அக்காவாக இருக்கும் நான் இந்த ஒரு சந்தர்ப்பத்தின் பின்னர் எப்படி மலரவனை மறந்து மற்றொருவனை கைபிடிப்பேன்...?

எனது அலுவலக நண்பி ஒருத்தி பெண்களை பகடைக்காய்களாக பயன்படுத்தும் மலரவன் போன்ற துரோகிகளுக்கு பாடம் புகட்டக்கூடியதும் எனது வாழ்வுக்கு தீர்வு கிட்டகூடியதுமான ஆலோசனை ஒன்றை வழங்கினாள்...

எனது சம்பூர் பயணத்திற்கு அதுவே வித்திட்டது!

உடன் பிறந்த ஆண் சகோதரர்கள் இல்லாத எனக்கு அவள் காட்டிய வழி மெத்தச் சரி எனப்பட்டது...!

நான் சம்பூரை அடையும் வரையில் தாண்ட வேண்டிய கஸ்டங்கள் சோதனைகள் பற்றியும் அங்கு யாரிடம் முறைப்பாடுகள் கொடுக்கவேண்டும்... அவர்களது நடவடிக்கைகள் எப்படிப்பட்டன எவ்வாறு அமையும் என்பது பற்றியும் எனக்கு நண்பி விலாவாரியாக புருத்தியப் பிடித்தாள்.

மூதூருக்கான முதலாவது 'லோஞ்சு' ஏழுமணிக்கெல்லாம் புறப்பட ஆயத்தமானது. 'ஜெற்றி பொலீஸாரின்' சந்தேகமான பார்வையுடனான கேள்விகளுக்கு முகம் கொடுத்து 'லோஞ்சில்' ஏறி ஆசனம் ஒன்றில் அமர்ந்துகொண்டேன்.

' நோனா எங்கு போகிறீர்கள்? '

'கட்டைப்பறிச்சான் '

'ஏன் அங்கு போகிறீர்கள் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' உறவினர்களை பார்க்க'

சம்பூர் போவதாக கூறக்கூடாது என்று நண்பி புகட்டியிருந்தது உதவியாக இருந்தது.

போராளிகளின் வட்டச்செயலகம் சம்பூர் வைத்தியசாலையில் பெரும் பலத்துடன் இயங்கிக்கொண்டிருந்தது!

' லோஞ்சில் ' பிரயாணம் செய்வது எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. கடலில் பயணித்தபடியே கடற்காற்றை சுவாசிப்பது மகிழ்ச் சியை தந்தது. சிலருக்கு தலைச்சுற்று ஏற்பட்டது. பாதாள மலைப்பகுதியில் வந்ததும் பிரயாணிகள் மத்தியில் ' கசமுசா' பேச்சு எழும்பியது. நூற்றுக்கணக்கான பயணிகளை ' லோஞ்சுடன் ' சமாதி செய்த இடம் என்பது தான் மக்களின் ஆரவாரத்திற்கு காரணம். நல்ல வேளை, ஒரு சிறிய காற்று கூட பலத்துடன் வீசவில்லை , ' லோஞ்சில் ' பயணிகளின் எண்ணிக்கையும் அளவுடன் இருந்தது. ஓட்டிமார் மது அருந்தக்கூடாது என்பது தம்பிமாரின் கட்டளை.

மூதாரில் இறங்குதுறைக்கு காலை 8.00 மணிக்கு முன்னர் வரக்கூடியதாக இருந்தது. கடற்பயணம் பற்றித்தான் எனக்கு மிகுந்த பயம் இருந்தது. இப்போ அந்த தொல்லை விட்டது என்று ஆறுதலடைந்தேன். ஆனால் உண்மையான சோதனைகள் அதன் பின்னரே ஆரம்பமாகியது…

மூதூர் நகரின் எல்லைப்புறம் பாலை நகர். சுமார் முக்கால் மைல் தொலைவு.

சில ஆசிரியர்களுடன் சேர்ந்து 'ஆட்டோ' ஒன்றை வாடகைக்கு அமர்த்தி பயணித்தோம்.

மூதூருக்கான இராணுவ கட்டளைச்செயலகம் பாலை நகரிலேயே அமைந்திருந்தது. முக்கியமான ஒரு சோதனைச்சாவடி…

'ஆட்டோவில்' பயணித்த போது எதுவும் பேசாது அமைதியாக இருந்த ஆசிரியைகள் இறங்கியதும் எனக்கு பலமான எச்சரிக்கைகளை வழங்கினார்கள்.

அவர்கள் எதிர்பார்தபடியே நான் அங்கு தடுக்கப்பட்டேன். ஆசிரியைகள் எனக்காக சிறிது நேரம் தாமதித்து பின்னர் ஆட்டோவில் ஏறிச் சென்றுவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இதயம் திக் திக் என்று அடிப்பது எனது செவிகளுக்கு கேட்டது. மலரவனின் என்மேலான அன்பும் பாலியலுறவும் ஓரங்கட்டலும் எனது கண்களில் நீரை வரவழைத்தது.

இராணுவ அதிகாரி ஒருவன் நான் பயந்து அழுவதாக எண்ணி என்னை போகும் படி சைகை செய்தான்.

இராணுவத்தினர் சில சமயங்களில் சிறு குழந்தைகள் மேலும் பெண்கள் மீதும் பரிதாபம் காட்டுவார்கள் என கேள்விப்பட்டிருக்கின்றேன். மலரவன் போன்ற எங்களவர்களைக் காட்டிலும் அவர்கள் மேலானவர்கள் என எனது மனம் எண்ணியது.

பாலை நகரில் இருந்து சம்பூர் நான்கு மைல் தொலைவு இருக்கலாம் .தனி ஆட்டோ பிடிப்பதென்றால் மிகுந்த செலவு. யாராவது ஆண்கள் துவிச்சக்கர வண்டியில் சென்றால் உதவிக்கரம் நீட்டுவார்கள். மாட்டு வண்டில்களில் பயணிக்ககூடிய சந்தர்ப்பமும் கிடைக்கலாம்.

நான் மக்களுடன் சேர்ந்து நடந்தே சென்றேன். வெயில் தகித்தது. சம்பூருக்கு இன்னும் எவ்வளவு நேரம் என அவர்களை கேட்டால் ஒரு கூப்பிடு தூரம் என்பார்கள் இரண்டு மைல் தூரம் நடந்த பின் இப்போ எவ்வளவு தூரம் என்று கேட்டால் ஒரு கல்லெறிதூரம் என்பார்கள். அதன் பின் நீண்ட நேரம் நடந்தபின்பே சம்பூரை அடைந்தோம். நடைப்பயணத்தை எண்ணி ஏங்கிவிடாமல் இருக்க மக்கள் ஒருவருக்கு ஒருவர் அப்படி கூறிக்கொள்வதாக பின்னர் அறிந்தேன்.

உச்சி வெயிலில் ஒரு பெண்ணாக நான்கு மைல் தொலைவு பசியுடனும் தாகத்துடனும் நடந்ததை எனது வாழ்நாளில் மறக்கமுடியாது. ஆண்கள் சிறிதேனும் சிந்திப்பார்களா என்று நினைத்த போது எனக்காக மட்டுமன்றி அனைத்து பெண் சமூகத்திற்காகவும் கண்ணீர் சிந்தினேன்.

சம்பூர் வைத்தியசாலையில் போராளிகளின் வட்டச்செயலகம் இருந்தது. அருகில் இருந்த சம்பூர் மகாவித்தியாலயத்தில் மக்களுக்கும் அலுவலகர்களுக்குமான பயிற்சிகளும் கூட்டங்களும் நடைபெற்றன.

களைத்து விழுந்து அலுவலகம் சென்ற என்னை ஒரு இளைஞன் ஆசனத்தில் அமர்த்தி மோர் வழங்கினான். பசிக்களை ஆறியது. உடனேயே பொறுப்பான அலுவலரையும் சந்திக்க கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை பற்றிய விபரம் முறைப்பாடு பற்றியெல்லாம் விரிவாக கேட்டு தெரிந்து கொண்ட பின் அவர் அமைதியாக பேசினார்.

' நீங்கள் எங்களை நம்பி இங்கு வந்ததற்காக எமது தலைவர் சார்பில் உங்களுக்கு நன்றி கூறுகின்றோம். இயன்ற வரை முயற்சி செய்து உங்களுக்கு உதவுவது எங்கள் கடமை. உங்கள் பிரச்சனை ஒரு பெண்ணுக்கு நேர்ந்த அநீதியாக தெரிவதால் இது பற்றிய விசாரணையை மகளிர் பொறுப்பாளர் காவ்யாவே செய்யவேண்டும். அவர் இன்று கைமுந்தன் ஆறு ' சென்றியை ' பரீட்சிக்க சென்றுள்ளதால் உங்கள் விசாரணையை நாளையே செய்ய முடியும்.

அவர் அப்படி கூறிமுடிக்கவும் நான் ஓவென்று கதறி அழுதுவிட்டேன்.

எனது அநாதரவான தன்மையை நான் அச்சமயம் உணர்ந்ததால் ஏற்பட்ட விழைவு அது.

அதனை உணர்ந்த அந்த அலுவலர்.... 'நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை ... உங்களை ஒரு குடும்பத்துடன் தங்க வைப்பதற்கும் உங்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் நாங்கள் இருக்கின்றோம்.'

அன்று நான் ஒரு குடும்பத்துடன் தங்கினேன். தாய் தந்தை இரு பெண்பிள்ளைகள். அன்புடன் உபசரித்தார்கள். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் இளைஞர்களுக்கு இருக்கும் திறமை பற்றி புகழ்ந்தார்கள். வர்ணம் என்பவர் படைப்பிரிவிற்கு பொறுப்பாக இருப்பதாகவும் ஒவியன் என்பவர் விசாரணைக்கு பொறுப்பாக இருப்பதாகவும் காவ்யா பெண்கள் சார்ந்த விசாரணைக்கு ஒத்தாசை புரிவதாகவும் கூறினர்.

எனக்கு நம்பிக்கை பிறந்தது. அமைதியாக தூங்கினேன்.

மறுநாள் எனக்கான விசாரணை நடைபெற்றது. ஒவியன் பற்றி அறிந்திருந்தேன். இப்போது நேரில் பார்க்கின்றேன். அருகில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளே காவ்யா என்பதை பின்பு தெரிந்து கொண்டேன்.

ஒவியன் அன்புடன் பேசினார்... நகரில் நிலவரங்கள் பற்றி விசாரித்தார்... பின்னர் எனது முறைப்பாடு பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறும்படி கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கண்ணீருக்கு மத்தியில் நடந்த சம்பவங்களை விபரித்தேன்...

பின்னர் அவரே பேசினார்... 'ஆண்கள் பற்றி அந்தக்காலம் முதல் பெண்கள் சார்பில் முறைப்பாடுகள் இருந்து கொண்டேயிருக்கின்றன... நீங்கள் ஏன் திருந்துவதாக இல்லை...?

நான் தலையை குனிந்துகொண்டேன்...

யாரும் அற்ற அந்த நேரத்தில் மலரவன் எப்படி என்னை தனது வீட்டுக்கு அழைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்பதை நான் விபரிக்கையில் அவர் ஒருகட்டத்தில் திடீரென காதுகளை இரு கரங்களாலும் பொத்திக்கொண்டார்.

பின்னர், 'இதற்கு மேல் உங்களை காவ்வியா விசாரணை செய்வார்' என்று கூறி எழுந்து சென்று விட்டார். அதுவரையில் ஒரு புன்சிரிப்புடன் அமர்ந்திருந்து நான் கூறுபவைகளை செவி கொடுத்து கேட்டுக்கொண்டிருந்த காவ்வியாவின் முகம் இப்போ இறுக்கமடைவதை பார்க்க எனக்கு பயமாக இருந்தது.

தனது ஆசனத்தை மாற்றிக்கொண்ட அவர் என்னை உற்றுப்பார்த்தபடி கூறினார்.

' ஒரு பெண்ணாக இருந்து கொண்டு கூறுகின்றேன்.... உம்மை மலரவன் கட்டாயப்படுத்தி வீட்டுக்கு அழைத்ததாகவும் உமது சம்மதம் இன்றி பாலியலுறவு பூண்டதாகவும் நீர் கூறுவது பொய். இதற்கெல்லாம் சரியான பின்னணி இல்லாமல் இப்படி நடந்திருக்கமுடியாது. நீர் உண்மையான சம்பவங்களை விபரிக்காத இடத்து உமது வழக்கை என்னால் எடுக்கமுடியாது ....

நான் நடுநடுங்கி விட்டேன். உண்மை அனைத்தையும் அவர் முன்போட்டு உடைத்தேன்...

' மலரவன் என்னைக்காதலித்தார். நானும் ஒருகட்டத்தில் அவரை விரும்பினேன். தொலைபேசியில் அடிக்கடி பேசுவது... சந்தர்ப்பம் கிடைத்தால் பொது இடங்களில் நேரில் கதைப்பது என்று தான் நீண்டகாலம் எங்கள் காதல் இருந்தது. அன்றைய தினம் அவரது பெற்றோர் ஊர் சென்றுவிட்டதால் அவர் தொலைபேசியில் என்னை வீடு வரும்படி வற்புறுத்தினார்... நான் மறுத்தேன்... அவர் விடவில்லை... தன்னை உண்மையாக நேசிப்பவளாக இருந்தால் கட்டாயம் வரவேண்டும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராது போனால் என்மேலான காதலையே தான் துறந்துவிடப்போவதாகவும் உறுதிபட கூறினார்....

காவ்யா இடைநிறுத்திகேட்டாள் ... 'அதனால் நீர் போனீரா?' நான் 'ஆம்' என்று தலையாட்டினேன்.

காவ்யா இப்போ அதட்டினார்... அதனை என்னால் நம்பமுடியாது.... உமது பாலியல் பலவீனமே உம்மை அங்கு அனுப்பிவைத்தது... அல்லது மலரவன் உம்மை மணப்பதை உறுதி செய்து , அவரை மாப்பிள்ளையாக அடைய திட்டமிட்டீர் ... அதனாலேயே நீர் தனித்து யாருடைய துணைகூட இல்லாமல் அங்கு சென்றீர்...'

என்னை சாட்டை கொண்டு யாரோ அடிப்பது போல் துவண்டேன் ... கண்ணீர்கரைபுரண்டு ஓடியது ...மேசையில் கைகளை மடித்து தலையை கவிழ்த்துக்கொண்டு விம்மி விம்மி அழுதேன்.

அறையில் சிறிது நேர நிசப்தம். காவ்யா தனது ஆசனத்தில் இருந்து என்னருகே எழுந்து வருவதை உணர்ந்தேன்... எனது முதுகை தடவி தேற்றினார்.

' நான் உம்மை தப்பாக எண்ணவில்லை ... நீர் நல்ல பிள்ளைதான். ஆனால் நீர் ஏதோ ஒரு உண்மையை மறைக்கிறீர். அது ஒரு வேளை விசாரணைகளுக்கு குந்தகமாக அமையலாம் என்பதால் தான் கோபம் கொண்டேன். நீர் படித்த பெண்... தொழில் பார்ப்பவள்... தற்கால நிலவரங்களை ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர். நீராக சென்று வலையில் விழுந்திருக்க மாட்டீர்... நீர் உண்மையைக் கூற விரும்பாவிட்டால் பரவாயில்லை...'

நான் மேசையில் இருந்து தலையை நிமிர்த்தினேன். முகத்தை அழுத்தி துடைத்தபின் கூறினேன்...

' நீங்கள் சொல்வதை நான் ஏற்கின்றேன்... நான் தொழில் புரியும் அலுவலகத்திலேயே எனக்கு ஒரு பகையாளி இருந்தாள்... என்னுடன் போட்டி போடுவது ... என்னைப்பற்றிய குறைபாடுகளை மலரவனுக்கு தொலைபேசியில் உடனுக்குடன் அறிவிப்பது இவைதான் அவளது அலுவலக கடமை என எண்ணினாள் போலும் . என்னை விட சற்று அதிக நிறமான அவள் மலரவனை என்னிடமிருந்து மீட்டு தான் விவாகம் புரியப் போவதாக சிலரிடம் சவால் விட்டமையை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருந்தேன். இதனால் நான் மனச் சஞ்சலம் அடைந்திருந்தேன். அதனால் தான் என்னால் மலரவனின் வேண்டுகோளை மறுக்கமுடியவில்லை...

காவ்யாவின் முகத்திலும் இப்போ சோக ரேகைகள் படர்ந்தன. பெண்களே பெண்களுக்கு பகை என்பதை நினைத்து அவளே வருந்தினாள் போலும்... அவள் வினாவினாள்.

'பின்னர் வீட்டில் நடந்தது என்ன...?'

சில நிமிட மௌனத்தின் பின் கூறினேன்...

' நானும் ஒரு சாதாரண பெண். 'ரீன் ஏச்' வயதில் உள்ளவள் என்பதை நான் அவனுக்கு பணிந்து சென்ற சந்தர்ப்பங்களே எனக்கு உணர்த்தின... அவனே எனது கணவன் என்று உறுதியாக நம்பி இருந்த எனக்கு அந் நேரம் அவன் கூறிய உறுதி மொழிகள் ஒன்றல்ல இரண்டல்ல... ஆனால் பல பெண்கள் போல நானும் சோரம் போய்விட்டேன் என்பதை நினைத்து நினைத்து அழுதேன்....

என்னை அனுபவித்து விட்டதான திருப்தி அவனுக்கு பெரும் மனமகிழ்ச்சியை கொடுத்தது. என்மேலான தீராத ஆசையை தணித்துவிட்டது... நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி கழிந்து போயின... எனது வேண்டுகோளையும் என் சார்பில் பேச சென்றவர்களின் வாதங்களையும் அவன் உதாசீனம் செய்தான்.

காவ்யாவின் கண்கள் கூட பனித்தது. எனக்கு ஆறுதல் கூறி தேற்றினாள் பல உறுதிமொழிகளை வழங்கினாள்...

' நீங்கள் போகலாம். நாங்கள் இப் பிரச்சனையை ஆராய சில வாரங்கள் கூட ஆகலாம்... அதன் பின்னர் உங்களுக்கு விசாரணைக்கான திகதியை அறிவிப்போம் அப்போ வந்தால் போதும்.

நான் அன்றைய தினமும் சம்பூரிலேயே தங்க நேரிட்டது. எனது முறைப்பாடு பற்றி தெரிந்து கொண்ட அக்குடும்பத்தினர் அடுத்து நடக்கப் போவன பற்றி அறியத்தந்தார்கள்...

ஓவியனின் தலைமையில் காவ்யா உட்பட முக்கிய பிரமுகர்கள் எனது பிரச்சனை பற்றி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வர். பின்னர் அவர்களது புலனாய்வு பிரிவு உறுப்பினர்கள் மூலம் மலரவன் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பற்றியும் தகவல்கள் திரட்டப்படும். அதன் பின்னர் விசாரணைக்கான திகதி அறிவிக்கப்படும்.

நான் மறுநாள் அதிகாலை எழுந்து பயணம் புறப்பட்டு நகரை அடைந்தேன்.

நான் சம்பூர் சென்று புகார் கொடுத்தது அரசல் புரசலாக பலருக்கும் தெரிய வந்திருந்தது. எனது பகையாளி பெண் பயந்து ஒதுங்கி விட்டாள். மலரவனுக்கு என்மேல் பெரும் கோபம் ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன்.

இரு வாரங்களில் விசாரணைக்கான திகதி அறிவிக்கப் பட்டிருந்தது. எனது ' லோஞ்சிலேயே' அவனும் பயணம் செய்தாலும் என்னுடன் பேசவில்லை. மூதூர் இறங்கு துறையில் தானாகவே வந்து என்னுடன் பேசினான். தனது பெற்றோருக்கு இந்த விவாகத்தில சம்மதம் இல்லை என்றும் மற்றும்படி தனது பிழை எதுவும் இல்லை என்றும் கூறினான்...

மூதூர் இறங்குதுறையிலிருந்து சம்பூருக்கு எப்படி போகவேண்டும் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை . அதனால் அச்சமயம் அவனுக்கு எனது உதவி தேவைப்பட்டது. நானும் விடவில்லை... நான் அனுபவித்த துன்பம் அவனும் அனுபவிப்பது தானே கணவன் மனைவிக்கு அழகு என்ற எண்ணத்தில் பாலை நகரிலிருந்து கட்டைப்பறிச்சான் பாலம் சூனியப்பிரதேசத்தினூடாக நான்கு மைல்கள் நடத்தியே கூட்டி சென்றேன்.

இந்த அனுசரிப்பையும் ஒத்துழைப்பையும் வாழ்க்கையிலும் தொடர மலரவன் சம்மதித்தால்...? என்று நினைத்தபோது எனது மெய் சிலிர்த்தது!

நாங்கள் சம்பூர் வட்ட செயலகத்துக்கு சென்றதுமே விசாரணைக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

மலரவனே முதலில் விசாரிக்கப்பட்டார். ஓவியன் விசாரணைக்கு தலைமை தாங்கினார். காவ்யாவும் இருந்தாள். பல தடவைகள் ஓவியன் அதட்டி பேசுவது கேட்டது.

சிறிது நேரத்தில் நானும் அழைக்கப்பட்டேன். ஓவியன் கூறினார்...

' நீங்கள் இருவரும் சிறு பிள்ளைகள் அல்ல. நீங்கள் நடந்து கொண்ட விதம் பாரதூரமானது ! அதற்கு அம்மா அப்பாவோ வேறு எவருமோ வகை கூறமுடியாது. நீங்கள் கணவன் மனைவியாக இணைவதையே இந்த செயலகம் எதிர்பார்க்கிறது. உங்கள் பெற்றோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதத்தை பெறுவதற்கு இரு வார கால அவகாசம் தருகிறோம். நீங்கள் நல்ல முடிவுடன் அடுத்த தவணைக்கு வரவேண்டும்...'

மறுதவணையும் வந்தது இருவரும் ஒருமித்து பயணம் செய்தோம் மலரவன் தனது தந்தை ஒரு இதய நோயாளி என்பதற்கான மருத்துவ சான்றிதழ்களை கையளித்ததுடன் அவரது விருப்பத்துக்கு மாறாக தான் நடந்தால் அவருக்கு ஏதாவத விபரீதம் ஏற்படலாம் என்றும் வாதிட்டார்.

அவர்களது பாட்டாளிபுரம் தளத்தில் (பங்கர்) மலரவனை தடுத்து வைத்து வேலை வாங்கும் படியும் அவரது சம்மதத்தை பெறாது அவரை விடுதலை செய்ய வேண்டாம் என்றும் ஓவியன் கட்டளையிட்டார்

நான் திரும்பிவிட்டேன்...

இரு நாட்கள் மலரவன் அத் தளத்தில் தங்கியிருந்து தனது பிடிவாதத்தை சாதிக்கப்பார்த்தார். இளைஞர்கள் இறங்கிப் போகவில்லை. மூன்றாவது நாள், தான் விசாரணை முடிவை ஏற்பதாக ஒப்பமிட்டு நகர் திரும்பினார்.

எப்படியாவது எனக்கு ஒரு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை எனக்குள் மெல்ல முகிழ்த்தது...

இரு வாரங்களின் பின்னர் மீண்டும் அழைப்பாணை வந்தது. மலரவன் என்னுடன் பிரயாணம் செய்யவில்லை.

வட்ட செயலகத்தை நான் அடைந்த போது காவ்யா என்னை எதிர்கொண்டு வரவேற்று அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றாள். சிரித்து சிரித்து பேசினாள்...

பாட்டாளிபுரம் தளத்தில் மலரவன் பட்ட பாடுகளை சொல்லி சொல்லி சிரித்தாள்...

எப்படியும் மலரவன் நல்ல முடிவுடன் வருவான் என்று உறுதி செய்தாள். நேரம் சென்று கொண்டே இருந்தது. கடைசி ' லோஞ்சில் " வந்து சேர வேண்டியவர்களே வந்து விட்டார்கள். மலரவன் வரவில்லை.

காவ்யாவால் கோபத்தை அடக்க முடியவில்லை நகரில் உள்ள புலனாய்வு துறையினருடன் மொபைல் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தாம் விசாரணைக்கு சமூகமளிக்க வேண்டிய திகதி பற்றி அவனுக்கு நேரில் அறிவித்து விட்டதாகவும் வராததற்கான காரணத்தை தாம் சில நிமிடங்களில் பெற்றுத்தருவதாகவும் அறிவித்தார்கள்.

சில நிமிட நேரத்தில் அவர்களது தொலைபேசி அழைப்பு வந்தது... என்ன? பொலிஸ் படையில் சேர்ந்து விட்டானா? கட்டுக்குருந்த பொலிஸ் பயிற்சி நிலையத்தில் ஆறுமாத பயிற்சியா? ஏற்கனவே கொழும்பு சென்றுவிட்டானா?'

காவ்யாவின் கைகள் நடுங்கின... தொலைபேசியை ' ஆப்' செய்தாள். மேசையில் வீசினாள்...

' நோ... நோ... அவனை விடமுடியாது. என்ன விலைகொடுத்தாலும் பரவாயில்லை... ஒரு தமிழ் பெண்ணுக்கு துரோகம் செய்து விட்டு தப்பப் பார்க்கிறானா? அவனை மண்டையில் போடாமல் விடமாட்டேன். 'என்று கூறி மேசையில் அறைந்தவள் தனது ஆசனத்தை உதறி எறிந்துவிட்டு இறங்கி ஆத்திரத்துடனும் அவமானத்துடனும் வேகமாக நடந்தாள்...

நான் .....

'காவ்யா அக்கா...' என்று உரத்து அழைத்தேன்...

எனது குரல் கேட்டு தனது வேகமான நடையை தளர்த்தி திரும்பி பார்த்தாள்...

எனது குரலின் உச்சஸ்தாயில் நான் கூவினேன்...

'அக்கா... இனி நான் ஒரு நிமிடம் கூட அவனுக்கு மனைவி இல்லை. இந்த நிமிடம் முதல் நான் ஒரு போராளி... இப்படியான வக்கிரபுத்தி உடைய ஆண்கள் அத்தனை பேருக்கும் எதிரான போராளி...!'

காவ்யாவின் மெய் சிலிர்த்திருக்க வேண்டும்.... ஒரு கண நேர தாமதம் தான்... என்னை நோக்கி ஓடோடி வந்தாள்... ஆனந்த கண்ணீர் பொங்க என்னை இறுக அணைத்து தோளுக்கு மேலாக இருகைகளையும் நீட்டி எனது முதுகை பெருமையுடன் தட்டிக் கொடுத்தாள்!

ஞானம் - பெப்.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

# நிமா என்கிற நிரோஷிமா.

ஏறத்தாள நான்கு தசாப்த கால அரச சேவையில் இருந்து ஒய்வு பெற்ற நான் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றில் திட்டமுகாமையாளராக இணைந்து கொண்டேன்...

நகரின் மத்தியில் தபால் அலுவலகத்திற்கு மிக அண்மையில் அந்த அலுவலகம் அமைந்திருந்தது. நிரோஷிமா ஒரு சிங்கள யுவதி. அவளை அங்கு நான் முதன் முதலில் சந்தித்தபோதே. அவள் மேல் எனக்கு பரிவும் பாசமும் ஏற்பட்டன. மெலிந்த உடல்... வெள்ளை நிறம்....கனிவான பேச்சு...அடக்கமான சிரிப்பு...

ஓரளவு தமிழ் கற்றிருந்தாள்... தான் அறிந்த தமிழில் என்னுடன் உரையாடினாள். நான் பணிபுரியும் நிறுவனம் யுத்தம் நிமித்தம் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கும் தொடர்ந்து வறுமையில் வாடும் மக்களுக்கும் சேவை புரிவதனை இலக்காக கொண்டிருந்தது. அதன் பொருட்டு அம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த... நீரும் சுகாதாரமும் சார்ந்த வசதிகளை வழங்குதல் பால்நிலை சமத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தல் ஆகிய துறைகளில் அளப்பரிய சேவையில் ஈடுபட்டது.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதி உதவி வழங்கின. அந்த வகையில் யு.எஸ்.எயிட் நிறுவனம் எமது நகரின் கடைத்தொகுதி உள்ளடங்கலாக பாரிய பேருந்து நிலையம் ஒன்றினை அமைக்க முன்வந்தது. மூன்று சமூகத்தினரும் பயன்படுத்த தக்க வகையில் அமையத்தக்க அந்த செயற்றிட்டத்திற்கு சிங்கள மொழி பேசும் கள உத்தியோகத்தரின் சேவை அவசியமாக இருந்தது. அந்த வெற்றிடத்தை நிரப்பியவரே நிமா என்கிற நிரோஷிமா...

நாற்பது பணியாளர் சேவையாற்றும் எமது அலுவலகத்தில் அவள் ஒருத்தி மட்டுமே சிங்கள அலுவலராக இருந்ததாலோ என்னமோ அவள் முகத்தில் பயந்த சுபாவம் எப்போதும் குடிகொண்டிருந்தது. ஆனால் அனைவருடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகஜமாக பழகினாள். ஒரு நாள் காலை அவள் எனது அலுவலக அறைக்கு முன்பாக நின்றிருந்தாள். கடமை நிமித்தம் நான் அவளை அதிக நேரம் காத்திருக்க வைத்துவிட்டேனோ... என்ற குற்ற உணர்வுடன்....

'உள்ளே வா நிரோஷிமா'...என்று அழைத்தேன்.

'சேர்... உங்களோட கொஞ்சம் பேசனும்...முடியுமா?' என்று வினவினாள்.

'கட்டாயம்... கட்டாயம்... சொல்லுங்கோ' நான் அவளை தூண்டினேன்.

'அது சேர்.... அது சேர்... 'சொற்கள் தடுமாற கண்ணீர் வடித்தாள்...

'ஐயய்யோ... ஏன் நிமா அழுகிறீர்.... மற்றவை, நான் உம்மை ஏசிப்போட்டன் என்று தப்பா நினைக்கபோகின. அழுகிறதை விட்டுட்டு சொல்ல வந்த விஷயத்தை பயப்படாமல் சொல்லும்...

நான் உற்சாகப்படுத்தினேன்... அதன் பின்னர் ஆறுதலடைந்து கைகுட்டையால் முகத்தை துடைத்தபடி சிரித்தாள். பின்னர் பேசினாள்...

'அது சேர் ... நான் கலியாணம் முடிக்க போறது...!

ஓம்...ஓம்... அது நல்ல விசயம் தானே...அதற்கு ஏன் அழுகிறீர்...? நல்லாய் சிரிக்க வெல்லோ வேணும்.... அது சரி 'லவ் மரீச்' தானே...?

அப்படி கேட்டுவிட்டு நாக்கை கடித்துக்கொண்டேன். எனக்கு எப்போதுமே ஒரு தப்பபிப்பிராயம்... சிங்கள யுவதிகள் எல்லாருமே ' ல்வ'' பண்ணித்தான் விவாகம் செய்கின்றார்கள் என்று... ஆனால் சாதகமான பதில் எனக்கு கிடைத்தது... ' ஓம் சேர்'... காதலிச்சு கட்டுகிற கலியாணம்...' எனக்கோ ஆச்சரியம்... இருபது வயதுதான் அவளுக்கு இருக்கலாம். கழுத்தில் கையில் பெரிதாக எதுவும் இல்லை. கிடைக்கின்ற சம்பளமும் வெறுமனே பத்தாயிரம் ரூபா மட்டுமே... இப்போது என்ன அவசரம்... வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை.

'சரி..சரி...' எங்க காதலிச்சனீர்... எப்படி காதலிச்சனீர்...?' எந்த இன, மத.மொழி பெண்களுக்கும் நாணம் என்பது பொதுவானதொரு இயல்புதான் போலும்...! அவளும் பூமித்தாயை பெருவிரல்களால் சுரண்டி துணைக்கு அழைத்தாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை 'பீச்சிலை' யு.எஸ்.எயிட் சமாதான பட்டம் விட்டதுதானே...?
'ஓம் ஓம் சொல்லும். அங்கை தான் நான் அவங்களை சந்திச்சது...'
'சந்திச்ச உடனே காதல் வந்திட்டுதோ...?'

' இல்ல... இல்ல... அவங்கட பட்டம் அறுந்து போயிடுச்சு. நான் அதை பிடிச்சு கொடுத்தது... ' சரி சரி இப்ப விளங்குது.' அது பெரிய விஷயம் தான்...! அப்ப ஆர் பெடியன் எண்டு சொல்லுமன் ' அதுதான் சார் பிரச்சனை... அவர் எங்கடை சாதி ஆள் இல்ல... அவர் முஸ்லிம். இரண்டு வீட்டிலையும் பெரிய பிரச்சனை. 'அவர் என்ன தொழில்...?'

'இன்னும் 'ஜொப்' இல்ல சார்....' 'அப்ப கலியாணத்தை தள்ளிப்போடுமன்...' 'நாங்க இரண்டுபேரும் வீட்டாலை ஓடிப்போனது...!' இந்த சம்பவத்திற்கு பிறகு அவள் மீது மேலும் பரிதாபம் ஏற்பட்டது. கள உத்தியோகத்தர் பதவிக்கு மேலதிகமாக அவளுடைய சேவை எமது நிறுவனத்திற்கு அவசியம் என நிருவாகம் உணரும் வண்ணம் பல வேலைகளில் ஈடுபடுத்தினேன். ஏனெனில் கள உத்தியோகத்தருக்கான சேவைக்காலம் அவ்வருட இறுதியுடன் முடிவடைய இருந்தது அத்துடன் அச்செயற்றிட்டம் பூர்த்தியடைந்துவிடும். அவளது வேலையும் பறிபோய்விடும்.

அவ் ஆண்டுக்கான தொழில் சந்தை ஒன்றை பாரிய நிதியீட்டத்துடன் நடாத்துவதற்கு 'யு.எஸ்.எயிட்' நிறுவனம் திட்டம் ஒன்றை வரைந்திருந்தது. அதை அமுல்படுத்தும் பொறுப்பு எமது நிறுவனத்திற்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது.

அதன் பொருட்டு முதலில் பலவிதமான தொழில்பயிற்சிகளை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி அவர்களது உற்பத்தி முயற்சிகளை ஊக்குவிப்பதுடன் உற்பத்தி பொருட்களை அத்தொழில் சந்தையில் அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நிர்வாகத்தால் எனக்கு வழங்கப்பட்டிருந்தது.

நிமா மெலிந்த தோற்றமுடையவள். எழிதில் களைத்துவிடுவாள். ஆனால் அவளது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவள் பல பணிகளை செய்யும் வண்ணம் தூண்டினேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தமிழில் வரைவு செய்யும் கடிதங்கள் , துண்டுப்பிரசுரங்கள், 'பனர்ஸ்' ஹங்கர்ஸ்' ... அனைத்தையும் அவளை வைத்தே சிங்களத்திற்கு மொழிமாற்றம் செய்தேன்.

பிரச்சாரத்திற்காக இரண்டு வாகனங்கள் அலங்கரிக்கப்பட்டன. ஒலிபெருக்கி மூலம் மாவட்டம் தழுவிய அளவில் விளம்பரம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. பிரதான பொலிஸ் நிலையங்கள் அனைத்திலும் ஒலி பெருக்கி பயன்பாட்டிற்கான அனுமதி பெறப்பட வேண்டியிருந்தது. விண்ணப்பங்களும் அது சார்பான ஆவணங்களும் சிங்கள மொழியில் பூர்த்திசெய்ய வேண்டிய நிலையிலிருந்தது.

நிறுவனத்திற்கு உரிய வாகனத்தில் நிமாவுடன் இணைந்து அனைத்து பிரதான பொலிஸ் நிலையத்திற்கும் சென்று ஒலிபெருக்கி பாவனைக்கான அனுமதியை பெற்றேன்.

நிமாவின் பூரண ஒத்துழைப்பு எனக்கு கிடைத்தது...மூன்று நாட்கள் அவள் தனது இயலாமையுடன் நீண்ட தூர பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தேனீர், சிற்றுண்டி, உணவு எவற்றிற்கும் நிறுவனம் கொடுப்பனவு வழங்குவதில்லை . மூன்று நாட்கள் ஏறத்தாள பட்டினிதான்... இறுதி நாள் நிமாவிற்கு இழுப்பு வருத்தம் பிடித்துவிட்டது.

தொழில் சந்தை நிகழ்வுக்கு சில தினங்கள் இருந்தமையால் அவளுக்கு ஓய்வு வழங்கினேன்.

நிர்வாகம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அரச அதிபர் உள்ளிட்ட பலருக்கு சிங்களத்தில் அழைப்பிதழ் அனுப்பும் பணியில் நிமாவை ஈடுபடுத்தும் படி நிர்வாகம் கேட்டுக்கொண்டது. எனது அறிவித்தலின் பேரில் வருத்த நிலையிலும் அவள் அலுவலகத்திற்கு வருகை தந்தாள்.

நிமா, கணனியில் சிறந்த பயிற்சியும் அனுபவமும் பெற்றிருந்தாள். அழைப்பிதழ் அழகிய முறையில் தயார்செய்யப்பட்டிருந்தது. பல அரச உயர் அதிகாரிகளுக்கு அவளே அவற்றினை நேரில் விநியோகம் செய்தாள்.

அடுத்தடுத்த நாட்கள் அவள் மீண்டும் அலுவலகத்திற்கு வரவில்லை. அவளது கணவன் என்னை சந்தித்து அவளது சுகயீனம் பற்றி தெரிவித்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் எப்போதும் ஒரு தலைப்பட்சமாகவே சிந்திக்கும். அரச சார்பற்ற நிறுவனங்கள் 'மக்கள் சேவை, மக்கள் சேவை' என்று ஆயிரம் தடவைகள் அடித்து கூறினாலும் அவர்களது நோக்கம் இலாபம் சம்பாதிப்பதாகவே இருந்தது. அதனால் அலுவலரது கஸ்டங்கள் பற்றி சிந்திப்பதில்லை. வேலை வாங்குவதையே பிரதானமானதாக கருதும். ஒரு செயற்றிட்டத்திற்காக நியமிக்கப்பட்ட ஊழியர் அதற்கான சம்பளத்தை பெறுவார். ஆனால் ஏனைய பல செயற்றிடங்களுக்கு அவரது சேவை இலவசமாக வேண்டப்படும். முப்பது நாட்கள் வேலை செய்தமைபற்றி கதைக்கவோ பாராட்டவோமாட்டாது . ஒருபொழுது இல்லையெண்டால் அதையே தூக்கிபிடிக்கும். நிமா ஒரிரு நாட்கள் அலுவலகத்திற்கு வராமையால் நிர்வாகம் அவளைப்பற்றி குறைகூற ஆரம்பித்தது.

நிமா இப்போது முன்னர் போல வேலை செய்வதில்லை. அவாவிற்கு வழங்கப்படும் சம்பளம் அநியாயம். நிமாவை வேலையால் தூக்க வேண்டும். பேருந்து நிலைய செயற்றிட்டம் நிறைவடைந்தால் நிறுவனத்தால் அவளுக்கான சம்பளம் வழங்க முடியாது. அலுவலர் மத்தியில் இந்த கதைகள் பரவின. அது நிமாவின் காதுகளுக்கும் எட்டியிருக்க வேண்டும். சில வாரங்களிற்கு முன்னர் நிமாவின் கணவருக்கு வேறொரு நிறுவனத்தில் சிறு தொழில் ஒன்று கிடைத்திருந்தது. எனவே நிமா தங்களுக்கென சில பொருட்களை தவணை செலுத்துகை அடிப்படையில் வாங்க விரும்பினாள். எனவே என்னை அணுகி தனது கருத்தை கூறியதுடன் தான் அப்படி பொருட்களை கொள்வனவு செய்தால் தவணைப்பணத்தை தொடர்ந்து கட்டகூடியதாக தன்னை தொடர்ந்து வேலையில் வைத்திருக்க முடியுமா என என்னை வினாவினாள். அவள் கவலைப்படுவதை நான் காண விரும்பவிலையாதலால் அவளுக்கு ஆறுதல் கூறி அவளது செயற்றிட்டம் முடிவடைந்தாலும் வேறு செயற்றிட்டத்திற்கு சிபார்சு செய்வேன் என உறுதி கூறி அனுப்பியிருந்தேன்.

அந்த சம்பவம் இப்போது எனது நினைவில் வர, அவளை உடனே வேலைக்கு வரும்படி செய்தி அனுப்பியிருந்தேன். வருத்த நிலையிலும் எனது சொல்லைத்தட்டாது. அலுவலகத்திற்கு சமூகமளித்தாள்.

தொழில்சந்தை நிகழ்வுகள் தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற இருந்தன. வரவேற்புரை , நன்றியுரை இரண்டையும் முற்கூட்டியே சிங்களத்தில் வரைபு செய்து கொண்டோம். மக்களுக்கு விநியோகிப்பதற்கான " நோட்டீஸ்' சிங்களத்திலும் தமிழிலும் ஒரே கடதாசியில் அச்சடிக்கும் விதமாக வரைபு நிமாவின் உதவியுடன் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுக்கும் சற்று அதிகமான பயனாளிகள் பங்கு பற்றிய தொழில் சந்தை மிகப்பிரமாண்டமான முறையில் நடந்தேறியது. இலட்சக் கணக்கானோர் வருகை தந்ததுடன் பெருமளவில் பொருட்களை கொள்வனவு செய்தனர். விருந்தினரை வரவேற்பது முதல் மேடையில் உரையாற்றுவது, முக்கிய அறிவித்தல்களை அவ்வப்போது வாசிப்பது நன்றியுரையாற்றுவது வரை நிமா ஓடி ஓடி உழைத்தாள்.

வருட இறுதிக்கு இரண்டு மாதங்கள் இருக்கையில் தொழில்சந்தை முடிவுற்றது. பேருந்து நிலைய செயற்றிட்டம் முடிவடைய இன்னும் இரண்டுமாதங்களே எஞ்சியிருந்தன.

அடுத்த வருடத்திற்கு புதிய செயற்றிட்டங்களை நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பொறுப்பு அலுவலர் மீது திணிக்கப்பட்டது.

ஏறத்தாள வாழ்வா சாவா என்ற நிலையில் அலுவலர் ஒவ்வொருவரும் பல நிதி நிறுவனங்களை நாடி சென்றனர். நிமா மட்டும் சும்மா இருந்துவிட முடியுமா... அவள் சந்தித்த சில நிதி நிறுவனங்கள் தாம் வாழ்வாதார மேம்பாட்டுக்கான ஒத்துழைப்புக்களை மக்களுக்கு வழங்க போவதாகவும் கிராமிய மட்டத்தில் அடிப்படை தரவுகளை பெற்றுத்தரும் பட்சத்தில் எங்கள் நிறுவனத்திற்கு ஊடாக வாழ்வாதார செயற்றிட்டங்களை அமுல்படுத்த நிதி வழங்குவதாகவும் உறுதியளித்தன.

நிமா எனது ஆலோசனையுடன் குறிப்பிட்ட சில சிங்கள கிராமங்களில் தரவுகளை சேகரித்து சமர்ப்பித்தாள். அதே சமயம் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவுகளை ஏற்றுக்கொண்ட இரண்டு சர்வதேச நிதிநிறுவனங்கள் எமது நிறுவனத்திற்கு சில செயற்றிட்டங்களை தர முன்வந்தன.

புதிய ஆண்டுக்கான அச்செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட இருக்கும் பிரதேசங்களாக சிங்கள கிராமங்களும் உள்ளடங்கியிருந்தன. அரசாங்கத்தின் பார்வை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மீது திரும்பியிருந்ததால். அரசாங்க அதிபரால் நிறுவனங்களுக்கு பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் செயற்றிட்டங்கள் மூன்று சமூகத்தினரும் பயனளிப்பனவாக இருக்க வேண்டும் என்பதுடன் பிரதேச செயலாளர் , அரச அதிபர் ஆகியோரின் முன் அனுமதி பெறல் கட்டாயமாக்கப்பட்டிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச அதிபா் சிங்களா இனத்தவராக இருந்ததால் எவரும் அவரை அணுக அஞ்சினர்.

ஏற்கனவே எனது வயது முதிர்ச்சி , அனுபவம் , மொழியாற்றல் ஆகியவற்றை ஏனையோரிடம் இல்லாத தகுதிகளாக சுட்டிக்காட்டி அரச மட்ட கூட்டங்கள், சர்வதேச நிதி நிறுவனங்களால் நடாத்தப்படும் கலந்துரையாடல் அனைத்திலும் நானே கலந்துகொள்ள வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டிருந்தேன்.

இந் நிலையில் இப்போது சிங்கள மொழிபேசும் அரச அதிபரை சந்தித்து செயற்றிட்டத்திற்கான அனுமதி பெற என்னை விட்டால் வேறு யார் முன்வருவார்!

நான் இனமத பேதமற்றவன் என்பதை நிருபிக்க எனக்கு அனுசரணையாக இருப்பவள் நிமாவே! எனவே நிமாவை பயன்படுத்தி சிங்கள மொழியில் அனுமதி கோரும் கடிதங்களை தயார் செய்தேன். அரச அதிபரை சந்திப்பதென்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை நிமாவை முன்வைத்து நான் சென்றாலும் பாதுகாப்பு பிரிவினர் எழிதில் விட்டுவிடமாட்டார்கள். ' அரச அதிபர்' இப்போதுதான் வெளியே சென்றார். என்று நம்பும்படி கூறி எம்மை திருப்பி அனுப்பவே முயற்சிப்பார்கள்.

இல்லை, நாங்கள் மேலதிக அரச அதிபரையாவது சந்திக்கவேண்டும் என்று அடம் பிடித்து உள்ளே சென்றால் அங்கே அரச அதிபர் இருப்பார்! ஆனால் அலுவலக வாயிலில் உள்ள பாதுகாப்பு பிரிவினர் உள்ளே விட மறுப்பார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் எப்படி கதைக்க வேண்டும் என்று பயிற்சி வழங்கிவைத்திருந்தமையால் அவளது வாய்வீச்சு பலசமயங்களில் கைகொடுத்தது.

நிமாவுடன் சென்று மூன்று தடவைகள் அரச அதிபரை சந்தித்ததில் நான் ஒருவிடயத்தை உணர்ந்தேன். அது நிமாவுடன் சென்றிருக்காவிட்டால் இரண்டு நிதி நிறுவனங்களது செயற்றிட்டங்கள். எமக்கு கிடைத்திருக்காது என்பதே.

அந் நாட்களில் நிறுவனங்கள் தமது சேவையை தமிழ் கிராமங்களுக்கென மட்டுப்படுத்தியிருந்தன. அவற்றை மனத்தில் இருத்தி அரச அதிபர் , என்னை கேள்வி ஒன்றை கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை சிங்கள கிராமத்தில் நீங்கள் வேலைசெய்கின்றீர்கள்...? பார்க்க போனால் ஒன்றும் இல்லை என்றுதான் கூறவேண்டும்... நான் தயங்குவதை கண்ட நிமா புத்திசாலித்தனமாக ஒரு பதில் கூறினாள்... 'சிங்களம் தமிழ் என்ற பேதமின்றி பார்த்தால் நாங்கள் மூன்று சமூகத்தினருக்கும் சேவையாற்றிக்கொண்டிருக்கின்றோம். பேருந்து நிலைய புனரமைப்பு ' வாழ்வாதர மேம்பாட்டுக்காக மும்மொழி பேசும் பயிற்சி வகுப்புக்கள்.. உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தும் ஆற்றலைமேம்படுத்தும்பொருட்டு தொழில் சந்தை நிகழ்வுகள்... என நிமா அடுக்கிகொண்டே போனாள்...

அரச அதிபர் அசந்தே விட்டார்....

அதன் பலன் சர்வதேச நிதி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டதொரு சிங்கள கிராமத்தில் வேலை செய்ய எந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் முன்வரகூடும் என அரச அதிபரை கேட்டபோது, அவர் கொஞ்சம் கூட யோசிக்காமல் எமது நிறுவனத்தின் பெயரை கூறி , ' அவர்களிடம் கொடுங்கள் அவர்கள் அச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவார்கள்..." என கூறினார்.

நிமா காரணமாக இரண்டு சர்வதேச நிதி நிறுவனங்களினதும் செயற்றிட்டங்கள் எமது நிறுவனத்திற்கு கிடைத்தது. மொத்தம் 20மில்லியன் வரை எமது நிறுவனத்தின் மூலம் செலவுசெய்யப்படவுள்ள திட்டங்கள் அவை.

இரண்டு நிதி நிறுவனங்களும் இரண்டு சிங்கள கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. நிமா மிகவும் மகிழ்ந்திருந்தாள். தனக்கும் அந்த செயற்றிடங்களின் கீழ் வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்பினாள்.

ஆனால் சில தினங்களிலேயே நிர்வாகம் எனக்கு ஒரு அறிவுறுத்தலை வழங்கியிருந்தது... 'நிமா எமது நிறுவனத்தில் தொடர்ந்து வேலை செய்யலாம் என்ற நம்பிக்கையை கொடுக்கவேண்டாம்....' நான் சோர்ந்து விட்டேன்.

அதற்கிடையில் அவளது கணவனுக்கான குறுகிய கால செயற்றிட்டம் முடிவடைந்திருந்தது. இப்படியே போனால் சில வாரங்களில் நிமாவின் சேவைக்காலமும் முடிவடையும். குடும்பமாகவே இருவரும் தற்கொலை செய்து கொள்ளவேண்டியதுதான். நான் நிமாவிற்கு சில ஆலோசனைகள் கூறினேன். அதன் பிரகாரம். அவள் தனது சுயவிபரபட்டியல் ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார் செய்து... சில நிதி நிறுவனங்களிற்கு சமர்ப்பித்தாள். அதிஷ்டவசமாக ஒரு நிறுவனம் நேர்முக பரீட்சைக்கு அழைத்திருந்தது. அலுவலக நேரத்தில் எனது அனுமதியை பெற்று நேர்முக பரீட்சைக்கு முகம் கொடுத்தாள். நிமா திரும்பி வந்தபோது அவளது முகம் சற்று மலர்ந்திருந்தது....

'எப்படி நிமா இன்ரவியு....?'

'நல்லாய் செய்தேன் சேர்....' ஆனால் ஒரு கேள்விதான் எனக்கு... என்று இழுத்தாள்....

'ஏன் விளங்கலையோ....?' 'ஓம் சேர்...' என்ன கேள்வி அது...?.' ' உம்மை உம்முடைய 'பொஸ்' நம்புகிறார் எண்டு எப்படி சொல்லுறியள்... 'நான் வாய் பேசவில்லை சேர்... உங்களோடை கதைக்கிறதாக சொல்லியிருக்கிறாங்க சேர்... நீங்க தான் 'ரெக்கமண்ட' பண்ண வேணும்..

'அதைப்பற்றி நீர் யோசிக்க வேண்டாம் நிமா...' என கூறிவிட்டு நான் எனது கடமையில் ஈடுபடத்தொடங்கிவிட்டேன். மாலையில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நிமா நேர்முக பரீட்சைக்கு சென்றிருந்த நிறுவனத்தில் இருந்து மாவட்ட இணைப்பாளர் பேசினார்.

'திட்ட முகாமையாளரோடை கொஞ்சம் பேச வேணும்.' ' திட்ட முகாமையாளர் தான் பேசுகிறேன். விசயத்தை சொல்லுங்கோ'

'உங்களுடைய நிறுவனத்திலை நிரோஷிமா என்கின்ற அலுவலர் ஒருவர் வேலைசெய்கின்றாவா? அவாவை பற்றி கொஞ்சம் தெரிஞ்சுகொள்ள வேணும்'' ஓம்... ஓம்... அவா நல்ல உத்தியோகத்தர். உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எல்லாமே அவாவிடம் இருக்கு. நீங்கள் கொடுக்கிற வேலைகளை பணிவோடையும் திறமையாகவும் நிறைவேற்றுவா...'

'அப்படியெண்டால் உங்களிடம் ஒரு கேள்வி...'

'தாராளமாய் கேளுங்கோ...'

'நீங்கள் நம்பிக்கைக்குரிய உத்தியோகத்தராக அவரை கருதுவதை எங்களுக்கு எப்படி உறுதி செய்ய முடியும்?

நிமா எந்த கேள்விக்கு தடுமாறினாளோ அந்தக் கேள்வி இப்போ என்னிடம் தொடுக்கப்பட்டது. தயக்கம் எதுவுமின்றி நான் விடையிறுத்தேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிறுவனத்தின் அதியுயர் நடவடிக்கைகள் காரணமாக அரச உயர் அதிகாரிகளை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் இரகசிய தன்மையை பேணக்கூடிய அலுவலர் ஒருவரையே என்னுடன் அழைத்துச்செல்லவேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கின்றது. அந்த இடத்தை நிரப்பும் தகுதி நிமாவுக்கு இருக்கிறது.'

எனது பதிலில் மாவட்ட இணைப்பாளருக்கு திருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும். நன்றி கூறி தொலைபேசி உரையாடலை நிறுத்திக்கொண்டார்.

அரைமணி நேரம் கழித்து நிமா என்னிடம் வந்தாள். எனக்கு நன்றி கூறினாள். அவளை திட்ட அலுவலர் பதவிக்கு தெரிவுசெய்திருந்தார்கள். மறுநாளே பதவியை பாரமெடுக்கும் படி கேட்டிருந்தார்கள்.

நிமா பற்றி நினைக்கும் போது அவள் பிரிவு எனக்கு துயரை அளித்தாலும் அவளது எதிர்கால நன்மை கருதி 'விடுப்பு' வழங்க சம்மதித்தேன்.

மாலை ஐந்து மணி...

அலுவலகர்கள் ஒவ்வொருவராக அலுவலகத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். நானும் புறப்பட ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றேன். இதோ தூரத்தில் நிமாவின் அசைவு தெரிகின்றது. தினவரவு பதிவேட்டில் கையொப்பம் இடுகிறாள். நானும் எனது அலுவலக அறையில் இருந்து வெளியே வருகின்றேன்..

நான் எதிர்பாராதபடி நிமா எனது பாதங்களில் விழுந்து ஆசீர்வாதம் கோருகின்றாள். நான் அதிர்ந்துவிட்டேன்! அவளை இதயபூர்வமாக ஆசீர்வதிக்கின்றேன்.

ஒரு சிங்கள யுவதி .. எப்படிப்பட்டதொரு இனபாகுபாடற்ற மனம் இருந்தால் எனது பாதங்களில் விழுந்து ஆசிர்வாதம் பெறவிழைந்திருப்பாள்.!

எனது ஆச்சரியம் நீங்கவில்லை...!

அரசியலில் உயர்பீடங்களை ஆக்கிரமிப்பவர்களும்.... இனதுவேஷத்தையே கொள்கையாக கொண்ட கட்சி ஸ்தாபகர்களும் ... இன விரோதச் செய்திகளையே ஊடகங்களுக்கு வழங்கும் ஊடகவியலாளர்களும் தரையோடு தரையாக அவள் காலடியில் விழ்ந்து கிடப்பதை நான் காண்கின்றேன்!

ஞானம் - செப். 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

# என்னவள் நீதானே!

மூன்று வயதே நிரம்பிய அழகு பிரகாசிக்கும் எனது சின்னஞ்சிறு மருமகனை 'லிட்டில் கிங் நேசரிக்கு கூட்டிச்செல்வதும் திரும்ப அவனை அழைத்து வருவதும் எனது பொறுப்பு. மெல்லிய உடல்வாகு கொண்ட எனக்கு அந்த மழலை பேசும் குண்டு பயலை உந்துருளியில் ஏற்றுவதும் இறக்குவதும் சற்று சிரம சாத்தியமான கருமமாகத்தான் இருந்தது...

'நேசரி'யை நெருங்கியதும் அவன் ஒரு மரநிழலை எனக்குக் காட்டி, தான் வரும் வரையில் அங்கு காத்து நிற்கும் படி என்னை வேண்டிக்கொள்வான்...

அவனது வகுப்பில் இருந்து பார்த்தால் அந்த இடம் பார்வையில் படும்படி இல்லை. ஆனால் மதியம் தான் திரும்பி வரும் வரையில் மாமா தன்னை எதிர்பார்த்து அங்கு காத்திருப்பார் என்ற அவனது நம்பிக்கை இருக்கின்றதே... அதற்கு கோடி கொடுத்தாலும் தகும்!

அவன் தனது வகுப்பை நெருங்கியதும் அவனது ஆசிரியை ...' நிரஞ்சன் வந்து விட்டார்' என்று கூறி ஆர்வத்துடன் அவனை கஸ்டப்பட்டு அணைத்து தூக்கிச் செல்வதை பார்க்கும் போது எனக்கு அலாதியான ஒரு மகிழ்ச்சி உள்ளத்தில் பிரவாகிக்கும்.!

அந்த 'நேசரி'யில் நூறு சிறார்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். பத்து ஆசிரியர்கள் பத்து சிறுவர்கள் வீதம் பொறுப்பேற்று ஒரு தாயின் ஸ்தானத்தில் இருந்து பாதுகாத்து.... ஆசிரியர் என்ற ஸ்தானத்தில் இருந்து கல்விபுகட்டியும் தாதியாக சேவை செய்தும் பெண்ணுக்கும் பெண்மைக்கும் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

எனது சகோதரி சிறிது கறார் பேர்வழி!

அதனால் தான் என்னவோ எனது மருமகன் அந்த ஆசிரியை மேல் அளவற்ற பாசம் கட்டுவான். ஓடிச்சென்று அணைத்துக்கொள்ளுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஆர்வத்துடன் அவளை நிமிர்ந்து பார்ப்பான். அதன் பின் அவள் கண்களில் ஆனந்த கண்ணீர் அருவியிட அவனை வாரித்தூக்கி கொள்வதை பார்க்க எனது மெய் சிலிர்க்கும்!

ஆரம்ப நாட்களில் அவளது அழகை நான் எதேட்சையாகவே எடைபோட்டேன்... 'செக்க சிவந்த நிறம்... வாளிப்பான உடல்வாகு... சிரிக்கும் போது மின்னலை வீசும் பரந்த முகம்...வளமான அடர்ந்த கேசம்...முயலிரண்டை பிடித்தோர் முடிச்சிட்ட மார்பழகு...'

'நேசரி' யும் ஒழுங்காக நடைபெற்றது .... எனது உள்ளத்து உணர்வுகளும் ஆசை என்ற உரத்தின் மீது செழித்து வளர்ந்தது... அவள் நினைவுடனே தூங்கினேன்...துயிலெழும் போது அவளையே நினைத்திருந்தேன். அவளை மீண்டும் மீண்டும் பார்ப்பதால் அவள் மேலான கவர்ச்சியும் அதன் காரணமான அன்பும் மேலோங்கி... எனது எதிர்கால திட்டங்களுக்கு அத்திவாரமாயின...

நிர்மலா...! எவ்வளவு அழகான பெயர். அந்த பெயருக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டதென்றால் அதற்கு காரணமானவள் அவளே!

நாளாவட்டத்தில் அவளுடன் கதைக்கும் ஆர்வத்தில் மருமகனின் முன்னேற்றம் பற்றி அவளிடம் விசாரிப்பேன். அவளும் பதில் தருவதில் ஆர்வம்காட்டினாள்...

அதனை சாட்டாக வைத்து ஒருவர் பற்றி மற்றவர் விசாரித்து அறிந்து கொண்டோம். அவள் மனதை தெரிந்து கொள்வதற்காக பிறர் அறியாமல் அவளுக்கு அன்பளிப்பு ஒன்றை வாங்கி கொடுத்தேன். அதனை அவள் மனபூர்வமாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் எவருக்கும் அது பற்றி மூச்சு விடவில்லை. அது எனக்கு நம்பிக்கை அளித்தது.

அன்றைய தினம் நான் உறுதியாக இருந்தேன். அவளை வற்புறுத்தினேன்....

'நிர்மலா நான் உம்மை தனிமையில் சந்திக்கவேண்டும்'...

நான் அடம்பிடித்தேன்...

அவளை பயம் பிடித்துக்கொண்டது... அவளது தேகம் நடுங்கியது...

'எனக்கு அப்படி பழக்கம் இல்லை... அப்படி தனிமையிலை உங்களை சந்திக்கிறதெண்டு நினைச்சாலே உடம்பு வெலவெலத்துப் போயிடுது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னாலை ஏலவே ஏலாது, ஏதாவது அவசர செய்தியெண்டால் கடிதம் எழுதித் தாங்கோ.

பல காதல் விவகாரங்கள் கடிதங்கள் பிடிபட்டதனால் தான் சிக்கல்களுக்குள் மாட்டுப்பட்டிருக்கின்றன. அந்தத் தவறை நானும் விட முடியாது

அன்று அவளை எப்படியும் சந்திப்பதென முடிவு செய்து கொண்டேன்.

மதியம் அவசர அவசரமாக மருமகனை வீட்டில் ஒப்படைத்துவிட்டு 'நேசரி' வாசலுக்கு வந்துவிட்டேன். நிர்மலாவை அழைத்துச்செல்லும் முச்சக்கரவண்டி சாரதியிடம் நிர்மலா ரீச்சர் நேரத்துடனேயே சென்றுவிட்டதாக கூறி அவனை திருப்பி அனுப்பிவிட்டேன்.

அனைத்து ஆசிரியைகளும் சென்றுவிட நிர்மலா மட்டும் தயங்கி தயங்கி பாதைக்கு வந்தாள். அந்த ஒரு சில வினாடியில் அவளை நாடிபிடித்து பார்த்தேன்...

அவள் கூறினாள்...

'என்னைப்பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாது... அதே போல் உங்களைப்பற்றியும் அறிந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்கேல்லை. எங்கட கலாச்சாரம் பற்றி உங்களுக்கு தெரியும் தானே.. சாதி சனம் எண்டு சொல்லி வாளை தூக்கினாங்கள் எண்டால் எல்லாம் பிரச்சனையாயிடும். உங்களுக்கும் எனக்கும் சின்ன வயது... உணர்ச்சி வசப்படுறது வேற.... யதார்த்தம் வேற....'

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சின்ன பெட்டையாக இருக்கிறாள்... இவ்வளவு பொறுப்பாக கதைக்கிறாளே!

" 'நிர்மலா' நீர் காலத்திற்கு ஒவ்வாத விசர்கதை கதைக்கிறீர்... எனக்கு மனசாட்சி இருக்குது ... போக கடவுள் நம்பிக்கை இருக்குது. இது இரண்டும் உமக்கும் இருக்கும் எண்டு நினைக்கிறன். அப்படி இருந்தால் நாங்கள் இருவரும் சேர்வதிலை எந்த பிரச்சனையும் இல்லை அடுத்த முறை உம்மை தனிமையிலை சந்திக்கேக்கை நீர் முடிவு சொல்லித்தான் ஆக வேணும்"

அவள் செல்வதற்காக ஒரு முச்சக்கரவண்டியை ஒழுங்குசெய்து விட்டு கவலையுடன் வீடு திரும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இப்போது இருபத்தியாறு வயதுதான்... நேசரிக்கு எனது மருமகனை தினமும் அழைத்துச்செல்வதானது நான் தினமும் ஒரே பெண்ணை நேரில் அருகருகாக சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. அதுதான் என்னை காதலில் மாட்டிவிட்டது. இச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காவிட்டால் மற்றொரு சந்தர்ப்பம் இலகுவில் ஏற்பட்டிருக்காமலும் போயிருக்கலாம்! வருடங்களும் வயதும் சென்றிருக்கலாம்!

ஓரிரு கிழமைகள் நேர்த்தியாக போய்கொண்டிருந்தன. எனது மருமகன் சிலதினங்களில் தன்னை தூக்கி செல்லுமாறு அடம்பிடிப்பான். அப்படியான நாட்களில் நிர்மலா என்னை உரசியபடி அவனை வாரிஅணைத்து தூக்குவது எனது இதயத்தின் திக் திக் ஓசையை அதிகரிக்க செய்யும்.

'நேசரி'யில் ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தத்தம் பிறந்த நாள் விழாவிற்கு ஏனைய சிறுவர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் பரிசுப்பொருட்கள் வழங்கவேண்டும். என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அடுத்து வரும் வாரத்தில் ஒருநாள் எனது மருமகனின் பிறந்தநாள் விழா வந்தது. எனது சகோதரி நூற்றுக்கு மேற்பட்ட பரிசு பொருட்களை பொதிசெய்து என்னிடம் கொடுத்தாள்..

ஆசிரியைகள் அன்றையதினத்தை பெரும் விழாவாக ஏற்பாடு செய்திருந்தார்கள். சிறுவர்கள் வாழ்த்துப்பாடினார்கள். மருமகன் தன் கையாலேயே பரிசுப்பொருட்களை வழங்கினான். நிர்மலா அந்த வைபவத்தில் என்னையும் இணைத்துக்கொண்டாள். இடையிடையே கேலியும் கிண்டலும் செய்தாள். இப்படியான தன்மை அவளிடம் எங்கு ஒளிந்து கொண்டிருந்தது என்று ஆச்சரியப்பட்டேன்.

மறுவாரம் நிர்மலாவின் வருகை திடீரென நின்று விட்டது. ஏனைய ஆசிரியைகளை விசாரித்தேன். அவளது விலாசத்தை வழங்கினார்கள். அங்கு சென்று பார்த்தபோது கிடுகிலான வீடொன்று எரிந்த நிலையில் காட்சியளித்தது. நிர்மலா அயல் வீட்டில் இருந்து ஓடிவந்து என்னை அங்கு வரும்படி சைகை செய்தாள்.

ஒரு வீட்டின் வராந்தாவில் வீட்டு தளபாடங்கள் சில குவிக்கப்பட்டிருந்தன. வயதான மூதாட்டி ஒருவர் கதிரையொன்றில் கண்களை மூடியபடி அமர்ந்திருந்தார்.

நிர்மலா என்னை அமரச்செய்து உபசரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது முகம் வாடியிருந்தது.

எதையோ நினைத்தவளாக விம்மி விம்மி அழுதாள். நான் துணையாக ஏற்க முன்வந்த நாளையும் இன்றைய அவளது பரிதாப நிலையையும் அவள் ஒப்பிட்டு நோக்கியிருக்க கூடும்.

நான் அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி தேற்றினேன்.

'பார்த்தீர்களா எனது நிலையை. நான் பேராசைக்காரியாக இருக்க விரும்பாமல் தான் உங்களோடு ஒத்துப்போக மறுத்தேன்.

ஏழையாக இருந்தாலும் கூட எனக்கும் எதிரிகள் இருக்கின்றார்கள். தங்கள் விருப்பங்களை சாதிப்பதற்காக என்னை வாழ்க்கையின் அடிமட்டத்திற்கு கொண்டு செல்லும் அவர்களின் நோக்கமே எங்கள் வீடு தீப்பற்றியமைக்குரிய காரணம்.'

மகள் அழுவதை பார்த்து வயது போன அந்த மூதாட்டி தலையில் அடித்து அடித்து ஒப்பாரி வைத்து அழுதாள். அவளது ஏழ்மை நிலையை பார்த்த போது … சமூகத்தில் அவர்களது அந்தஸ்து நன்கு விளங்கியது.

எனது அனுதாபங்களை அவர்கள் இருவருக்குமே தெரிவித்தேன். பின்னர் எனது மன வேக்காட்டை நிர்மலாவுக்கு உணர்த்துமுகமாக கூறினேன்.

'நிர்மலா உமது வீடு எரிந்ததை பற்றி கவலைப்பட எனக்கு அவகாசம் இல்லை. வாழ்க்கை என்பது சக்கரம் போன்றது. உமது பொருளாதார நிலை, அந்தஸ்து ஆகியன நாளையும் மாற்றமடையலாம். அன்றைய எனது கேள்விக்கான உமது பதிலை இன்றைய நிலையிலும் உம்மிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.'

எனது நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருந்தேன். எனது பிடிவாதம் அவளுக்கு ஆச்சரியத்தை கொடுத்திருக்கலாம்.

என்ன நினைத்தாளோ? தாயை நிமிர்ந்து பார்த்தாள்…

அந்த மூதாட்டியும் எனது வார்த்தைகளால் புரிந்து கொண்டிருக்ககூடும் அல்லது ஒரு இளைஞன் தனது இளம் அழகான மகளை தேடி வந்தால் அதற்கான அர்த்தம் 'விவாகம்' என்பதே அவள் தேர்ந்த பொருளாகவும் இருந்திருக்க கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்தாள். கேசத்தை ஒதுக்கிகொண்டாள். அழுதழுது களைத்த முகத்தை அழுத்தி துடைத்துக்கொண்டாள்

நிர்மலா என்னை அவளுக்கு அறிமுகம் செய்ய வேண்டி சில வார்த்தைகள் கூறினாள்.

'அம்மா இவர் பெயர் ரஞ்சித். அரச தொழில்புரிகிறார். சில மாதங்களாக நேசரிக்கு வந்து போவதால் பழக்கம்...

தம்பி நீங்கள் எனது மகளுக்கு அனுதாபம் காட்டுகிறது எனக்கு விளங்குது. ஆனால் நீங்கள் தான் அவவை காப்பாற்ற வேண்டும என்ற நிலை அவளுக்கு இல்லை. என்ரை சொந்தத்திற்குள்ளேயே அவளுக்கு மாப்பிள்ளைமார் இருக்கினம்.

இப்படி கூறி அவள் தனது குடும்ப மட்ட அந்தஸ்தை மெச்சிக்கொண்டிருந்தாள். நான் அவளிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தேன்... நிர்மலா பின் தொடர்ந்தாள்.

கவலையிலும் அவள் அழகாக இருந்தாள். அழகு சாதனங்களை பயன்படுத்தாத நிலையிலும் அவளது கவர்ச்சி சிறிது கூட குறையவில்லை!

அவளது கனிந்த பார்வை என்னிடம் எதையோ இறைஞ்சுவதை நான் ஆத்மார்தமாக உணர்ந்தேன். அவளிடம் இருந்து விடைபெறும் போது மீண்டும் அந்த வார்த்தையை அடித்துக்கூறினேன்.

'அடுத்தமுறை உம்மை தனிமையிலை சந்திக்கேக்கை நீர் உம்மைப்பற்றிய முடிவை சொல்லித்தான் ஆக வேணும்...

எனது உந்துருளி ஆவேசத்துடன் விரைந்து பாய்ந்தது... தன்னை சமாதானப்படுத்திக்கொண்டு 'நேசரி'க்கு வர நிர்மலாவுக்கு சில தினங்கள் எடுத்தன.

அவள் வந்த பின்னர் 'நேசரி' மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிவிட்டது போன்று எனக்கு தோன்றியது.

அன்று நிர்மலா எனக்கு ஒரு தகவலை வழங்கினாள்... அடுத்து வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பெற்றோருடன் ஒரு கலந்துரையாடல் இருப்பதாகவும் தவறாது கலந்து கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகவலை எனது சகோதரிக்கு தெரிவித்தபோது தான் அந்த கலந்துரையாடலில் கலந்துகொள்வதாக உறுதியளித்தாள். எதற்கெடுத்தாலும் அவர்கள் 'டொனேசன்' என்றும் 'கொன்றிபியுஷன்'என்றும் கேட்பதால் தான் அவள் தானே கலந்து கொள்வதாக கூறினாள் போலும்.

மறுகிழமை நான் அவளை விபரம் கேட்டேன். எனக்கு இந்த அக்கறையெல்லாம் எப்போதிருந்து எதன் பொருட்டு ஏற்பட்டதென்பது பற்றி அவளுக்கு எந்த சிந்தனையும் கிடையாது என்பதை நன்கு தெரிந்துகொண்டு நிர்மலா 'ரீச்சர்' பற்றி விசாரித்தேன்.

'எனக்கு அவாவைப் பிடிக்காது தம்பி' வடிவான பெண்கள் ஆண்களை அதிகம் கவர்வதால். சாதாரண பெண்களுக்கு அவர்கள் மேல் வழமையாகவே ஒரு புகைச்சல்!

'ஏன் அவா நல்லவாதானே அக்கா?'

நான் அப்படி வினாவவும் அக்காவின் முக பாவம் மாறிவிட்டது.

'நல்லவாதான்... அநியாயமாக அங்கை பகுதி நேரமாக வேலை செய்த 'கிளார்க்' பெடியனுக்கு வேலை இல்லாமல் செய்து போட்டா'

எனக்கு பேரதிர்ச்சியாய் இருந்தது.

ஏன் அக்கா?

'அந்த பெடியன் இவளை விரும்பியிருக்கிறான், இவாவின்ர எடுப்புச் சாய்ப்புக்கு அவன்ரை வடிவும் நிறமும் போதாது போலை. இவள் மறுத்துப்போட்டாள். அவனோ விடேல்லை, பின்னாலை பின்னாலை திரிஞ்சு இருக்கிறான். அது இரண்டு பேருக்கும் சண்டை சச்சரவாய் வளர்ந்திட்டுது.'

அக்கா அதை சொல்வதை நிறுத்திவிட்டு வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்துவிட்டாள்.

நான் விடவில்லை...

'பிறகு என்ன அக்கா நடந்தது...?'

'இவள் ஏதோ அபாண்டமாய் சொல்லித்தான் 'மேடம்' அவனை வேலையாலை நிப்பாட்டினவாவாம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. எதுவாக இருந்தாலும் நிர்மலாவை நான் அவளது வீட்டில் சந்திக்க சென்றபோது கூறியிருக்க வேண்டுமே! தனது தகுதிக்கு அந்த நிகழ்ச்சி பாதிப்பாக இருக்கலாம் என நினைத்தாளா? அல்லது என்னுடனான உறவுக்கு முக்கியத்துவம் கொடுத்தாளா? அல்லது அவளது தாயார் கூறியது போல அவளுக்கென ஒரு வரன் ஏற்கனவே அமைந்து விட்டதா?

எனது மனத்தில் சலனங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன.

சில நாட்களாக தொடர்ந்து வற்புறுத்தியதில் அன்றைய தினம் என்னை கடற்கரையில் சில நிமிட நேரம் சந்திக்க உடன்பட்டாள்.

மாலை வானமும்... பரந்த அலைகடலும்... குளு குளு என்ற காற்றும் மனதுக்கு இதமாக இருந்தன. இளம் மஞ்சள் நிற 'நைலோன்' சேலையில் அவள் அழகு பார்ப்பவர்களை கொள்ளையிடுவதாக இருந்தது. ஒரு 'கொனகிறீட் பெஞ்சில்' என் அருகாக அமர்ந்தாள். பல மணி நேரம் 'மொபைல் போனில்' கதைக்கும் காதலர்கள் அந்த ஒரு பொழுதை அனுபவித்துப்பார்க்க வேண்டுமே!

இளைஞனான எனக்கே அந்த அனுபவம் உடல் புல்லரிக்க வைத்தது. ஒரு இளம் பெண்ணின் பதட்டத்தையும் மனோநிலையினையும் எப்படி வர்ணிக்ககூடும்.

'நிர்மலா... என்ரை சொல்லை கேட்டு நீர் வந்ததுக்கு நான் நன்றிசொல்லித்தான் ஆக வேணும். நான் முக்கியமாய் விரும்புகிறதென்ன வெண்டால். உம்மைப்பற்றிய எந்த விஷயமும் எனக்கு மறை பொருளாய் இருக்க கூடாது. இப்ப உமக்கு நான் தாற இந்த சந்தர்ப்பம் நீர் உம்மை என்னிடம் ஒப்படைப்பதற்கான ஓர் வாய்ப்பே தவிர வேறில்லை!

கடற்கரைக்கு போவதில் ஒரு வசதி... முகத்தை பார்த்துக்கதைக்க தேவையில்லை. ஆழ்கடலின் அலைகளை பார்த்தபடியே பேசலாம்.

நிர்மலா இப்போ வினாவினாள்?

'ஏன் நிரஞ்சனை கூட்டி வரேல்லை?' பெண்களுடைய சாகசத்திகு எல்லை இல்லை என கேள்விப்பட்டிருகிறேன். இப்பபோது தான் நேரில் அனுபவிக்க தொடங்கியிருக்கிறேன் போலும்.

நானும் விட்டு விடவில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிரஞ்சனுக்கு கடற்கரை காத்து ஒத்துவராது…?'

ஒரு முக்கியமான விடயத்தை பேசி தீர்மானித்துவிட்டவள்போல அமைதியாக இருந்தாள்.

'நிர்மலா நான் உம்மை மனதார விரும்புகின்றேன். உம்மை மறக்க என்னால் முடியாது. உம்மை கைபிடிக்கிறதற்காக என்ன விலை கொடுக்கிறதற்கும் நான் தயராக இருக்கின்றேன். உம்முடைய முடிவை மட்டும் நீர் சொல்லும்… அதுவும் இப்பவே சொல்லும்…'

நான் அழுத்தம் திருத்தமாக எனது முடிவை சொன்னேன். நிர்மலாவின் கண்களில் இருந்து நீர் பொலபொல என ஊற்றெடுத்தது. நெஞ்சின் அடி ஆழத்தில் இருந்து எழும் விம்மல்களுக்கு மத்தியில் அவள் பேசினாள்….

'ரஞ்சித்'… என்னை உங்களிடம் ஒப்படைப்பதில் உள்ள பிரச்சனைகளை கருத்துக்கெடுக்காமலேயே நீங்கள் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். எனது சாதி சமயம் , ஏழ்மை நிலை, குறைந்த கல்வி, குறைந்த அந்தஸ்து இவையெல்லாம் உங்கடை தகுதிக்கு பொருத்தமில்லாமல் இருக்கிறதை நேரிலேயே பார்த்தும் ஏன் புரிஞ்சுகொள்ள மாட்டாமல் இருக்கிறியள். இதுக்கு மேலால என்ரை அழகு கூட உங்களுக்கு ஆபத்தாக முடியலாம். உண்மையிலேயே இதையெல்லாம் நீங்கள் யோசிக்கிறியளா எண்டது எனக்குப் புரியேல்லை'

இப்போது அவள் விழிகள் என்மீது நேரடியாக மோதின.. தொடர்ந்து பேசினாள்.

'ரஞ்சித்… என்னுடைய அழகில் கொண்ட மயக்கம்தான் ஒரு இளைஞனை எனது வீட்டிற்கு தீ வைக்கிறதுக்கு தூண்டினது. நான் ஏழை. எதிரிகளின்ரை பகைக்கு இலகுவில இலக்காக கூடியவள். என்னிலை உள்ள உங்கள் காதல்தான் உங்களுக்கு ஆபத்தை உண்டுபண்ணுறதாயும் முடியும், இதையெல்லாம் ஏன் சிந்திக்க மறுக்கிறீங்கள்…?'

அப்படி கூறிவிட்டு அவள் ஒரு நிமிடம் கூட நிற்கவில்லை. அவள் போன வேகத்தில் நான் அவளை பின்தொடர்ந்தால் மற்றவர்கள் கண்களுக்கு அது சரியாகப்படாது!

'நிர்மலா'…நீ…. போ… இந்த உலகத்தின் அந்தத்திற்கே போவதாயினும் போ … எனது முடிவையிட்டு நான் பயந்து ஒதுங்க போகிறதில்லை…!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் எனது மனதில் சஞ்சலமும் பீதியும் மாறி மாறி பிரதிபலித்தன.

நாள் தோறும் 'நேசரியில்' நிர்மலாவை சந்திப்பது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

ஒரு நாள் 'மடம்' – அந்த ஆரம்ப பாடசாலையின் ஸ்தாபகர் என்னை சந்திக்க விரும்புவதாக தெரிவித்தாள்.

நான் அவளை சந்தித்தபோது அவள்...

'நீங்கள் நிரஞ்சனின் மாமா தானே? என வினவி என்னைத் திகைக்கடித்தாள். திறமையானது சிறந்த ஞாபக சக்தியுடனும் தந்திரோபாயத்துடனும் அதிகம் இணைந்திருக்கின்றது!

நீங்கள் சொல்லுகிறது சரிதான் 'மேடம்'. நான் உங்களுக்காக என்ன செய்ய வேணும்? நான் வினவினேன்.

எங்களுடைய 'நேர்சரியில்' பகுதிநேர நிதி நிர்வாக அலுவலகர் பதவி ஒன்று வெற்றிடமாக உள்ளது... சிறிய சம்பளத்துடனான இந்த வெற்றிடத்தை சேவை மனப்பான்மையுள்ள எவரெண்டாலும் தான் நிரப்ப முன்வருவார்கள். நிர்மலா உங்களை விதந்துரைத்ததால் கேட்கிறன். கோவிக்க மாட்டியள் எண்டு நம்புறன்.'

பதில் கூறுவதற்கு இரண்டு நாள் அவகாசம் பெற்று வெளியேறினேன்.

அந்த இடைவெளியில் முன்னர் பதவி வகித்த இளைஞனை சந்தித்தேன்

அவனது பெயர் மதன்... பார்ப்பதற்கு சுமாரான தோற்றத்தை கொண்டவனாக இருந்தான். எனது சகோதரி 'கிளார்க்' என்று குறிப்பிட்டுக் கதைத்தது இவனைத்தான். நிர்மலா காரணமாக வேலையை இழந்த அந்த இளைஞனும் இவன் தான்.

அவனுக்கு கதை கொடுத்துப்பார்த்தேன். அவனது முகம் விகாரமாக மாறியது. மேடம் தவறிழைத்துவிட்டதாக அடித்துக்கூறினான்.

' 'ரஞ்சித்' உங்களை நான் அதிகம் அறியமாட்டன். ஆனாலும் உங்கள் முகத்தையும் பண்பான வார்த்தைகளையும் பார்த்துக்கூறுகின்றேன். ஒரு பெண் நான் தன்னை விவாகம் செய்ய வற்புறுத்துவதாக கூறுவதாலை மட்டும் நான் பிழைகாரன் எண்டு எப்படி தீர்மானிக்க ஏலும்? '



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சாய்ந்து நின்ற சுவரினை தனது பலமான முஷ்டியால் வேகமாக தாக்கினான். பின்னர்...

'அந்த 'மேடம்' ஒரு முட்டாள்' என உரக்க சத்தமிட்டான்... பின்னர்..

'விவாகம் செய்த எந்த பெண்ணையும் ஒரு இளைஞன் தன்னை மணமுடிக்கசொல்லி வற்புறுத்த மாட்டான். அதை கூட புரிந்து கொள்ள முடியாத முட்டாள் அவள்!'

அவன் கோபத்தின் உச்சத்தில் இருந்தான். அவன் அமைதி அடைவதற்கு சில நிமிட நேரம் தேவைப்பட்டது.

அவனது தோள்களை அன்பாக அரவணைத்தபடி கேட்டேன்...

'உன்னைப்பற்றி யார் முறைப்பாடு செய்தார்கள்?'

மதன் எனது முகத்தை முறைத்துப்பார்ப்பது எனக்கு பயமாக கூட இருந்தது!

'அவள் தான்! அந்த நிர்மலா என்ற கழுதைதான்! அவளைப்பற்றி எவருக்குமே தெரியாது. அவள் அப்படி நடிக்கிறாள். ஆனால் தனது பாடசாலை வாழ்க்கையின் போதே அவள் ஒரு இளைஞனை இரகசியமாக பதிவு திருமணம் செய்து கொண்டாள். கொஞ்ச நாள் அவனுடன் தங்கியும் இருந்தாள். பெற்றோர் அதனை அறிஞ்ச உடனை குறைஞ்ச வயதை காரணம் காட்டி நீதி மன்றத்தில் விவாகரத்து பெற்றுவிட்டாள். அவள் ஒரு கன்னியல்ல...கலியாணம் முடித்தவள்.'

அவனது ஓலம் எங்கெல்லாமோ சுவர்களில் பட்டு எனது செவிகளில் எதிரொலித்தது.

'அவள் கன்னியல்ல... கன்னியல்ல... !

நான் சிறிதும் எதிர்பாராத அந்த செய்தியை என்னால் ஜீரணிக்க முடியவில்லை... அவளை அடைவதற்காக என்ன விலை கொடுக்கவும் தயார் என்ற எனது உறுதி மொழி காற்றில் தள்ளாடியது. சாதி, மதம், ஏழ்மை, குறைந்தகல்வி , கீழான அந்தஸ்து அனைத்தையும் துச்சமென தூக்கி எறிந்த எனது மனதுக்கு என்னநேர்ந்தது.

ஒரு கணம்... ஒரே ஒரு கணம் தான்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டேன்.... செக்கசிவந்த நிறம்...வாளிப்பான உடல்வாகு... சிரிக்கும் போது மின்னலை வீசும் பரந்த முகம்... வளமான அடர்ந்த கேசம் பணிவான பேச்சு...

நிர்மலாவின் அழகு தோற்றம் என் கண்முன் விரிந்தது. அவளது உள்ளத்தின் குழந்தைத் தன்மை முகத்தில் தெரிந்தது... விபரம் அறியாத சிறுவயதில் எவருமே தவறுவதில்லையா?

அவளுக்கு மட்டும் தண்டனையா?

ஆயிரம் மதன்மார் என்ன ... இந்த சமூகமே என் முன்னால் விசுவரூபம் எடுக்கட்டும்...

'நிர்மலா நீ மட்டும் உன் முடிவைக் கூறிவிடு!'

ஞானம் - ஜன. 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

# "உந்துருளி"

இதுவரை எனக்கு கிடைத்த பாக்கியங்களிலெல்லாம் பெரிய பாக்கியம் அப்பா எனக்காக அன்புடன் வாங்கித் தந்த உந்துருளிதான்! . க.பொ.த உயர்தரம் நல்ல முறையிலை படித்து எழுதி 'கம்பஸ்'க்கு போகக்கூடிய அளவிலை புள்ளிகள் பெற்றால் நீ விரும்புறதை வாங்கித்தருவன் எண்டு அப்பா ஏற்கனவே சொல்லியிருந்தார்... நானும் அதை மனதிலை வைச்சு தேவையில்லாத கூட்டாளிமாரோடை சேராமலும் எந்த ஒரு சொர்ப்பன சுந்தரியையும் மனதிலை வைச்சு குழம்பாமலும் என்ரை படிப்பும் நானும் எண்டு கவனமாக படிச்சு பொறியியல் துறையிலை மாவட்ட மட்டத்திலை முதலாம் இடம்பெற்று 'கம்பஸ்' க்கு தெரிவாகிவிட்டன்!

அப்பாவுக்கு புழுகு எண்டால் சொல்லி மாழாது. நானும் அப்பா, அம்மா இரண்டு பேருடையதும் காலிலை விழுந்து ஆசிபெற்றுக்கொண்டேன்... தங்கச்சி ஓடி ஓடி தன்னுடைய வகுப்பு மாணவிகளுக்கும் பக்கத்து வீட்டு தோழிகளுக்கும் இந்த சந்தோசமான செய்தியை பரப்பிக்கொண்டு திரிந்தாள். எனக்கு இளமையான பெண்களின் பார்வையில் நான் ஒரு கதாநாயகனாக தெரிந்தேன் போலும். என்னை காணும் இடங்களிலெல்லாம் நாணுவதும் கோணுவதும் சிரிப்பதும் எண்டு அட்டகாசம் பொறுக்கமுடியவில்லை. அவர்களை ஏமாற்ற விரும்பாமல் நானும் காதாநாயகன் பாத்திரத்திற்கு பொருத்தமான நடை உடை பாவனைகளையெல்லாம் சீர்செய்துகொண்டேன்.

தங்கச்சி நினைவூட்டினாள்....

' அண்ணா... அப்பா எல்லே சொன்னவர் நீ 'கம்பஸ்' க்கு எடுபட்டால் கேட்கிறதை பரிசாய் வாங்கித்தருவேன் எண்டு... இப்ப உன்ரை விருப்பத்தை கேளன்....'

நான் கூறினேன்...

'தங்கச்சி... உனக்கு என்ன விருப்பமோ நான் அதையே கேட்கிறன். நீ உன்ரை விருப்பத்தை சொல்லு...' தங்கச்சி கன்னத்தில் வலது கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டு விரலை பதித்துக்கொண்டு முகத்தை மேலும் கீழுமாக அசைத்தாள். அவளுடைய சுபாவம் அதுதான்.

' அண்ணா... உந்துருளி இல்லாமல் இப்ப எந்த ' போய்ஸ்சும்' இல்லை. உந்துருளி மட்டும் அப்பா வாங்கித்தந்திட்டால் நான் பின்னாலை இருக்க நீ இந்த நகரையே ஒரு கலக்கு கலக்கலாம்..... என்னண்ணை சொல்லுறாய்...?

எனக்கும் அந்த யோசனை இருந்ததுதான். தங்கச்சியும் பாவம் அவள் வேறை ஆற்றை உந்துருளியிலை பின்னுக்கு ஏறி இருந்து போவாள்...

இனி நான் ஒரு நாளும் கண்ட கண்ட பெட்டைகளையெல்லாம் உந்துருளியிலை ஏற்றுகிறதாலை பெருமைப்படுகிற ஆள் இல்லை.

அம்மாவை சந்தைக்கும் 'கிளினிக்குக்கும்' ஏற்றிப்போவன்....

அப்பா இளைப்பாறிவிட்டதாலை ஈர்உருளி பாவிக்கிறதை விட்டிட்டார். வங்கி , தபால் நிலையம் மற்ற மற்ற ஏதேனும் அலுவல் எண்டால் 'ஓட்டோ' வைத்தான் வாடகைக்கு அமர்த்துவார். உந்துருளி ஒண்டை வாங்கிப்போட்டால் அப்பாவை நானே ஏற்றித்திரிவேன். ' ஓட்டோ' செலவும் மிச்சம்.

தங்கச்சியின்ரை பிரேரணையை நானும் ஏற்றுக்கொண்டேன்...

' சரி தங்கச்சி வா... இரண்டு பேரும் போய் அப்பாவை சந்தித்து கேட்பம். அப்பாவும் 'பென்சனிலை' இரண்டாயிரத்து ஐநூறு ருபா கூட்டின சந்தோசத்திலை இருக்கிறார் அதோடை ஓய்வூதியக்காரருடைய வங்கி நிரந்தர வைப்புகளுக்கு 12வீத வட்டி கொடுக்கவிருப்பதாகவும் ஒரு வதந்தி அடிபடுகுது. இதுதான் சரியான நேரம் ... வா கதைப்பம்!'

அப்பாவும் அம்மாவும் தமது எதிரிகளில் யார் யாருடைய பிள்ளைகள் என்ன என்ன ' ரிசல்ட்' எடுத்தார்கள் என்பதைப் பற்றி தாம் தாம் அறிந்தவற்றை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

தங்கச்சி என்னை முந்திச் சென்று அப்பாவின் கழுத்தை இறுக்கப் பற்றிக்கொண்டாள்.

'அப்பா.... அப்பா.... அண்ணை சோதனை வடிவாய் ' பாஸ்' பண்ணினால் அவர் விரும்புகிறதை பரிசளிப்பன் எண்டு சொன்னனீங்கள் எல்லோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ அண்ணை தான் விரும்புறதை கேட்கத்தான் வந்திருக்கு... நீங்கள் அவரை கேளுங்கோவன் என்ன வேணுமெண்டு...'

அம்மா தங்கச்சியை தனது பக்கம் இழுத்து... ' அப்பாவுக்கு கரைச்சல் குடுக்காமல் இஞ்சாலை வா...' என்று அதட்டினா..

அப்பாவுக்கு சிரிப்புத்தான் வந்தது...

'அவளை விடு... நான் சொன்னால் மாறமாட்டன்!' அப்பாவின் உறுதி எனக்கு உற்சாகத்தைக் கொடுத்தது...

' அப்பா... நான் பொரிசாய் எதையோ சாதிச்சுப் போட்டன் எண்டதுக்காக கேட்கேல்லை... இப்ப வீட்டுக்கு வீடு ' ஓட்டோ' ஒண்டோ உந்துருளி ஒண்டோ இல்லாமல் இல்லை. இப்போதைக்கு ஒரு உந்துருளி நிண்டால் எல்லாத்துக்கும் வசதியாய் இருக்கும். பிழையெண்டால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ அப்பா...!'

அம்மா கொடுப்புக்குள் சிரிச்சார்... அவருக்கும் உந்துருளி ஒண்டின் மேல் ஆசை இருந்தது போலும்.

அப்பா மோவாயை திரும்ப திரும்ப தடவினார். அந் நேரம் நாங்கள் ஒருவரும் பேசக்கூடாது என்பது விதி.

அவர் எதையோ நினைத்து கவலையில் ஆழ்ந்தார். பிள்ளைகள் ஏதாவது தவறு செய்தால் கோபப்படமாட்டார். கவலைப்படவே செய்வார்...

' மகன்... உந்துருளி ஒண்டை வாங்கிறதிலை எனக்கு பிரச்சனை ஒண்டும் இல்லை. ஆனால் இண்டைக்கு ஊர் உலகத்திலை என்ன நடக்குது ? உந்துருளியும் 'ஓட்டோவும்' தான் விபத்துக்கள் எல்லாத்துக்கும் காரணமாய் இருக்குது... ஒண்டு மூண்டு சில்லிலை ஓடுது... மற்றது இரண்டு சில்லிலை ஓடுது. அது மட்டும்தான் காரணம் எண்டும் இல்லை... ஒரு ' காரை அல்லது ' வான்' அல்லது' பஸ்சை' வாங்கவேணுமெண்டால் மில்லியன் கணக்கிலை செலவாகுது. ஆனால் ஒரு 'ஓட்டோ' வையோ உந்துருளி யையோ வெறும் ஒரு சில இலட்ச ரூபா செலவில் வாங்கி விடலாம். எனவே பக்குவம் பண்ண வேண்டும் எண்ட பொறுப்பு இல்லை!'

அப்பாவின் கவலை எனக்கு புரியாமல் இல்லை. எனக்கு படிப்பு முடிந்து விடவில்லை. இனிமேல் தான் தொடங்க போகுது. ' கம்பஸ்' தொடங்கிவிட்டால் ஊரில் நிற்கும் நாட்களும் குறைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்துக்களுக்கு காரணமான உந்துருளியை தவிர்க்க வேணும் எண்ட அப்பாவின் முடிவிலையும் தப்பில்லை. எனவே நான் எனது நிலைப்பாட்டிலிருந்து மாறிவிட்டேன்.

தங்கை மாத்திரம் இடையிடையே தனது ஆசை நிறைவேறாமல் போனமை பற்றி குறைப்பட்டுக்கொண்டிருந்தாள். ஒரு நாள் அவள் ஆசையை தீர்க்க வேண்டும் என்பதற்காக நண்பன் ஒருவனின் உந்துருளியை இரவலாக வீட்டுக்கு எடுத்து வந்தேன். தங்கையை பின் ஆசனத்தில் வைத்து நகரை ஒரு சுற்று சுற்ற ஆசைப்பட்டேன்.

ஆனால் தங்கை இலேசானவளல்ல.... 'நீ படிச்சு உழைத்து உந்துருளி ஒண்டை சொந்தத்தில் வாங்கி வா' எண்டு பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

உந்துருளி பிரச்சனையை நான் மறந்தாலும் வீட்டின் அமைதி அதனால் குறைந்தது போன்றதொரு தோற்றப்பாடு வெளிப்படையாகவே தெரிந்தது.

அதற்கு தூபம் போடுவது போல எங்கள் எதிர் வீட்டில் எனது நண்பனின் தங்கை ஒருத்தி திடீரென ஒரு நாள் ஒரு 'ஸ்கூட்டிப்பெப்பை' புதிதாக கொள்வனவு செய்திருந்தாள். அதைக் காட்டி பெருமைப்பட விரும்பியவளாக ஓரோர் சாட்டுக்களுடன் எங்கள் வீட்டுக்கு வந்தாள். அவள் தங்கையை சந்தித்து பேசும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி என்னுடனும் பழக முயற்சிப்பதை எனது பெற்றோர்களால் அவதானிக்க முடியாமல் போகும் அளவிற்கு அவர்கள் முட்டாள்களல்ல!

அப்பா திடீரென்று ஒரு நாள் அறிவித்தார்...

' உந்துருளி ஒன்று எங்கள் வீட்டுக்கும் கட்டாயம் தேவை!'

தங்கை குதி குதி என்று குதித்தாள்.

அடுத்த நாளே அப்பாவும் நானும் நகரில் இப்போ ஏராளமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் உந்துருளி விற்பனை நிலையங்களுக்கு போனோம்.

நான் விரும்பி தெரிவுசெய்த உந்துருளிக்கு அப்பா பணம் கட்டினார்.

' மகன்.... உந்துருளி அவசியமான ஒரு வாகனம்தான் . அனால் நிதானம் முக்கியம். விபத்து வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எமது கை காலுக்கு ஒரு ஆபத்து உண்டானால் உந்துருளியால் வரக்கூடிய சந்தோசம் இல்லாம் போய் விடும். எமது நடமாட்டத்தையும் முடக்கிவிடும்' .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் புத்திமதிகளை நன்கு கிரகித்து கொண்டேன். நான் ஏற்கனவே உந்துருளியை ஓட்டக்கற்றுக்கொண்டிருந்தாலும் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற பல வாரங்களாகின.

இப்போதெல்லாம் வீட்டு கருமங்களுக்கு உந்துருளி நன்றாகவே பயன்பட்டது.

தங்கை அடிக்கடி 'ரியூசன்' வகுப்புகளுக்கு சென்றாள். அம்மா ' கிளினிக்' சந்தை என்று போனாள்.

அப்பா சிறிது தயங்கினார். ஆனால் நான் விடவில்லை. அவருடைய தேவைகளுக்காக எங்கெங்கு அவர் செல்லவேண்டி இருந்ததோ அங்கெல்லாம் அழைத்துச்சென்றேன்.

ஆனால் அதில் ஒரு பிரச்சனை எனக்கு இருந்தது. அவர் உந்துருளியில் பயணிக்க மிகவும் பயந்தார். வயது போன நேரத்தில் ஏதாவது விபத்துக்குள்ளாகி கை கால் எலும்பு முறிந்துவிட்டால் வாழ்விறுதிவரை முடங்கி விட வேண்டி வந்துவிடுமே என்று பயந்தார்.

அதனால் நான் உந்துருளியை ஓட்டும் நேரங்களில் அவர் பின்னால் அமர்ந்துகொண்டு எனக்கு அறிவுறுத்தல்கள் வழங்கிகொண்டிருந்தார்.

எனக்கோ இப்போ உந்துருளி தண்ணிபட்ட பாடம் . வளைவுகளில் 45 பாகை சரிவில் நான் செல்வது பார்ப்பவர்களுக்கு அதிர்ச்சி தரும்.

ஒரு நாள் அப்பாவுடன் செல்லும் போது அவரின் கதைகளுக்கு காது கொடுத்துக்கொண்டு சென்றதில் அநாவசியமாக ஒரு விபத்தை சந்திக்கநேர்ந்தது எனக்கு அதிர்ச்சியை கொடுத்தது.

' மகன் ... வாகனம் செலுத்துகிறவையளின்ரை முழுக்கவனமும் ஒரு முகப்படுத்தப்பட்டு இருக்க வேணும்... வேறு சிந்தனையே இருக்க கூடாது... நான் வேலை செய்த காலத்திலை என்னுடைய 'ஜீப்' சாரதியிலை ஒரு தவறான பழக்கம் இருந்தது. வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும் போது இடை இடையே 'சேர்ட் கொலரை' மேலே இழுத்துவிட்டு பார்வையையும் ஒரு பக்கவாட்டுக்கு திருப்புவார். ஒரு நாள் மஹியங்கனை நேர் றோட்டிலை' 'ஜீப்' போய்க்கொண்டிருக்கு... இரண்டு பக்கமும் வெளி... அவருக்கு குஷி பிறந்ததுவிட்டது. வாகனத்தை ' ஓட்டோ ட்ரைவிங் ' இல் விட்டிருந்தார். எண்பது மைல் வேகத்திலை ' ஜீப்' பறந்துகொண்டிருந்தது. தூரத்திலை ஒரு பசுக்கன்று தாயின் மடியில் பால்குடித்துக்கொண்டிருந்தது. சாரதிக்கு பழக்கதோசம் வந்துவிட்டது... வலது கையால் ' கொலரை' மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துவிட்டார்... தொடர்ந்து பார்வையை வீதியில் இருந்து விலக்கி பக்கவாட்டில் செலுத்திய ஒரு கணம் தான்... பசுக்கன்று ஒன்று ஒரு துள்ளு துள்ளி ' ஜீப்புக்கு' முன்னால் பாய்ந்தது. நல்ல வேளையாக சாரதி 'ஸ்ரேறிங்கை ' இறுக பிடித்ததால் தப்பினோம். பின்னால் திரும்பி பார்த்தேன். தொலைவில் கன்றுக்குட்டி நடுரோட்டில் துடி துடித்துக்கொண்டிருந்தது.....'

அப்பா இந்த அனுபவத்தை சொல்லிக்கொண்டு இருக்கேக்கை உந்துருளி கல்வி அமைச்சை கடந்து உவர்மலை சந்தி இறக்கத்திலை வேகமாக வந்துகொண்டிருந்தது. விகாரை வீதி பக்கமாக ஒரு 'ஓட்டோ' வந்ததை நான் அவதானிக்கத்தான் செய்தேன். ஆனால் அதன் சாரதி திடுமுட்டாக நடுசந்திக்கு வாகனத்தை இறக்கி விட்டான். என்னுடைய உந்துருளி 'நியூட்ரலிலை' வந்து கொண்டிருந்ததால் 'பிரேக்' அடித்தும் சொல்லுக்கேட்கேல்லை. சடார் எண்டு ஒரு சத்தம்தான் கேட்டது. ' ஓட்டோ' இரண்டு குத்துக்கரணம் போட்டது. எனது உந்துருளி அடி வாங்கின பின்பும் எங்களை தூக்கி எறியாமல் காப்பாற்றியது.

அப்பா கீழே குதித்துவிட்டார். அவருக்கு பட படப்பு தீரவில்லை. எனது நல்ல காலத்திற்கு அவருக்கு சரி பிழை விளங்கிவிட்டது. ' ஓட்டோக்காரன்' எப்படி திடுமுட்டாய் பிரதான வீதியில் ஏறுவான் என்று பெரிதாக சத்தமிட்டார். அதற்குள் ' பொலிஸாரும்' வந்துவிட்டார்கள். என்னை விடுவித்தார்கள்.

உண்மையில் அப்பாவாலைதான் அந்த விபத்து வந்தது. அப்பா ' ஓட்டோ ட்ரைவிங்' பற்றி சொல்லிக் கொண்டிருக்கேக்கை எனது சிந்தனை அதில் பதிந்துவிட்டது. எனது உந்துருளியை 'ஓட்டோ ட்ரைவிங்கிலை' விட்டால் எப்படி இருக்கும் எண்டு பார்க்க எனக்கு ஆசை ஏற்பட்டது. எனவே ' அக்சிலேட்டரால் ' கையை விலக்கிக்கொண்டு ' எஞ்சினை ' நியூட்ரல் ' பண்ணி விட்டேன். அதனால் தான் அது ' பிரேக்' அடித்தும் கேட்காமல் கட்டுப்பாட்டை இழந்தது. மற்றது புதிய விதியின் படி பிரதான வீதியில் வரும் வாகன சாரதிகளும் சந்திகளில் அவதானத்துடன் செல்லவேண்டும். நான் அந்த விதியை கடைப்பிடிக்காதது விபத்துக்கு காரணமாய்போய்விட்டது.

அந்த சம்பவத்துக்கு பிறகு அப்பா நான் எங்கு புறப்பட்டாலும் .... ' எந்த அவசரமும் இல்லை மகன்... ஆறுதலாய் போய் ஆறுதலாய் வா' என்று சொல்லுவதை வழக்கமாக்கிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் அடுத்தபடியாக எனது உந்துருளியில் பயணிப்பதையும் தவிர்க்க செய்தார். ஆனால் எங்களுடைய நகர் பல தெருக்களையும் ஒழுங்கைகளையும் தன்னகத்தே கொண்ட சிறிய பிரதேசம். முக்கியமான அலுவல்கள் பஸ்நிலையம் , புகையிரத நிலையம், கடைத்தெரு, கோயில்கள் வங்கிகள் எல்லாம் சிறிய தூர வித்தியாசத்தில் அமைந்துள்ளன. 'ஓட்டோ' பிடிப்பதென்றால் சாதாரணமாக ஐநூறு ரூபா துண்டு விழும். அதையே உந்துருளியில் செய்துமுடித்தால் அரை 'லிற்றர்' ' பெற்றோல்' போதும். எனவே அப்பாவால் என்னை முற்றாக தவிர்க்க முடியவில்லை. போக நான் ஒரு இடத்துக்கு அலுவலாக போக புறப்படுவேன். அப்பாவுக்கு அந்த திசையில் வேலை இருக்கும்.

ஒரு நாள்... 'மகன் நில்லடா நானும் வாறன்' என்று கூறி புறப்பட்டார். உந்துருளியை நான் ஓட்டினாலும் அவருடைய விருப்பத்துக்கு ஏற்பவே நான் ' அக்ஸிலேட்டர்' ' பிறேக்' எல்லாத்தையும் இயக்க வேண்டும் என்பது போலதான் அவரது புத்திமதி இருக்கும்.

'மகன் ... கைபேசியிலை பேசிக்கொண்டு வாகனத்தை ஓட்டக்கூடாது எண்டு சட்டம் சொன்னால் அதை கேட்டு நடக்கவேணும். அதுக்காக கைபேசியை தலைக்கவசத்துக்குள்ளே காதோடு பொருத்தி வைத்து பேசலாம் எண்டு அர்த்தமில்லை'

நான் சடாரென்று கைப்பேசியை உருவி எனது மேல் 'பொக்கற்றுக்குள்' வைத்துக்கொண்டேன்.

'உந்துருளியை செலுத்தேக்கை இரண்டு கைகளுமே ' ஹாண்டிலில் ' பொருந்தி இருக்கவேணும். தலைக்கவசத்தை சரிசெய்வது 'சோட்' பொத்தான் பூட்டுவது கழிசான் ' பொக்கற்றில் கையை நுழைப்பது எல்லாமே விபத்துக்கு காரணமாகி விடும்.'

நான் தங்கையோடு போகும் போது அவள் உந்துருளியை வேகமாக ஒட்டச்சொல்லி அடம்பிடிப்பாள். நானும் ஓட்டுவேன். உவர்மலை கீழ் வீதியில் பெரிதாக வாகனங்கள் ஓட்டம் இல்லை. அவ்விடங்களில் திருப்பங்களில் உந்துருளியை நிலமட்டத்திற்கு கொண்டுசென்று திருப்புவேன். அவள் சந்தோசத்தில் உரத்து கூக்குரல் இடுவாள்.

உந்துருளி லஷ்மி நாராயணன் கோவிலை தாண்டி நிலாவெளியை நோக்கி பறந்து கொண்டிருந்தது. அப்பா என்னை இறுக பற்றிகொண்டு ' மகன்... மெதுவாய் மெதுவாய் ' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அண்மித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வளைவொன்றிலை தடை முகாம் ஒன்று இருந்தது. இரண்டு பக்கமும் தெருவில் 'பரியர்' வைத்து பாதி வீதியை மூடிவிட்டிருந்தார்கள் நான் வேகமாக சென்றதால் அந்த சிந்தனை எனக்கு இருக்கவில்லை . அடுத்த பக்க 'பரியரை' தாண்டி ஒரு கார் உள்ளே வந்துவிட்டது. நான் வேகமாக அடித்த ' பிரேக்கில் ' எனது உந்துருளி 'பரியருக்கு' இப்பக்கம் மட்டு மட்டாக நின்றுவிட்டது. காரை ஓட்டிவந்தது ஒரு வெள்ளைக்காரன். அவன் என்னை பார்த்து பெருந்தன்மையுடன் சிரித்துவிட்டு சென்றுவிட்டான். நடந்த சம்பவத்தை பார்த்துக்கொண்டு கடமையில் இருந்த ஒரு இராணுவ வீரன் எதுவும் நடக்காதது போல மரம் போல் நின்றான்.

வழமை போலவே அப்பா என்னை குற்றவாளியாக காணாதது அவரது கதையில் புரிந்தது...

'' பார் மகன்... இந்த 'ஆமி'க்காரங்களுக்கு கொழுத்த மாதச்சம்பளமும் ' சிகரெட் அலவன்ஸ்' உட்பட சாப்பாடும் கொடுக்கிறான்கள். இரண்டு வாகனங்கள் தங்கடை தடைமுகாமை ஒரே சமயத்தில் அண்மிக்கிறதை அவதானிச்சு ஒரு வாகனத்தை நிறுத்தி அடுத்த வாகனம் போனபின்னாலை இதை போக விடலாம். இவன் என்னவென்றால் குத்துக்கல்லாட்டம் நிற்கிறான். எப்படியான பொறுப்புணர்ச்சி இவன்களுக்கு இருக்கெண்டு பார்.

உண்மையில் அந்த வீதியில் நான் வந்த வேகம் தடைசெய்யப்பட்ட வேகமாய்தான் இருக்கும். போக்குவரத்து பொலிஸார் தான் இது பற்றி நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அடுத்த வளைவில் அதுவும் ஒரு தடைமுகாம் இருக்கும் இடத்தில் தற்கொலை தாக்குதல் நடத்தும் வாகனம் போல நான் வேகமாக வந்தது பெரும் தவறு. இராணுவ வீரன் என்னை குற்றம் சாட்டாமல் விட்டதே அவனது பெரும் தன்மை என்று கூறவேண்டும்!

அந்த சம்பவத்திற்கு பிறகு அப்பாவுக்கு எனது வாகன ஓட்டத்தில் நம்பிக்கை வந்துவிட்டது மாதிரியும் தெரிந்தது.

தங்கச்சியையும் பார்த்து... ' மகளே நீயும் உந்துருளி ஓட்டபழகி இருந்தால் ஒரு அவசரத்துக்கு உதவும்' என்று கூறியமை எனக்கு உற்சாகமளிப்பதாக இருந்தது.

அப்பா பாவம்... அவருடைய வாழ்நாளில் அவர் பல ஊர்கள் இடமாற்றத்தில் திரிந்து கஷ்டப்பட்டு என்னையும் தங்கச்சியையும் செல்லமாக வளர்த்தவர். இப்ப ஓய்வூதியம் எடுத்த பிறகுதான் கொஞ்சம் ஓய்ந்திருக்கிறார். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் ' ரீயூசன்' என்று திரிவம். அப்பாவும் அம்மாவும் சிறு சிறு வருத்தங்கள் இருந்தாலும் ஒழுங்காய் 'கிளினிக்' போய் மருந்து சாப்பிட்டு ஆரோக்கியமாய் சந்தோசமாய் இருக்கினை.

இப்ப நான் அவரை உந்துருளியிலை கொண்டு திரிந்து அவரது கை காலை உடைத்துவிட்டால் வாழ்க்கையே நாசமாகிப்போய்விடும்...

எனவே நானும் இப்போ அப்பாவை அங்கை வாங்கோ இங்கை வாங்கோ எண்டு பெரிசா கேட்கிறதில்லை.

அப்படியில்லை எண்டு கூட்டிக்கொண்டு போனாலும் சிறு பிள்ளை ஒன்றை ஏற்றிக்கொண்டு போகும் கவனத்துடன் போய்வருவேன்.

தங்கச்சி இப்ப முன்வீட்டு நண்பியின் உந்துருளியின் உதவியுடன் ஓடப் பழகிக்கொண்டாள்.... நானும் தங்கச்சிக்கு அவளது நண்பி உதவி செய்கிறாளே என்ற நன்றி உணர்ச்சியில் அவளை கண்டால் ஓரளவு சிரித்து பேசுவேன்...

அன்று அப்பாவுக்கு ஓய்வூதியம் போடும் நாள். அப்பாவிடம் 'ஏ.ரீ.எம் காட்' இருக்கின்றது. அழைத்துச்சென்றால் சரி...

அப்பாவும் அம்மாவும் இந்த மாத பட்டியல் போட்டு வாங்கவேண்டிய சாமான்களுக்கு தேவையான பணம் மின்சாரபில், 'கேபிள்', ஆகியவற்றுக்கு தேவையான பணம் என்று கணக்கு போட்டுக்கொண்டிருந்தார்கள்.

நானும் எனது ஓட்டங்களை பிற்போட்டு விட்டு அப்பாவுக்காக காத்திருந்தேன்...

தங்கையுடன் பேசி சிரித்துக்கொண்டிருந்த நண்பி அப்பாவுக்கு மரியாதை கொடுக்கும் விதத்தில் தான் போவதாக எனக்கு கண் ஜாடை காட்டிவிட்டு சென்றாள்.

'மகன்... போவம்...'

'ஓம் அப்பா...'

உந்துருளி பஸ்நிலையத்துக்கு முன்வரும் போது வழமைக்கு மாறான வாகன நெரிசலை அவதானித்தேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' மகன் ... சனம் , தாங்கள் தங்களுடைய யோசனைகளிலை போகுமே தவிர வீதியால் போகிறோமே என்ற நினைப்பு அவர்களுக்கு இருக்காது. 'சைக்கிள்' காரரும் ஓரமாய் போவது போல போக்குகாட்டிவிட்டு திடீரென தெருவுக்கு ஏறிவிடுவார்கள். ஆனபடியால் நாங்கள் அடிக்கடி 'ஹோர்ன்'அடித்து அவர்களை எச்சரிக்கை செய்யவேணும். இந்த நாளையிலை விபத்துக்களிலையிருந்து தப்புறதுக்கு அது ஒரு முக்கியமான வழி...'

நானும் அதை அனுசரித்துதான் உந்துருளியை செலுத்தினேன். வங்கி அண்மிப்பதற்கு இன்னமும் 300மீற்றர் தூரமளவில்தான் இருக்கும். மத்திய வீதியால் போய்கொண்டிருந்தோம். அது ஒரு ஒற்றை வழிப்பாதையாய் இருந்தும் வாகன நெரிசல் அதிகமாக இருந்தது... தன்னியக்க பணக்கொடுப்பனவு இயந்திரம் ( ATM Machine ) அமைந்திருந்த இடம் ஒரு சந்தியின் மூலையாகும் . அந்த சந்தியில் ஏறி வலப்பக்கமாக திரும்பியதும் தெரியும். மற்றொரு உந்துருளி இராஜவரோதயம் வீதியால் வேகமாக வந்தது மின்னியது போல இருந்தது. இரண்டு உந்துருளிகளும் தூக்கி எறியப்பட்டன. எனக்கு ஒன்றும் ஆகவில்லை. அப்பா ஒரு புடவைக்கடைக்கு முன்னால் விழுந்து கிடந்தார்.

நான் ஓடிச்சென்று முதுகுப்புறம் கைகொடுத்து மெதுவாக அரவணைத்தேன். மற்றவர்களும் உதவிக்கு வந்துவிட்டார்கள். அப்பாவால் தன்னை சுதாகரித்துக்கொண்டு எழும்ப முடிந்தது.

கையிலும் காலிலும் உராய்வுக்காயங்கள் பல இடங்களில் இருந்தன... எலும்பில் பாதிப்பு எதுவும் இல்லை.

நான்தான் நன்கு பயந்துவிட்டேன். இப்போ அப்பாவிடம் கிழி வாங்கவேண்டியதுதான்...!

' மகன்... நீ ஏன் பயப்படுகிறாய்... உன்னிலை பிழை எதுவும் இல்லை... வரப்போற தேர்தலுக்கு முன் வெளிக்கள அரச உத்தியோகத்தர்கள் எல்லோருக்குமே உந்துருளிகள் கொடுக்கிறான்கள்... ஏற்கனவே இலட்சக்கணக்கான உந்துருளிகள் வீதிக்கு வந்து விட்டன. அதாலைதான் வாகன நெரிசலும் அதிகரித்து நாங்களும் விபத்துக்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்திட்டுது...!'

அப்பா கூறியது ஆச்சரியமாக இருந்தது. எனக்கே இப்போதுதான் விபத்துக்கான காரணம் புரிந்தது!

வீரகேசரி - 07.டிச.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# கைப்பேசி

பதினாறே வயதுதான்! வீட்டில் அம்மா அப்பாவுக்கு தனி செல்லம்!

பாடசாலையில் தனது குறும்பான பேச்சுக்களாலும் செய்கைகளாலும் சக மாணவிகளையும் ஆசிரியைகளையும் கவர்ந்து இழுக்கக்கூடிய சாமர்த்தியம் அவளுக்கு இருந்தது.

போதாதற்கு வயதை மீறிய உடல்வாகு... அடர்ந்த கேசம்... செம்மையான மேனி... அனைவரையும் கவர்ந்திழுப்பதாக... இறைவன் அனைவர்க்கும் அனைத்தையும் கொடுத்துவிடுகிறானா? எதையும' பெற்றுக்கொள்ள கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

பாடசாலையில் இருந்து வீட்டுக்கு ஒரு நடைதூரம்தான். அவளை மொய்க்கும் கண்கள் ஏராளம்...ஏராளம்...!. பாடசாலை நண்பி, துவிச்சக்கரவண்டியில் வருபவள், அவளுக்கு வீடுவரை துணை கொடுப்பாள். கதைத்தபடியே நடந்து வருவார்கள்.

அநேகமான நாட்களில் நண்பி, 'மொபைல் போன்' வாயிலாக யாரோ முக்கியமானவருடன் உரையாடிக்கொண்டு வருவாள். 'மொபைல் போன்' பற்றி அவள் பெரிதாக எதுவும் அறிந்திருக்கவில்லை.

ஆசிரியைகள் தத்தம் கைபைகளில் 'மொபைல்போன்களை" வைத்திருந்தார்கள். அதுபற்றி தலைமை ஆசிரியைக்கு திருப்தி இல்லை.

கண்டிப்பு இருந்தது. மிகவும் அவசியமான நேரங்களில் மட்டும் ஓரமாக மறைவில் நின்று பேசுவார்கள்.

சில மாணவிகள் 'மொபைல் போன்' வைத்திருப்பது பிடிபட்ட போது அது 'அசெம்பிளியில்' பெரிய அமளிதுமளிக்குள்ளாகியது. ' அவளுக்கு மொபைல் போன்' வைத்திருப்பதில் உள்ள பிரச்சனை என்னவென்பது இதுவரை பிடிபடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மொபைல் போனில்' நண்பி உரையாடும்போது பிரதிபலிக்கும் அச்சம் ,மடம்,நாணம்,பயிர்ப்பு அவளது உடலை புல்லரிக்க செய்யும். 'மொபைல்போன்' பற்றி அறிந்து கொள்ள அவள் நிறையவே ஆசைப்பட்டாள்.

வகுப்பில் மாணவிகள் குழு ஒன்று இருந்தது.

'(F)பிறி' பாடம் என்றால் போதும்... கூடி கூடி ஏதோ குசுகுசுப்பார்கள். அவர்கள் பயிற்சி புத்தகங்களில் நோட்ஸ் இருக்கின்றதோ என்னமோ 'மொபைல் போன்' மட்டும் தவறாது மறைத்து வைக்கப்பட்டிருக்கும். அவர்களுடன் சிநேகம் வைத்து நெருங்கிப் பழகினால் 'மொபைல் போன்' பற்றி தெளிவாக அறியலாம்.

அவளது நெருக்கம் அவர்களுக்கு உற்சாகத்தை கொடுத்தது. பெண்களே விரும்பும் பெண்மைக்கு சொந்தகாரியல்லவா அவள். ஆனாலும் அவர்களிடம் ஒரு எச்சரிக்கை மனோபாவம் இருந்தது.... விழிப்பாக இருந்தார்கள் 'மொபைல் போன்' பற்றி அவள் விசாரித்தபோது தமக்கு அதுபற்றி எதுவும் தெரியாது என அடித்துக்கூறினார்கள்.

இந்த மகா பொய்யை கேட்டுக்கொண்டிருந்த மற்றொருத்திக்கு அவளில் இரக்கம் ஏற்பட்டது... அவள் வினாவினாள்.... உன்னிடம் ஒரு 'மொபைல் போன்' இருக்கிறதா?

'இல்லை'

'அப்படியாயின் உனக்கு நாங்கள் உதவமுடியாது. நீ எப்போ ஒரு மொபைல் போனுக்கு சொந்தகாரியாகி அதனை பாடசாலைக்கு எடுத்து வருவாயோ அப்போது அதன் பயன்பாடு பற்றி நாங்கள் உனக்கு வகுப்பே எடுப்போம்' என்று கூறி உரத்துசிரித்தாள்.

மறுநாள் அந்த நண்பி பாடசாலைக்கு வரவில்லை. அவள் பற்றி மற்றவர்களிடம் விசாரித்தபோது

அவள் விவாகம் செய்துகொண்டுவிட்டாள் என்றும் இனிமேல் பாடசாலைக்கு வரமாட்டாள் என்றும் உறுதியாக கூறினர்.. பாடசாலை முடிந்து வீட்டுக்கு செல்லும் வழியில் நண்பி சில உண்மைகளை கூறினாள்...

விவாகம் செய்து விட்டதாக குறிப்பிடப்படும் மாணவி உண்மையில் பெற்றோர் அறியாமல் யாரோ ஆண்கள் கல்லூரி மாணவன் ஒருவனுடன் ஓடிவிட்டாள்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில தினங்களில் பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்க பொது கூட்டம் நடைபெற்றது. அதற்கு சிரேஸ்ட 'பொலிஸ்' அலுவலர்கள் சிலரும் வருகை தந்திருந்தார்கள்.

மறுநாள் 'அசெம்பிளியில்' தலைமை ஆசிரியை பேசுகையில்... தங்கள் காலத்தில் 'மொபைல் போன்' என ஒன்று இருக்கவே இல்லை என்றும்.... அதனால்தான் தாங்கள் நன்கு கற்று நல்ல நிலைக்கு வரமுடிந்தது என்றும்... யாரும் மாணவிகள் 'மொபைல் போனை' பாடசாலைக்கு எடுத்துவர கூடாது என்றும் அடித்துக்கூறினார்கள்.

ஆசிரியைகள் உட்பட எவரும் மறுபேச்சு பேசவில்லை...!

மீண்டும் பாடசாலை முடிந்து செல்லும் வழியில் நண்பி கூறுகையில் 'மொபைல் போன்' இந்த உலகை எங்கள் உள்ளங்கைக்குள் கொண்டு வந்துவிட்டது. நாங்கள் உலகம் அறிந்தவர்களாக மாறுவதை இக்கால கிழடுகட்டைகள் விரும்பாமைதான் பிரச்சனை ! எங்கள் கையில் ஒரு 'மொபைல் போன்' இருப்பது எங்களுக்கு எவ்வளவு பாதுகாப்பு... யாரும் எங்கள் மீது அத்துமீறல்களை புரியாதவாறு அது தடுக்கின்றது . எமக்கு தேவையான உதவிகளையும் சேவைகளையும் உடனுக்குடன் பெற முடிகின்றது'.

'அதனால் என்ன?' அவளது உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த எண்ணம் கேள்வியாக வெளிவந்தது.

நண்பி கூறினார்... 'நீ அப்பாவிடமோ அம்மாவிடமோ பேசி நல்ல 'மொபைல் போனை' உனக்கென வாங்கிக்கொள்...'

அன்று அவள் வீடு திரும்பிய போது பெரும் அட்டகாசம் பண்ணியவாறே வந்தாள். புத்தக பையை வீசியெறிந்தாள். வெள்ளை நிற 'ரெனிஸ்ஷூவை' பாதங்களில் இருந்து உதறி எறிந்தாள்...

அப்பா சோபா செட்டியில் பத்திரிகை பார்த்தபடி அமர்ந்திருந்தார்.... அவர் அவளது உற்சாகத்தையும் சேஷ்டைகளையும் அவதானித்துக்கொண்டு ஒரு புன்சிரிப்புடன் அவளை எதிர்கொண்டார்.

அவள் ஓடோடி வந்து சோபா செட்டியில் அப்பாவின் அருகில் விழுந்தாள். அவரது கையை பிடித்து உவ்வா கொடுத்தாள். அதற்குள் அம்மாவும் குளியலை முடித்துக்கொண்டு வந்துவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா கேட்டார்...

'சரி...சரி... உனக்கு என்ன வேணுமானாலும் கேள்... 'டுர்' போக போறாயா?... 'ஸ்கூட்டி பெப' ஒன்றை வாங்கப் போறாயா?... என்ன ? என்ன?"

அம்மாவுக்கு ஆச்சரியம்... அப்பாவுக்கு தப்பாமல் பிறந்த வாரிசு. இப்படியும் செல்லம் கொடுப்பதா? யோசித்தாள்.

'அதெல்லாம் இல்லையப்பா...' சிணுங்கினாள்.

'சரி எதுவென்றாலும் கேள். நான்தான் வாங்கித் தருகின்றேன் என்கிறேனே.' அப்பா உறுதியளித்தார்.

அவளுக்கு இப்போது நம்பிக்கை வந்துவிட்டது. இனி கேட்க வேண்டியதுதான் ';மொபைல் போன்' கிடைத்தமாதிரித்தான்! சோபா செட்டியிலிருந்து எழுந்து ஒரு துள்ளு துள்ளினாள். அம்மாவுக்கும் ஒரு உவ்வா!.

பின்னர் அப்பா பக்கம் திரும்பி ஓடி வந்து அவர் கன்னமிரண்டையும் பலத்துடன் கிள்ளினாள்... ' அப்பா எனக்கு ஒரு 'மொபைல் போன்' வேணும். நல்லதா 'கோஸ்றலியா' இருக்க வேணும்... வாங்கி தருவீங்கதானே அப்பா?'

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அவர்களது உச்சம் தலையில் பெரியதொரு இடி இறங்கியது போல இருந்தது. தங்கள் மகள், தமக்கு அறிமுகமற்ற ஒரு இளைஞனை காட்டி அடைஞ்சே தீருவேன்' என்று சொல்லியிருந்திருந்தால் எப்படி இருக்குமோ... கொஞ்சம் ஏறத்தாழ அப்படிதான். திகைப்பில் இருந்து விடுபட இருவருக்குமே சிறிது அவகாசம் தேவைப்பட்டது.

அம்மா , தான் மயக்கம் போட்டு விழுந்து விடுவதை தவிர்க்க என்றாற் போல அப்பாவுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள்... அப்பா கூறினார்... ' வாங்குவம்...' தலையை சொறிந்து கொள்ளாத குறை. அவள் கைகளை உதறி உதறி துள்ளி துள்ளி குதித்தாள்.

'எனக்கு தேவை வருமோ வராதோ தெரியாதப்பா... வராமலும் போகும் ஆனால் , என்னட்டை ஒரு மொபைல் போன்' இருப்பது நண்பிகளுக்கு தெரிய வேணும்... நான் பாடசாலை விட்டு நடந்து வரேக்கை 'மொபைல் போனால் ' காதை மறைந்துக்கொண்டு சிரிச்சு சிரிச்சு பேசவேணும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஆசிரியை, ஒருவரும் ' மொபைல் போனை' பாடசாலைக்கு கொண்டு வரக்கூடாது எண்டு 'அசெம்பிளியிலை' சொன்னால் ... நான் ' மொபைல் போன் ' வைச்சிருக்கிற மற்றொரு நண்பியை ஓரக்கண்ணால் பார்த்து சிரிக்கவேணும்...

அப்பாவின் முகத்தில் எண்ணை வழிந்தது...

அம்மாவுக்கு இப்போது நிலைமையை சமாளிக்கவேண்டிய நெருக்கமான கட்டம். 'சரி பிள்ளை... இப்ப வா... வந்து 'யூனிபோர்மை' மாற்றிக்குளி.... பிள்ளைக்கு பசிக்குமெல்லே... அப்பா சொன்னவர் தானே வாங்கித்தாறனென்டு...'

அவளுடைய முகம் சுருங்கிவிட்டது... தொடர்ந்து சில தினங்கள் வீட்டில் அமாவாசை கௌவிக்கொண்டது... பூரண ஹர்த்தால் தினங்கள் தொடர்ந்தன. அன்று ஒரு பாடசாலை தினம்... அவள் சென்றுவிட்டாள்.

அம்மா அவளுக்காக அப்பாவிடம் பரிந்து பேசினாள்.

ஏனப்பா.... 'மொபைல் போனாலை' பிரச்சனையா? அவர் கூறினார்...

'மொபைல் போனாலை பிரச்சனை எண்டு சொன்னால் இந்த உலகமே எங்கள் மேல் காறித்துப்பும். ஆனால் எங்கடை ஆட்கள் ' மொபைல் போனை' பிரச்சனையாக்குவதுதான் பரிதாபத்துக்குரியது'

அவளுக்கு புரியாததல்ல... அம்மா காலையில் மூன்று கப் நெஸ்கபேயை தயார் செய்து வைத்தால் மகள் ஒரு 'கப்பை' அப்பாவிடம் கொண்டு சென்று கொடுத்துவிட்டுதான் தனது கோப்பியை அருந்துவாள்.... பாடசாலை நேரத்தை 'கவர்' பண்ண கூடியதாக அப்பாவால் காலை ஆகாரத்தை எடுக்க முடியாதென்று தெரிந்தாலும் தான் சாப்பிடும் போது அவரையும் வலிந்து அழைப்பாள்... பாடசாலை முடிந்து வந்தால் நேரே அப்பா அமர்ந்திருக்கும் 'சோபா செற்றி'க்கு போய்விடுவாள்...

எந்நேரமும் சிரிப்பும் கும்மாளமும்! எல்லாமே 'மொபைல்' போனுக்காக! அவளது தற்காலிக அராத்தல்களை எல்லாம் அம்மா அன்பு காரணமாக சகித்துக்கொண்டிருந்தாள். நாட்கள் செல்ல செல்ல அப்பாவுக்கு கவலை அதிகரித்துக்கொண்டு வந்தது. 'மொபைல் போனை' அவளுக்கு வாங்கிக்கொடுக்க பொறுப்புணர்ச்சி தடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக்கொடுக்காமல் இருக்கும் நாட்களில் மகளின் அவமதிப்பை சந்திப்பதாக மாறிக்கொண்டிருந்தது. சில தினங்கள் கழிந்து அன்றும் அவள் பாடசாலை நேரம் முடிந்து நண்பியுடன் கதைத்தபடி வீடு நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

ஏற்கனவே , 'மொபைல் போன்' காரணமாக வீட்டில் நடைபெறும் சச்சரவுகள்.... பெற்றோரை எடுத்தெறிந்து நடத்தல்... இத்தியாதி விடயங்கள் வீட்டு சுவர் ஏறி குதித்து நண்பியின் காதுக்கு வந்துவிட்டிருந்தன.

அவளது நிலைமை நண்பிக்கு அவள் மேல் பரிதாபத்தை ஏற்படுத்தியது... நண்பி கூறினாள்....

எல்லோருமே 'மொபைல் போனுக்காக' தாய் தந்தையர்களை எதிர்பார்ப்பதில்லை ... நான் கூட எனது போனை பெற்றோர்கள் வாங்கித்தந்து பெற்றுக்கொள்ளவில்லை. அவளுக்கு ஆச்சரியமாக போய்விட்டது.

'அப்படியென்றால் எப்படி பெற்றுக்கொண்டாய்...? நண்பி தான் உருட்டி வந்த தனது துவிச்சக்கரவண்டியை நிறுத்தினாள். பின்னர் கூறினாள்...

'அதோபார் அந்த கூல்பார் முகப்பில் ஒரு இளைஞன் நிற்பது தெரிகிறதா...? நானும் நீயும் வரும் நேரம் பல தினங்கள் அவன் அங்கு நின்று உன்னை கண்வெட்டாமல் விழித்துபார்த்துக்கொண்டு நிற்கின்றான். நீ அதனை கவனிக்கவில்லை. ஆனால் , உன்னுடன் கதைக்கும் ஒரு சந்தர்ப்பத்தைதான் அவன் எதிர்பார்த்து காத்திருக்கின்றான். நீ அவனுடன் கதைக்க முன்வந்தால் பின்னர் அவனால் ஒரு நாளாயினும் உன்னுடன் பேசாதிருக்க முடியாது. அதற்காகவே அவன் உனக்கு ஒரு 'மொபைல்போனை' அன்பளிப்பு செய்து விடுவான்.' அவள் நண்பிக்கு கூறினாள்.

'நீ உனது காதலனிடம்' மொபைல் போனை' பெற்றுக்கொண்டிருந்தால்... அது வேறு... 'மொபைல் போனுக்காகவே' ஒருவனை காதலிப்பதென்பது வேறு'

நண்பி உரத்துச்சிரித்தாள்.... 'நீ ஒருவனுடன் பேசுவதென்பதும் வேறு... ஒருவனை காதலிப்பதென்பதும் கைபிடிப்பதென்பதும் வேறு'! ... அந்த அநாகரிகத்தை ஏற்றுக்கொள்ளும் பெண்ணல்ல அவள்...

'தேவையில்லை... கைசெலவுக்கென அம்மா எனக்கு தினம் தினம் பாடசாலை வரும் போது தரும் பணத்தை நான் சிக்கனமாக சேர்த்து வைத்துள்ளேன். அதில் மூவாயிரம் ரூபாவுக்கு மேல் உள்ளது. நாளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் நீயுமே நல்லதொரு மொபைல் போனை தெரிவு செய்து வாங்கிக்கொள்ளலாம்.

நண்பிக்கும் அது உடன்பாடாகவே இருந்தது. அனாலும் தனது 'போய்பிரண்டை' 'மொபைல் போன் சொப்பிற்கு' அழைத்து சென்று அவனுடைய ஆலோசனையை பெற்றுக்கொள்வதென்ற நண்பியின் கருத்தை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை.

'நாமே நல்லதொரு ' 'பகேஜை' தெரிவுசெய்ய வேண்டும்.

வாடிக்கையாளர்களின் நலனில் அக்கறை எடுப்பது அவர்களது பொறுப்பு'

அன்றைய தினம் அவள் வீடு வந்தபோது நல்ல முறையில் பொதிசெய்யப்பட்ட 'மொபைல் போன்' ஒன்று கைவசம் இருந்தது. அப்பாவும் அம்மாவும் 'சோபா செற்றியில்' அமர்ந்திருந்தார்கள்.

அப்பாவிடம் அவள் தான் வாங்கிவந்த 'மொபைல் போனை' நீட்டினாள். பொதியை திறந்து பார்த்தபடியே அவர்.... 'அவசியமா? என அம்மாவை பார்த்து கண்களால் வினவினார். பின்னர்...

'மொபைல் போன்' ஒன்றை தெரிவுசெய்வது என்பது எத்தனை பெரிய விடயம் ... விலை 'கறண்டி பீறியட்' என்றெல்லாம் இருக்கிறதல்லவா?..

அவள் .... அவரை அண்மித்தபடியே... அப்பா... நான் பூர்விகாவில் தான் 'மொபைல் போன்' வாங்கியிருக்கேன்... எனக்கு உங்கள் மேல் எவ்வளவு அக்கறை இருக்கோ அதைவிட மேலான அக்கறை பூர்விகாவுக்கு எங்கள் மேல் இருக்கு.. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் அப்பா நான் 'மொபைல்போன்' வாங்கினேன்!

அப்பாவுக்கு அதிர்ச்சியாக போய்விட்டது. அவரது மகள் பேசியது போன்ற ஒரு தொலைக்காட்சி விளம்பரத்தை அடிக்கடி பார்த்த ஞாபகம் அவரது நினைவுத்திரையில் பிரதிபலித்தது.

ஸ்டார் விஜய் தொலைக்காட்சியில் பூர்விகா விளம்பரத்துக்காக அவள் நன்றி கூறினாள்.

அப்பாவின் பார்வை இப்போ எதேச்சையாக தொலைக்காட்சிப் பெட்டியின் பக்கம் திரும்பியது...!

தினக்குரல் - ஆக.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# "நனவாகும் கனவுகள்."

அக்காளின்ரை முகம் ஒரு கிழமையாய் சரியில்லை. கொலை செய்ய திட்டமிட்டவையின்ரை முகம் போலையோ களவெடுக்க தீர்மானிச்சவையின்ரை முகம் போலையோ வெளிறிக் கிடக்கு. எனக்கு அவளைப் பாக்க பாவமாய் கிடக்கு ...

அவள் ஏதாவது செய்ய போய் அப்பா அம்மாவிலை நான் பரிதாப்படுகிற மாதிரி செய்து போடுவாளோ எண்டு எனக்கு பயமாய்கிடக்கு ....

அப்பா அம்மாவுக்கு நாங்கள் மூண்டு பிள்ளைகள்... அக்காளும் நானும் மகளிர் கல்லூரி ஒண்டிலை உயர்தர, சாதாரண வகுப்புக்களிலை படிக்கிறம். தம்பி ஆண்கள் கல்லூரி ஒண்டிலை படிக்கிறான்.

அப்பா யாழ்பாணத்திலை இருந்து அரச வேலை வாய்ப்புக்கிடைத்து திருக்கோணமலைக்கு வந்து இருபது வருசமாகுது. நாங்கள் மூவரும் பிறந்தது இஞ்சைதான் .

அப்பா அடிக்கடி யாழ்ப்பாணத்தைப் பற்றி புழுகுவார்...

' அங்கை என்ன படிப்பப்பா... இல்லாட்டி அங்கத்தயான் கலாச்சாரம் போல வேறெங்கிலும் வருமா...' எண்டு வாயை வாயைப் போட்டு அடிப்பார்.

இண்டைக்கு காலையிலை எழும்பின நேரம் தொடக்கம் அம்மாவோடை ஏதோ அராத்துப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

'சனிக்கிழமை கொஞ்சம் பிந்தி எழும்புவம் எண்டால் ஆர் விடுகினை...' எண்டு புறு புறுத்த படி அக்கா கையில் ' டூத் பிரஸ்' உடன் கிணற்றடிப்பக்கம் போகிறாள்... முகத்தை பார்த்தால் இரவிரவாய் அழுதிருப்பாள் போலை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா பாவம்... அப்பாவின்ரை செட்டுக் குணத்துக்கு அவா தாக்குப் பிடிக்கிறது பெரிய காரியம்தான்.

அப்பாவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சினேகிதர்தான் இருக்கினம். அதுக்கு காரணம் அவரின்ரை வாய்கொழுப்புதான்.

'நாங்கள் ஆர்தெரியுமே ... கார் காத்த வேளாளர் எல்லே...' எண்டு அவர் சொல்லேக்கை அவருடைய முகத்திலை ஒரு பெருமிதம் அநாயாசமாக தோன்றும்.

ஆரையாவது முதற்றடவையாக சந்தித்தால் ' நீர் எந்த ஊர்... ? அங்கை எந்த திக்கு ... நீர் அவருடைய ஆக்களா? எவர் பகுதி ?' எண்ட அநாவசியமான கேள்விளைத்தான் முதல்லை கேட்பார் ....

வருபவர் அப்பாவின்ரை பகுதியெண்டால் இருவரும் சேர்ந்து கொட்டம் அடிப்பார்கள்... அப்படியில்லை யெண்டால் வருபவர் பாவம் சோர்ந்து விடுவார்.

ஒரு நாள் அப்பாவின்ரை கந்தோருக்கு புதிய பணிப்பாளர் ஒருவர் வந்திருக்கிறார்... அவர் கலப்பு திருமணம் செய்திருந்தார். மனைவி உயர்சாதிக்காரி எண்டு அப்பா எடுத்த தகவலின் படி பணிப்பாளரோடை மனம் விட்டு பேசியிருக்கிறார்....

'எங்கடை பிரதம செயலாளர் இன்னாராம்..' எண்டு சொல்லி அப்பா சிரிச்சிருக்கிறார். பணிப்பாளரின்ரை முகம் கறுத்துவிட்டது.

பணிப்பாளரும் பிரதம செயலாளரும் சொந்த காரர் எண்டு தெரிய வந்தபோது அப்பா பணிப்பாளர் முன் போய் அசடு வழிந்திருக்கிறார்....

அக்கா இப்பவெல்லாம வேலை செய்ய போனால் தேவையில்லாமல் நியாயமான நேரம் மினக்கடுவாள். பல்லு தேய்ச்சு முகம் கழுவி வர அரைமணித்தியாலமாய் போய்ச்சு.... அவ்வளவுக்கு யோசனை...

இதெல்லாம் அந்த அண்ணாவை அக்கா சந்திச்ச பிறகு வந்த வினைதான்!

அந்த அண்ணா நல்லவர்.... அழகாய் உயரமாய் நிறமாய் வடஇந்தியகாரன் மாதிரி இருப்பார். திருக்கோணமலை பாடசாலையில் படிச்சு கம்பஸ் போனவையிலை அவரும் ஒருத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா அவரோடை கதைச்சுக்கொண்டிருக்கேக்கை அவர் வெட்கப்பட்டு வெட்கப்பட்டு நெளியிறதைப் பாக்க எனக்கு சிரிப்பு வரும். அக்காளின்ரை அழகு அவரை அப்படி நெகிழ வைக்கு தெண்டு நினைப்பன்.

பேராதனையாலை சனி ஞாயிறுதான் அவர் ஊர் வருவார்... அந்த நாட்களிலேயே அக்கா ஏதாவது சாக்கு போக்கு சொல்லிவிட்டு என்னையும் கூட்டிக்கொண்டு கோயில் எண்டோ கடைத்தெரு எண்டோ போவாள்.. அங்குதான் அண்ணாவை அவள் சந்திப்பாள்..

'' அக்கா.... அண்ணாவை வீட்டை கூட்டிப்போவமடி....'' எண்டு ஒரு நாள் கேட்டேன்...

'அப்பாவோடை சமாளிக்க ஏலாது பிறகு பார்ப்போம்' எண்டு அக்கா மறுத்துவிட்டா...

அக்காவுக்கும் அப்பாவிலை நம்பிக்கையில்லை...! யாழ்ப்பாணத்திலை இருந்து அப்பாவின் நண்பர் அடிக்கடி வருவார். அவரைக்கண்டால் போதும்... அப்பாவின் புழுகு எல்லை மீறிவிடும். அதற்கு காரணம் அவையள் இரண்டு பேரும் ஒரே 'கம்பஸில்' படிச்சவையெண்டோ அல்லது ஒரே திணைக்களத்திலை வேலை செய்தவையெண்டோ இல்லை... வேறென்ன? அவர்களுக்கு உரித்தான ஒரு கெடுபிடியான புரிந்துணர்வுதான்! அப்பா தன்ரை மற்ற நண்பர்களோடை கதைக்கேக்கை... அந்த நண்பரோடை தான் தனது பிள்ளைகளுக்கு கலியாண சம்மந்தம் வைக்க இருப்பதாக வாயடிப்பார். அதாலை அக்காவை பெண்கேட்டு எவராவது முன்வரக்கூடிய சந்தர்ப்பம் தடைப்படுவதை அப்பா புரிந்துகொள்ளவில்லை. அதே சமயம் அப்பாவின் நண்பருக்கும் அக்கா பற்றி எந்த 'ஐடியா'வும் இருக்கவில்லை.

இரண்டு சனிக்கிழமையாயிருந்தும் அக்கா தன்னுடைய திட்டம் ஒன்றையும் எனக்கு கூறவில்லை. எனவே நானே அவளை தேடி சந்தித்தேன்.

அவள் கட்டிலில் முகம் குப்புற கிடந்து அழுதுகொண்டிருந்தாள். என்னை கண்டதும் தன்னை சுதாகரித்துக்கொண்டு எழுந்தாள். ' ஏன் அக்கா.... என்ன பிரச்சனை?' 'ஒண்டும் இல்லையடி இவன் தம்பி தேவையில்லாத வேலைகள் பார்த்துக்கொண்டு இருக்கிறான். முளைச்சு மூண்டு இலை விடேல்லை.... என்ரை காதலை பற்றி அம்மாவிட்டை விமர்சித்திருக்கிறான்'.

எனக்கு திக் எண்டது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' அப்ப நானும் மாட்டு ....!''

"அம்மா என்னை ஒண்டும் கண்டிக்கவில்லை ஆனால் அதற்கு காரணம் என்ரை முகத்தை அவா பார்க்க விரும்பாதது தான்... 'உன்னைத்தான் துளைச்செடுப்பா... கவனம். எல்லாம் உன்ரை கையிலைதான் இருக்கு..."

அம்மா பொறுமைசாலிதான். ஆனால் இப்படியான விசயத்திலை எப்படி நடந்துகொள்ளுவா எண்டு தெரியேல்லை. எனக்கு யோசனை பிடித்துவிட்டது.

இவன் தம்பி ஏன் இப்படி செய்தான். இவன் பெரிய ஆள் எண்டு இல்லை.... முந்தியொருக்கால் அக்காவட்டை கடிதம் வாங்கிதாறன் எண்டு கூறி ஒரு இளந்தாரியிட்டை காசு கேட்டிருக்கிறான். அவனும் அக்காவை காட்டு எண்டு கேட்க இவனும் எங்கையோ வைத்து காட்டியிருக்கிறான். அவனும் அக்காவிலை மருண்டு பெரும் தொகை பணத்தை குடுத்திட்டான். அந்த இளந்தாரியும் கடிதம் கேட்டு இவனுக்கு பின்னால திரிஞ்சிருகிறான்.. அவன்ரை கரச்சல் மிகுதியாகி மிரட்டியும் விட இவனே ஒரு காதல் கடிதத்தை எழுதி அக்காவின்ரை கையெழுத்தையும் வைச்சு அவனிட்டை கொடுத்திட்டான்.

அந்த இடைவெளியிலை அந்த வாலிபன் அக்காவை தேடி தேடி 'சைட்' அடிச்சிருக்கிறான். ஒரு நாள் அக்காவை நேரிலை எதிர்கொண்ட போது தான் தம்பியின்ரை கூத்து உடைஞ்சுது.

இவன் இப்ப அக்காவை பற்றி அம்மாவிட்டை போட்டுக்கொடுத்திருக்கிறான்.

பார்ப்பம் என்ன நடக்குதெண்டு..... காலைச்சாப்பாட்டை ஆயத்தம் செய்த பிறகுதான் குசினியிலை இருந்து அம்மாவின் குரல் வந்தது....

''எடியேய்.... இளையவள், வாடி இங்கே..." கோடை இடி எண்டு கதைக்கிறவங்கள். இப்ப தான் அது எனது செவிக்கு எட்டியிருக்கிறது. நெஞ்சு திக் திக் என அடிக்க வாயை பொத்தி கைகட்டி அம்மாவின் முன் ஆஜரானேன்.

''என்னம்மா சத்தம் போடுறியள்....." சுதாகரித்துக்கொள்ளும் எனது முயற்சி.....

' என்னடி நடக்குது வீட்டிலை ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதம்மா... அப்பா சுவிஸிலை இருக்கிற தங்கச்சியை பற்றி புழுகிக்கொண்டிருக்கிறார்...." அம்மாவின்ரை முகம் சிதம்பர சக்கரத்தை கண்ட பேய் போலை விகாரமடைஞ்சுது... 'என்ன விளையாடிறியா... நான் கேட்கிறது... எனக்கு தெரியாமல் இந்த வீட்டிலை என்ன நடக்குது....எண்டு'

' என்னம்மா கேட்கிறியள் ? நான் ஒரு அப்பாவி ; எதுவும் அறியாதவள்' எண்டு அபிநயம் செய்தேன்.

அம்மாவுக்கு அதற்கு மேல் பொறுமை இல்லை...

'கொக்காள் என்னவாம்... ?'

'அதம்மா... அதம்மா... '

'சொல்லடி நாயே... '

அம்மா பொறுமையாய் கேட்கும் போது நான் இழுத்தடித்தால் இனி பேய், கழுதை கூட வீட்டு முத்தத்துக்கு வந்து விடும்!

' நான் சொல்லுறனம்மா... ஒரு அண்ணை அக்காவை விரும்புறார்....'

'அக்காள் விரும்பாமலோ...?'

' சொல்ல விடுங்கோவனம்மா... அக்காவுக்கும் விருப்பம்தான்... அந்த அண்ணாவை அவா ஒரு நாளும் தனிய சந்திக்கேல்லை... நானும் கூடத்தான் இருந்திருக்கிறன். அக்கா யோசிக்கிறாவேயல்லாமல் முடிவெதுவும் எடுக்கேல்லை. அம்மாவின்ரை விருப்பத்தை பெறாமல் அக்கா எந்த முடிவும் எடுக்கமாட்டா...'

இப்பதான் அம்மாவின் முகத்தில் கொஞ்சம் துணிவு தெரிஞ்சது !

' என்னவோ பிள்ளை... அப்பாவின்ரை விருப்பத்திற்கு மாறாய் எந்த விசயமும் எங்கடை வீட்டிலை நடக்காது...கொக்காவட்டை சொல்லு : அவாவின்ரை பேரையும் கெடுத்து எங்கடை குடும்ப பேரையும் கெடுக்க வேண்டாம் எண்டு...'

அக்காவுக்கு இது வரை தெரிஞ்சிருக்கும்... எனக்கு அரிச்சனை நடக்குதெண்டு... நேரை அவளிடம் போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காள் முழுசிக்கொண்டிருந்தாள்...

'' என்னடி அம்மா சொல்லுறா...?''

'' அவா என்ன அப்பாவை காதலிச்சு செய்தவாவே உன்ரை விசயத்திலை எடுத்த உடனை ஓம் எண்டு சொல்ல... அப்பாவின்ரை குணம் இதுவரை காலத்திலை அவாவிலையும் தொத்தி இருக்காதே...?''

''பெடியன் ஆர்? சாதி மதம் என்ன ? அதையெல்லாம் அவாவுக்கு நீ தெளிவுபடுத்தினால் தான் அவா ஒண்டிலை இறங்கி வருவா இல்லாட்டி இன்னும் ஏறுவா....''

' ஓமடி ... நான் அதையெல்லாம் கேட்காமல் அவரோடை பழகிப்போட்டன்... குணம்தான் எவரையும் கவருவது... இப்ப அவரைப் போய் நாகரீகம் அற்ற முறையிலை அப்பா மற்றவையை கேட்கிறமாதிரி நீங்கள் என்ன ஆக்கள் எண்டு கேட்க முடியுமே?'

' அது சரிதான் அக்கா... திருக்கோணமலையிலை பெரிசாய் ஒருத்தரும் சாதியை தூக்கிப் பிடிக்கிறேல்லை ... கலப்பு திருமணமும் பரவலாய் நடக்கிறதுதான் . அப்பா மாதிரி ஆக்கள்தான் இதையொரு பிரச்சனையாய் இன்னும் தூக்கிப் பிடிக்கினம்.'

தம்பியின்ரை வேலையாலை இண்டைக்கு அக்கா அவரை சந்திக்கவும் போகேல்லை.

ஆனால் அந்நாள் இரண்டு மூண்டு தரம் எங்கடை வீட்டுப் படலையடியிலை போறதை நான் அவதானிச்சுப் போட்டு அக்காவிடம் சொன்னன்.

அக்கா சொன்னா...! சரி நீ ஏதாவது சாட்டைச்சொல்லி வெளிக்கிடபார்... நான் தொற்ற முயற்சிக்கிறன்...'

அப்படியே நடந்தது. அக்கா அவரை ஒரு மறைவில் சந்தித்தா. நான் கடைகள் பார்க்க என்று போய்விட்டன்.

அக்கா விரைவாகவே என்னைத்தேடி வந்து விட்டா. முகம் தான் சரியில்லை...

'பார் தங்கச்சி உவன் தம்பி செய்த வேலையை.... அவரை எங்கையோ சந்திச்சிருக்கிறான். அவருடைய மனது புண்பட பேசி இருக்கிறான்.. பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் மாதிரி , ‘ உங்களுக்கெல்லாம் உயர்சாதியிலை பெண் கேட்குதோ…?’ எண்டு குத்தி கதைத்திருக்கிறான்!’

அக்காவின் கண்களால் நீர் கொட்டியது…

‘ நீ கவலைப்படாமல் இரு அக்கா… நான் அவனை பேசித் திருத்திறன்…’

தம்பி இப்ப நேரத்துக்கு வீட்டை வாறதில்லை… ஊர் சுத்துகிற குணம் வந்திட்டுது. மற்றது தான் மற்றவையளின்ரை தோளை விஞ்சிவிட்டன் எண்டு ஒரு நினைப்பு…

பொழுது பட்ட பிறகுதான் தம்பி வந்தான். சைக்கிளை உள் மதிலோடை சாய்த்துவிட்டு கிணற்றடிப்பக்கம் போனான். நானும் பின் தொடர்ந்தேன்.

‘என்ரா தம்பி அக்காவை வருத்திறாய்… அவா உன்மேலை எவ்வளவு அன்பு வைச்சிருக்கின்றா தெரியுமே? …’

‘அது எனக்கு தெரியுமக்கா … ஆனால் அக்காவின்ரை வேலையாலை வீட்டிலை பெரிய நெருப்பு எழும்பும். அப்பா எரிமலை ஆகிறதை நீ பார்க்கப் போறியா? அல்லாட்டி அக்காவை திருத்த போறியா ?’

தம்பியோடை கதைச்சதிலை எனக்கு ஒண்டு மட்டும் விளங்கியது. அக்காவின்ரை தெரிவை அப்பா ஏற்றுக்கொள்ளமாட்டார்!

வார இறுதி அக்காவின் கண்ணீருடன் விரைந்து சென்றுவிட்டது.

வார முதல் நாள் பள்ளிக்கூடம்.

பாடசாலையால் வந்ததும் அக்கா அம்மாவை குசினியில் வைத்து சந்தித்து உண்மை எல்லாத்தையும் போட்டுடைத்தா…

அம்மா சொன்னா… ‘ பொம்பிளை பிள்ளையெண்டால் அடக்க ஒடுக்கமாய் இருந்தா பெத்தவை கவனிப்பினை … தம்பிக்கு விளங்கிறது உனக்கு விளங்கேல்லை எண்டுறதுதான் புதினமாயிருக்கு!’

அப்பாவுக்கு ‘ பிரஸர்’ இருக்கிறதாலை மாதாந்தம் ‘கிளினிக்’ போவார். இண்டைக்கு அவருடைய கிளினிக் நாளாகையால் கந்தோருக்கு லீவு போட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்கு போயிருந்தார். நாங்கள் பாடசாலையால் திரும்பி வந்தபோது அவர் சிறிது களையுடன் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தார். அவரது கையில் சுவிஸ் மாமியின் கடிதம் ஒன்று இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியினுடைய கடிதம் வந்தால் அவர் அன்றைய தினம் மகிழ்ச்சியோடு இருப்பார். அந்த கடிதத்தை ஒரு சிறுகதையை வாசிப்பது போல ஆற அமர்ந்திருந்து திரும்ப திரும்ப படிப்பார். அவருடைய தங்கையை , வெளிநாடு புறப்பட எல்லா ஆயத்தங்களையும் முடித்த நிலையில் இருந்த சொந்த மச்சான் விவாகத்துக்காக கேட்ட போது...

'நீர் வெளிநாடு போகிறீர் ... அங்கை போன பின்னர் எல்லாற்றை மன நிலையும் மாறுகிறது. வழக்கம்... நீர் முதல்லை போய் ஒரு வருசம் இதே மனநிலையில் தாக்கு பிடித்தால் பிறகு யோசிப்பம். அதுவரையிலை தங்கச்சி கலியாணத்துக்கு அவசியமும் இல்லை 'எண்டு கூறினாராம்.

மச்சான்காரன்... ' அப்ப உங்கடை தங்கச்சியும் நானும் கடித தொடர்பு வைக்கலாமோ?'

எண்டு கேட்டதற்கும் மறுத்துவிட்டாராம்.

மச்சான் சுவிஸ் போய் ஒரு வருசமாய் காத்திருந்திருந்திருக்கிறார். அந்த காலத்திலை இடையிடையே மாமிக்கு கடிதம் எழுதி தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் மாமி அண்ணன்ரை நிபந்தனை பிரகாரம் ஒரு கடிதம் கூட எழுதினதில்லையாம்... பிறகு மாமா முறைப்படி வந்து கலியாணம் செய்து மாமியை கூட்டிக்கொண்டு போனாராம்.

இண்டைக்கும் நல்ல நிலையிலை உள்ள அவர்களுடைய மகளும் மகனும் மாமா மாமிக்கு நல்ல உறுதுணையாய் இருக்கினம். இந்த கதையை இப்போ ஆயிரத்து ஓராவது தடவையாக அப்பா எனக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்...

அக்கா ஏற்கனவே ' சீருடையை '' மாற்றி வந்து விட்டாள். நானும் சீருடையை மாற்றி மேல் கழுவி இருவருமாக அம்மாவிடம் போனோம். அம்மா அன்போடு உணவு பரிமாறினா.

அக்காவிற்கு சில புத்திமதிகளை கூறினா...தம்பியின் நிலைப்பாட்டை பாராட்டி கதைத்தா... அம்மாவுக்கு அவன் பெரிய ஆளாக போய்விட்டான். ஆனால் அவன் சிறிய ஆளாக இருந்துகொண்டு பெரியவர்களின் விடயங்களில் தலையிடுவதும் அக்காவின் விருப்பத்திற்குரியவரை அவமதிப்பதும் அம்மாவுக்கு தெரியாது.

அக்காவுக்கு அவன் மேல் கோபம் ஏறிக்கொண்டிருந்தது. அமைதி காத்தாள். மாலையில் தனியார் வகுப்பிற்கு இருவரும் போனோம். ஏதிர்பாராத விதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அண்ணனை அக்கா சந்தித்தாள். மறுநாள் ஒரு விடுமுறை வருவதால் அவர் பேராதனைக்கு போகவில்லை.

அக்காவுக்கு வீட்டில் நெருக்கடி அதிகரித்த நிலையில் அவள் அவரிடம் பிரச்சனையை உளறிவிட்டாள்... அவருக்கு கவலையாகிப்போய்விட்டது. அவர் நல்ல மனிதர் ... அக்காவுக்கு இப்படி பிரச்சனை வரும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும் சமூக விதிமுறைகளை உடைக்கும் நோக்குடன் தான் அக்காவுடன் பழகவில்லை என்றும் கூறி கண்ணீர் வடித்தார். அக்காவாலும் பொறுக்க முடியவில்லை.

அந்த நேரம் பார்த்து தம்பி வேறு நண்பர்களுடன் சைக்கிளில் எங்களை தாண்டிச்சென்றான்.

நாங்கள் நேரத்துக்கு வீட்டுக்கு வந்து விட்டோம்.

அப்போதான் சினத்துடன் வந்த தம்பி வாசலிலேயே தனது சைக்கிளை தொப்பென போட்டுவிட்டு அப்பா இருப்பதையும் பொருட்படுத்தாமல் ... 'ரோட்டிலை' காதல் 'சீன்' நடத்துகினமாம்' எண்டு அக்காவை கிண்டல் செய்து கொண்டு போனான்...

அக்காவிடம் அவன் சின்ன வயதிலிருந்து பூசை வாங்கிப்பழகினவன்தான்... இண்டைக்கு வளர்ந்திட்டான்.

அதே நேரம் இண்டைக்கு இருந்த மனநிலையிலை அவா எதையும் கணக்கு போட்டு பார்க்க வேண்டிய தேவை அவாவுக்கு இருக்கவில்லை. அக்கா அவருடன் கதைத்துக்கொண்டிருந்த போது அவன் அவர்களை முறைத்துப் பார்த்துக்கொண்டு போனது அவளுக்கு பெரும் நெருடலாக இருந்தது.

திடீரெண்டு வீட்டின் கோடிப்பக்கம் தம்பி குரல் வைத்து சத்தம் போடுவது கேட்டது. அக்காவிடம் இண்டைக்கும் அகப்பட்ட நிலையில் அவா மொங்கு மொங்கு எண்டு மொங்கிப்போட்டுத்தான் விடுவா...!

தம்பி இப்போ சின்ன பையனாக பழைய பாணியில் குளறிக்கொண்டு அப்பாவிடம் ஓடிவந்து அழுது முறைப்பட்டான்.

'அப்பா... அக்காள் சாதி குறைஞ்ச பெடியன் ஒருவனை 'லவ்' பண்ணுறா... புத்தி சொன்னால் அடிக்க வாறா...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அக்கா இருவருமே முன்பக்கம் வந்துவிட்டார்கள். ஏறத்தாள வழக்கு விசாரணைக்கு வந்த மாதிரித்தான்...

எல்லோருமே திகைப்படைந்த நிலையில் அமைதி காத்தனர். அதற்கு பிறகு அப்பாவை தவிர எவருக்குமே கதைக்க இடமில்லை.

சிறிது நேர மௌனத்திற்கு பிறகு அப்பா சொன்னார்.

'மகள் அந்த பெடியை செய்யிறதிலை எந்த தப்பும் இல்லை...! '

எல்லோரும் அதிர்ந்துவிட்டோம்.

சுவிஸ் மாமியின் கடிதத்தை அப்பா என்னிடம் விரித்து கொடுத்தார்...

' அண்ணா... உலகம் இப்போ சுருங்கி விட்டது. ஆனால் நாகரீகம் வளர்ந்து விட்டது. எனது பிள்ளைகள் தமது வாழ்கையை அமைக்கவும் தீர்மானம் எடுக்கவும் தகுதியானவர்களாகிவிட்டார்கள். எனது மகள் பிரஞ்சுக்காரன் ஒருத்தனை காதலித்துக்கொண்டிருந்தாள். நேற்று திடீரென விவாகப்பதிவும் செய்து கொண்டார்கள். இனம், மதம், மொழி எல்லாம் மாறி அவர்களால் ஒருவனை காதல் செய்ய முடிகிறது. சாதி என்று இல்லாவிட்டாலும் சமூக ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் போகாது...ஆனாலும் அவள் விரும்புகிறாள்!

இந்த நிலையிலை எங்கடை பிறந்த மண்ணிலை எங்கடை இனம் ,மதம், மொழியிலை ஒன்றாக இருக்கிற இரத்தங்களை சாதி எண்ட பெயரிலை ஒதுக்கிறது நாங்கள் செய்கிற பெரிய துரோகம் தான் அண்ணா...!'

ஜீவநதி - மார்ச். 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# சுடுபவனுமாய் சூடுபடுபவனுமாய்.

மகாலிங்க சிவத்தாருடைய முறுக்குமீசைதான் அவரது அடையாள அட்டை.... அவர் ஒரு தமிழர் என்பதற்கான அடையாள சின்னம் என்பதற்காக மட்டுமன்றி அவருடன் பழகிய எவரும் எத்தனை காலம் கழித்தும் கூட 'இவர் அவர்தானே' என்ற கேள்விக்கு இடமின்றி, அட எங்கட மகாலிங்க சிவம் என்று நினைக்கும்படி அவரை அடையாளப்படுத்துவது அந்த மீசையேதான்.

தெகிவளை 'போலீஸ்' நிலையம் முன்பாக அவர் அந்த அறுபது வயதிலும் கூட கம்பீரமாக நிமிர்ந்து நின்றாராயினும் அவரது மனம் மட்டும் சஞ்சலத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தது.

அடுத்தடுத்த புகையிரத நிலையங்களுக்கிடையே முன்னைய தினம் நேர்ந்து விட்ட 'ரயில்' குண்டு வெடிப்பில் மீண்டும் பல பேர் மடிந்தும் காயம்பட்டும் விட்டனர். மகாலிங்க சிவம் நீண்ட கால அரச பணியில் ஈடுபட்டிருந்ததுடன் சகோதர சமூகத்துடன் மிகவும் அன்னியோன்யமாக பழகிய பண்பாளரும் ஆவார். எதைப்பற்றியுமே எண்ணாமல் அவர் உடனேயே தளத்திற்கு ஓடோடி சென்று விட்டார்.

மேலும்.... அல்லோலகல்லோலம்....!

நூற்றுகணக்கான மக்களுடன் இணைந்து தாமும் மீட்பு பணியில் ஈடுபட்டு விட்டார் சிவத்தார். வெளிப்பார்வைக்கு ஒரு இனம் பழிவாங்கப்பட்டுவிட்டதென எவரும் எழுந்தமானமாக எண்ணினாலும் காயப்பட்டவர்கள் எழுப்பும் ஓலங்களிலிருந்து அங்கு மூன்று சமூகத்தினருக்கும் பாதிப்புண்டானமையை அனுபவ ரீதியாக உணரகூடியதாக இருந்தது. ' மஹே புது தெவியனே....! என்று ஒரு பகுதியினரும் 'ஐயோ என்னை காக்கும் முருகா...' என்று சிலரும் 'அல்லாவே என்னை காப்பாற்று' என்று ஏனையோரும் கதறி அழுதனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதானோர்- இளம்வயதினர், ஆண்கள் - பெண்கள், சிறுவர்- சிறுமியர் என்று காயப்பட்டவர்களில் அனைத்து தரப்பினரும் அடங்கி இருந்தனர்.

காயம் பட்டவர்களை மீட்கும் பணியில் பொது மக்களுடன் இராணுவத்தினரும் பொலீசாரும் கடற்படையினரும் இணைந்து கொண்டு வேகமாக செயற்பட்டு கொண்டிருந்த அதே சமயம் காயம் பட்டவர்களின் உறவினரதும் பெற்றோர் சகோதரங்களை தவறவிட்ட சிறுவர் சிறுமியரதும் அவல ஓலம் பெரும் பதட்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது.

எங்கும் இரத்த வெள்ளம்! ஒரு கட்டத்தில் யார் காயம் பட்டவர்? யார் மீட்பு பணியில் ஈடுபட்டவர் என்று உய்தறிய முடியாத அளவிற்கு இரு தரப்பினரதும் ஆடைகள் இரத்தத்தில் தோய்ந்துவிட்டிருந்தன.

சிவத்தார் மோதுண்டு சரிந்திருந்த புகையிரத பெட்டி ஒன்றினுள் ஒருவாறு நுளைந்து சென்று பார்த்த போது அங்கு பல உடல்கள் வெந்து கருகி சிதைந்திருந்தன. யார் இறந்துள்ளார்கள்... யார் அறிவு மயங்கி உள்ளார்கள் என்பதை கூட அவரால் கணிக்க முடியவில்லை. அவரால் அப்போது செய்ய கூடியதாக இருந்தது, காயத்துக்குள்ளாகி தவண்டு வந்த சிறுமி ஒருத்தியை தோளில் போட்டு வெளியே எடுத்து வரக்கூடியதாக இருந்ததே. குழந்தை வீரிட்டு அழுதது.... வீரிட்டு அழுவதற்கு மொழி என்ன வேண்டிகிடக்கின்றது. உடை மட்டும் சிறுமி அவள் எண்பதை உணர்த்தியது. குழந்தையை வைத்தியசாலை சிகிச்சையில் ஈடுபட்டிருந்த வாகனம் ஒன்றில் ஒப்படைத்துவிட்டு மீண்டும் மீட்புபணிக்காக தன்னை அர்ப்பணிக்க ஓடிவந்த சிவத்தாரை சுட்டிகாட்டி சாரம் அணிந்த ஒருவன் சத்தமிட்டான்.

'ஊ தெமழு.... ஊவ மரபங்...' (உவன் தமிழன், உவனை கொல்லுங்கள்) சிவத்தார் வெலவெலத்து போனார்.

அதிஷ்டவசமாக ஒருவரின் கவனமும் அவர் பக்கம் திரும்பவில்லை. சிவத்தார் தனது சேவை மனப்பாங்கை தற்காலிகமாக ஒத்திவைத்தவர்.... ஒத்திவைத்தவர்தான்....

மாயமாக மறைந்து விட்டார்!

அன்றைய இரவு பொழுது சுமூகமாகத்தான் கழிந்தது.... ஆனால் விடிவதற்கு சில மணிநேரம் இருக்கையில் அவரது வீட்டு கதவு பலமாக தட்டப்பட்டது. அவரது மனைவியும் மகனும் நடுநடுங்கிப்போய் சுவர் மூலையுடன் ஒட்டிக்கொண்டிருந்தார்கள். சிவத்தார் கதவை திறப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரே மூவரது அடையாள அட்டைகள், குடும்ப பதிவு அட்டை மற்றும்' பொலிஸ்' பதிவுகள் அனைத்தையும் கையில் எடுத்திருந்தார்.

அவர் கதவு தாழ்பாளை திறப்பதற்கும் பாதுகாப்பு பிரிவினர் கதவை தள்ளிக்கொண்டு உள்ளே வருவதற்குமிடையே எந்த ஒரு நேர இடைவெளியும் இருக்கவில்லை. சிவத்தார் தான் பணிபுரிந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் அனைத்தையும் பட்டியலிட்டு ஒப்படைத்தார். எந்தெந்த சிங்கள பிரதேசங்களில் தான் சேவையாற்றியிருந்தார் என்பதையும் தன்னால் மட்டுமன்றி தனது மனைவியாலும் சிங்கள மொழியை சரளமாக கதைக்க முடியுமென்றும் பலவாறும் தனது ஒளிவுமறைவற்ற மனப்பாங்கை எடுத்துரைத்தார்.

ஆனால் அவர்கள் என்ன தீர்மானத்துடன் அவர் வீட்டினுள் நுழைந்தார்களோ அதே தீர்மானத்துடன்தான் இப்போதும் இருந்தார்கள். நாங்கள் உங்கள் மகனை விசாரித்து விட்டு அனுப்பிவிடுவோம் என்று கூறி பிடிவாதமாக அவனை அழைத்து சென்று விட்டார்கள்.

அவரது மனைவி தனக்கு தெரிந்த சிங்கள மொழியை அவர்களுடன் பேசி தமக்கும் சகோதர இனத்துக்கும் மிகவும் அன்னோன்ய உறவு இருந்தமையை வெளிப்படுத்தியும் கூட பலன் எதுவும் கிட்டவில்லை.

மகாலிங்க சிவத்தார் காலை விடிவதற்கு முன்னரே பொலிஸ் நிலையம் முன்பாக வந்தவர் அப்போதும் கால்கடுக்க நின்று கொண்டிருந்தார். கைது செய்யப்பட்ட வேறு பலரின் பெற்றோரும், உறவினரும் அவருடன் வந்து இணைந்து கொண்டிருந்தார்கள்.

கொழும்பில் நிரந்தரமாக வசிக்கும் ஒருவராயின் அடையாள அட்டை, குடும்ப அட்டை, பொலிஸ் பதிவு மற்றும் செய்யும் தொழில் பற்றிய அனைத்து ஆவணங்களும் தெளிவாக இருத்தல் வேண்டும். தற்காலிகமாக வருகை தந்தவராயின் மேலதிகமாக வருகைக்கான காரணம் தங்குமிடம், எங்கிருந்து வந்தார், திரும்ப புறப்பட உத்தேசித்துள்ள திகதி என்பன போன்ற விபரங்கள் அவசியமாகும்.

செல்வாக்கு இருந்தால் எதுவும் நடக்கும். அது இல்லாவிட்டால் ஒளிவு மறைவற்ற தன்மை இருந்தாலும் சந்தேகத்தின் பேரில் மேல்நடவடிக்கை தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தாரின் மகனுக்கு 30 வயது. இன்னமும் தொழில் இல்லை. அவனுக்கு விவாகம் செய்து வைத்து விட்டால் இப்படியான பிரச்சனைகளின் போது பாதுகாப்பாகவும் இருக்கும். இவை பற்றி சிவத்தாரின் மனைவி சுந்தரேஸ்வரி 100 தடவைகள் அவருற்கு எடுத்து விளம்பி விட்டாள். பலன் மட்டும் இல்லை. மகனுடைய வயதை ஒத்த பல இளைஞர்கள் சீருடை அணிந்து பொலிஸ் உத்தியோகத்தர்களாக பதவி ஏற்று கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு வகையில் அவர்களுடைய உத்தியோகம் அவர்களுக்கு பாதுகாப்பு. மறுபக்கம் அவர்களுடைய உத்தியோகமே அவர்களுக்கு எமன்.

அதிகாலை முதலே சிவத்தாரை அவதானித்தபடி இருந்த ஒரு பொலிஸ் 'சார்ஜண்ட்' அவர்மேல் அனுதாபப்பட்டோ என்னவோ அவரை அணுகி அவரது தேவை பற்றி வினவினான். பின்னர் அவரை அழைத்து சென்று நிலைய வராந்தாவில் போடப்பட்டிருந்த ஒரு வாங்கில் அமர வைத்தான். சிறிது நேரத்திலேயே அவருக்கு சிற்றுண்டியுடன் தேநீர் அனுப்பிவைக்கப்பட்டது.

'பொலிஸ்' நிலையத்தில் அதுவும் ஒரு தமிழருக்கு இப்படி ஒரு உபச்சாரம்...! காலம் இப்பொழுது அப்படி கெட்டு போய் கிடக்கின்றது!

40 வருடங்களுக்கு முன்னர் சிவத்தார் அரச திணைக்களம் ஒன்றில் முதல் நியமனம் பெற்று சிங்கள பிரதேசமான பொலனறுவைக்கு கடமையை பொறுப்பேற்க சென்றிருந்தார். அப்போது அனைத்து இனத்தவர்களும் மிகவும் அன்னியோன்யமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். சிவத்தாருக்கு தமிழ் பிரதேசம் தவிர ஏனைய பிரதேசங்கள் தெரியாது. சிங்கள மொழியை காதால் கேட்டும் அறிந்திரார். பயப்பிராந்தியுடன் அங்கு அடி எடுத்து வைத்த அவரிற்கு அமோக வரவேற்பு கிடைத்தது. அலுவலகத்திற்கு அண்மையில் உணவகம் எதுவும் இல்லாது இருந்ததால் சிங்கள நண்பர்கள் அவரது விடுதிக்கே உணவு கிடைக்கும் வண்ணம் ஏற்பாடு செய்திருந்தனர்.

சென்ற புதிதில் விடுதியில் அடைபட்டு கிடந்த அவர் நாளாக நாளாக வெளி உலகத்தை தெரிந்து கொள்ள புறப்பட்டார். நண்பர்களிடம் கேட்டு தெரிந்து கொண்ட சில சிங்கள சொற்கள் அவரிற்கு பேருதவியாய் இருந்தன.

தமிழ் பிரதேசங்களில் போன்றல்லாமல் இளம் யுவதிகளும் இளைஞர்களும் பொது இடங்களிலும் காரியாலயங்களிலும் வைபவங்களிலும் அடிக்கும் கூத்துக்கள் அவருக்கு ஆச்சரியம் அளித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் வளர்ப்பில் அவர் இருந்த போது யாராவது இளம் பெண்களுடன் அவர் கதைத்தால், அவள் கெட்டவள் அவளுடன் உனக்கென்ன கதை என அதட்டி வைப்பாள். அதனால் பெண்களுடன் கதைப்பதென்றாலே அவருக்கு நெஞ்சு திக்கிடும்.

இப்போதோ பல சிங்கள இனப்பெண்கள் அவருடன் தாமாகவே வந்து கிண்டல்கள் பல செய்து கதைப்பார்கள். அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் தமிழ் பிரதேசங்களில் தடை செய்யப்பட்டவையாகவே இருந்தன. அவர்களுடன் அவர் கதை பேசி சிரிப்பதையும் அவர்களது அழகை இரசிப்பதையும் அவரது அம்மா போன்ற எவராவது கண்டிக்கவில்லை.

தமிழ் பெண்கள் எல்லாம் கெட்டவர்கள் ஆகவும் சிங்கள பெண்கள் எல்லாம் நல்லவர்களாகவும் இருப்பதுதான் அதற்கான காரணமோ எனவும் அவர் மனம் ஐயுற்றது. அவரது மச்சாளுடன் அவர் வழமையில் கதைப்பதில்லை. எதிர் பாராத விதமாக அவர் ஒருநாள் அவளுடன் 'பட்மின்ரன்' விளையாடியதைக் கண்ட அம்மா அதனை கண்டித்தார். மச்சாளும் கெட்டவளாக இருந்ததுதான் காரணம் என்று அவர் அப்போது முடிவு செய்திருந்தார்.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் அவர் பொழுதுபோக்கு நிமித்தம் நீர்ப்பாசன குளஅணைக்கட்டு ஒன்றில் நடந்து செல்வார். இப்போதெல்லாம் இளம் பெண்கள் பின்தொடர தொடங்கியிருந்தனர். நாளாவட்டத்தில் அவர்களது நெருக்கம் அதிகரித்து வந்தது. சிரித்து சிரித்து அவர்கள் பேசியவை அனைத்தையும் அவர் முற்றாக விளங்கிகொண்டார் என்று இல்லை. ஆனால் அவர்கள் இருவரும் சகோதரிகள் என்பதும் பாடசாலை மாணவிகள் என்பதும் அவர்களுடைய தந்தை அவர் பணிபுரியும் அலுவலகத்திலேயே காவலாளியாக பணி புரிகின்றார் என்பதும் விளங்கியதும் அவருக்கு மற்றொரு உண்மையும் தானாக விளங்கியது.

சிவத்தாருக்கு உணவு அனுப்பிவைப்பது அந்த யுவதிகளின் தாயாரே. இந்த நிகழ்வின் பின்னர் விடுமுறை தினங்களில் மாலை பொழுதுகளில் சிவத்தாருடன் அந்த யுவதிகளும் அணைக்கட்டில் நடப்பது கட்டாயம் என்பதுபோல் ஆகிவிட்டது.

தமிழ் பெண்களில் அழகானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் விகிதாசாரத்தில் கணக்கிட்டால் சிங்கள பெண்கள் தான் அதிக அளவில் அழகாக இருக்கிறார்கள்! அந்த சகோதரிகளின் அழகு பிரமிக்க வைப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அவர்கள் தமக்கு பொருந்தும் வகையிலும், மற்றவர்களை கவரும் வண்ணமும் ஆடையணிய தெரிந்திருந்தார்கள். அவர்களது முகத்தில் எப்போதும் மகிழ்ச்சியே குடி கொண்டிருந்தது. அவர்களது கஷ்டங்களை சொல்லும் போதும் கூட சிரித்து சிரித்து ஒரு பகிடி போலவே பேசினார்கள். அவர்களுடைய சுபாவத்தால் மிக விரைவில் அவர்கள் சிவத்தாரை கவர்ந்து விட்டார்கள்.

விடுமுறை நாட்களின் மாலை நேரங்களில் அவர்கள் சிவத்தாரை சந்திப்பதில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது. அந்த யுவதிகளில் மூத்தவள் வருகையை நிறுத்தி கொண்டாள். இருந்தும் இளையவள் தொடர்ந்தும் மாலையில் அவருக்கு துணை கொடுத்தாள். இது சம்பந்தமாக அவர் அவளிடம் வினவியபோது..... அக்காவிற்கு சுகமில்லை அதாலதான் என்னை எண்டாலும் போக சொன்னவர். கூறிவிட்டு ஒரு சிரிப்பு... சிவத்தாருக்கு நம்பிக்கை வரவில்லை.

'உண்மையாய் சுகமில்லையோ? இல்லாட்டி வேறேதும் காரணமோ?' அப்போ அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். அவள் அப்படி சிரிக்கும் போதெல்லாம் அவளுடைய அழகிலும் நிறைவிலும் அவரது நெஞ்சம் மகிழும்.

அந்த நேரங்களில் சில சமயம் அவரது அம்மாவின் முகம் குறுக்கிட்டு பயம் காட்டும்.... பின்னர் தெளிந்து விடுவார்.

'சுகமில்லையும் தான்'.... என்று அவள் இழுத்தாள்.

'ஏதோ சொல்ல நினைக்கிறீர்... மறையாமல் சொல்லும்...'

முதல் தடவையாக சிரிப்பை இடை நிறுத்தி முகத்தை கொஞ்சம் 'சீரியஸ்' ஆக்கி கொண்டாள்.

'அது.... நான்... நான்....'

அவளுடைய உடம்பு லேசாக நடுங்கியது. சில சமயம் அழுது விடுவாளோ என்று தோன்றியது. பின்னர் இலக்கிய நாயகிகள் போன்று முகம் நிலம் பார்க்க கால் பெருவிரலால் நிலத்தை கீறியபடி கூறினாள்.

'நான் உங்களை விரும்பிறது அவளுக்கு விளங்கி போச்சு.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தாருக்கு 'ஸ்விப்' விழுந்தமாதிரி இருந்தது. அந்த 'ஸ்விப் ரிக்கட்டை' யாரோ பிடுங்கி கொண்டு ஓடிவிட்டது போலவும் இருந்தது.

அம்மா அறிந்தால்... என்று ஒரு கணம் யோசித்தார்.

உனக்கு சிங்களத்தியை முடிக்கிதுக்கும் ஒரு நோக்கமோ? அவளை நான் எப்ப முதன்முறையாக காண்கின்றேனோ அப்பவே அவளுடைய கழுத்தை அரிவாள் முனையால் அரிந்து சிரசை கையில் எடுக்கிறனோ இல்லையோ பார்......

அவள் அப்படி செய்வாள் என்பதில் சிவத்தாருக்கு எள்ளளவு அவ நம்பிக்கையும் கிடையவே கிடையாது.

ஆனால் அவர் அந்த சிங்களத்தியின் காதலை உள்ளங்கையில் பொத்திவைத்து போற்றினார். தனது காதல் விவகாரம் ஊருக்கு போய் பெரிய விபரீதம் நடந்து விடுமோ என்ற ஐயம் அவருக்கு சில நாட்களில் நீடித்தது. அந் நாட்களில் தொழில் நிமித்தம் பிற பிரதேசங்களுக்கு வரும் தமிழ் இளைஞர்கள் அனைவருக்குமே சிங்களத்திகளின் வலை வீச்சு இருந்தது! அதனால் அவர்களிடையே ரகசியத்தை காக்க வேண்டியதொரு புரிந்துணர்வு இருந்தது.

மறக்க முடியாத அந்த காதல் வெளிப்படுத்துகையின் பின்னர் அவளுடனான அவரது நெருக்கம் வலுப்பெற்றது. மாலினி என்ற தனது பெயருடன் மகாலிங்கம் என்ற அவரது பெயரையும் சிங்களத்தில் எழுதி அவருக்கு காட்டினாள். சிங்கள எழுத்துக்கள் மல்லிகை மொட்டுக்கள் போல குண்டு குண்டாக உண்மையிலேயே மிகவும் அழகானவை!

ஒரு நாள் அவள் வினவினாள்...

'நீங்கள் என்னை மாலினி என்று அழைப்பது போல நான் உங்களை எப்படி அழைக்க வேண்டும்?..'

சிவத்தார் ஒரு கணம் யோசித்தார். அவரது அப்பா உயிர் வாழ்ந்த காலத்தில் தாய் அவரை எப்படி அழைத்தார் என்று மீட்டல் செய்ததில் இஞ்சாருமப்பா, இஞ்சாருங்கோ என்ற சொற்கள் நினைவுத்திரையில் விழுந்தன. அவையெல்லாம் அவருக்கு திருப்தி அளிப்பனவாக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பையே உயிரென கொண்டு வாழும் ஒரு தமிழ் பெண் தெய்வம் என்று போற்றும் ஒரு தமிழனை எந்த சொல்கொண்டு வாஞ்சையுடன் அழைப்பாரோ அந்த சொல்லை அவர் மாலினிக்கு உரித்தாக்கி விட்டார்.... மாலினி அந்த சொல்லை உச்சரிக்க தொடக்கத்தில் மிகவும் சிரமப்பட்டாளாயினும் அவளது மழலை கலந்த உச்சரிப்பில் சிவத்தார் மயங்கியே விட்டார்.

'அத்தான் அத்தான்....'

மாலினி ஒரு நாள் கூறினாள்.

'அத்தான்... உங்களோட வெளியே உலாவ வெக்கமாய் இருக்கு. மற்ற மற்றவை எங்களை வித்தியாசமான கண்ணோட்டத்திலை பார்க்கிற மாதிரி இருக்கு. போக இன்னும் எத்தனை நாட்களுக்கு நீங்கள் கட்டு சாப்பாடு சாப்பிடுவது. அம்மா சொன்னவா தான் எங்கட விடயமாய் அப்பாவிட்டயும் கதைச்சுபோட்டா. ஆனபடியால் நீங்கள் இனிமேல் என்னை எங்கள் வீட்டில் சந்திக்கிறதோட சாப்பாட்டையும் என்னுடைய கையாலேயே நான் போட்டுதர சாப்பிடலாம் தானே...'

மாலினி சொன்ன காரணங்களுக்காக மட்டுமன்றி அவள் மேல் அவர் கொண்ட வாஞ்சை காரணமாகவும் அந்த ஏற்பாட்டிற்கு அவர் இணங்கிவிட்டார்.

சிங்கள மொழி தேர்ச்சி அந் நாட்களில் அரச அலுவலர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டிருந்தது. உரிய தரத்தினை உரிய நேரத்தில் பூர்த்தி செய்யாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் இடை நிறுத்தப்பட்டது. பலர் சேவையில் இருந்து நீக்கவும்பட்டனர்.

மாலினியுடனான நட்பு காரணமாக அவர் சிங்கள மொழியின் பேச்சு எழுத்து நடைகளை ஆசான் ஒருவன் இன்றியே கற்று கொண்டார். இதன் காரணமாக சிங்கள மொழி தேர்ச்சி பரீட்சைகளில் இலகுவாக சித்தி எய்தினார்.

சிவத்தாருக்கு காலை உணவு, மதிய உணவு இரண்டையும் தனது கையாலேயே பரிமாற வேண்டும் என்பதற்காகவும் சிவத்தார் எந்நேரம் வந்தாலும் தன்னை சந்திக்க கூடிய விதமாகவும் மாலினி பாடசாலை செல்வதை நிறுத்தி கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தார் வரும் வேளைகளில் அவருடன் சுதந்திரமாக கதைப்பதற்கும், பழகுவதற்கும் வசதியாக அவர்களது வீட்டில் தனிஅறை ஒன்று மாலினியின் தாயாரால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

சிவத்தார் அடிக்கடி அவர்களது வீட்டுக்கு போவதை மற்றவர்கள் அவதானிப்பதை தவிர்ப்பதற்காகவும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நன்கு ஓய்வெடுத்து கொள்வதற்காகவும் அவர் அங்கேயே தங்குவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

சிவத்தார் கட்டிலில் படுத்திருக்க மாலினி அவர் அருகில் அமர்ந்திருந்து இந்த உலகத்து புதினங்களையெல்லாம சிரித்து சிரித்து சொல்லும்பொழுது எப்படியானதொரு ஆனந்தத்தை அவர்களால் அனுபவிக்கமுடிகின்றது.

இந்த தமிழ் சனம் பெண்களுக்குரிய கட்டுப்பாடு கட்டுப்பாடு என்று சொல்லி இளமையிலேயே அனுபவிக்க வேண்டிய விடயங்களை எல்லாம் தடை போட்டு வச்சிருக்கிறதால வாழ்நாள் நாசமாய் போகுது.

அந் நாட்களில் குடும்ப கட்டுப்பாடு சார்ந்த விளம்பரங்களோ, விளிப்புணர்வூட்டும் செயற்திட்டங்களோ முற்றாக இருக்கவில்லை. இந் நிலையில் குடும்ப கட்டுப்பாட்டு சாதனங்களின் வினியோகமும் நடைபெறவில்லை.

சிவத்தாருக்கோ தாலி கட்டமுதல் செல்லக்கூடிய எல்லை... தாலி கட்டிய பின் தாண்டக்கூடிய எல்லை பற்றிய அறிவு அறவே இருக்கவில்லை.

தவிர மாலினியின் அரவணைப்பில் பல மாதங்களாக, அவரை வழிநடத்தும் அம்மாவின் முகத்தை அவர் மறந்திருந்தார்.

ஒரு நாள் காலை மாலினி ஓங்காளித்தபோது தாய் அதிர்ந்து விட்டார். வைத்தியசாலைக்கு சென்று பரீட்சித்ததில் அவள் மூன்றுமாதம் கர்ப்பம் தரித்திருக்கின்றாள் என்ற சந்தோசமான செய்தி கிடைத்தது.

ஆனால் சிவத்தாருக்கு அது சந்தோசமான செய்தியாக அமையவில்லை. மறந்திருந்த அம்மாவின் முகம் இப்போ அடிக்கடி பிரத்தியட்சமாகி பயமுறுத்தியது.

மாலினியின் பெற்றோர் தரப்பிலிருந்து இப்போ சிவத்தாருக்கு சில அழுத்தங்கள் எழுந்தன. குறைந்த பட்சம் விவாகபதிவாவது செய்ய வேண்டும் என்று அவருக்கு நிர்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தார் இப்போது தான் ஓடி விழித்தார். தமிழ் பெண்கள் ஏன் செட்டு காட்டுகின்றார்கள் என்ற இரகசியமும் பெற்றோர் அவர்கள் மேல் ஏன் கட்டுப்பாடுகளை விதிக்கின்றார்கள் என்ற நடைமுறை உண்மையும் இப்போது அவருக்கு உறைத்தது.

இளைஞனாக இருந்த நான் எப்படி ஒரு குடும்பஸ்தன் ஸ்தானத்திற்கு மாறி விட்டேன் என்று நினைக்கையில் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

மனைவி, பிள்ளை என்ற பொறுப்புக்களை நான் எப்படி சுமப்பேன்.... எனது தாயாரை நான் எந்த முகத்துடன் சென்று சந்திப்பேன் என்றெல்லாம் எண்ணி அவர் கலங்கி கொண்டிருக்கையில் அந்த குடும்பத்திற்கு பேரிடி ஒன்று விழுந்தது. மாலினியின் அக்கா யாரோ ஒரு இளைஞருடன் ஓடி விட்டாள். விசாரித்ததில் அவளுக்கும் முஸ்லிம் வாலிபனுக்குமிடையில் நீண்ட கால காதல் விவகாரம் ஒன்று இருந்தமை தெரிய வந்தது.

மாலினியின் பெற்றோரின் பரிதாப நிலை சொல்லும் தரமன்று. அவர்களுக்கு இருப்பதோ இரண்டு பெண் பிள்ளைகள். மூத்தவள் ஊர், இடம் தெரியாத தூரத்திற்கு முஸ்லிம் இளைஞனுடன் ஓடி விட்டதால் அவள் இனி மீளப்போவதில்லை. மாலினியையாவது ஒரு சிங்கள இளைஞனுக்கு கட்டி கொடுத்தால் தான் அவர்களுடைய சமூகத்தில் அவர்களால் தலை நிமிர்ந்து நடக்கமுடியும். எனவே அவர்கள் தமது முன்னைய முடிவை மாற்றிக்கொண்டு சிவத்தாரின் காலில் விழுந்து கதறினார்கள்.

' மாலினியை எங்களுக்கு திரும்ப தாருங்கள்'

சிவத்தாரோ அறவே மறுத்து விட்டார். தனது இரத்தத்தில் கருத்தரித்த தனது பிள்ளையை அனாதரவாக விட்டு செல்ல அவர் மனம் ஒப்பவில்லை.

மறுநாள்..... 1972 சித்திரை 4 ஆம் நாள் நாடே ஒரு பேரதிர்ச்சியை எதிர் கொண்டது. ' 'சேகுவேரா' புரட்சி வெடித்தது. நாட்டின் அனேகமான பொலிஸ் நிலையங்கள் மீது புரட்சி படையினர் ஒரே நேரத்தில் தாக்குதல்களை நடத்தினர். இரகசியம் சரியான முறையில் காக்கப்படா ததால் முயற்சி வெற்றியளிக்கவில்லை. சிங்கள இளைஞர்கள் பல்லாயிரகணக்கில் கொல்லப்பட்டார்கள். பொலனறுவை பஸ் நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றினை மறித்த ஆயுததாரிகள் அதில் தொற்றி கொண்டு பொலநறுவை பொலிஸ் நிலைய தாக்குதலுக்காக சென்றனர். பொலிஸ் நிலையத்தினருக்கு தெளிவாக தகவல் வழங்கப்பட்டது. பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலில் பஸ்ஸில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த அனைத்து பயணிகளும் போராளிகளுடன் இணைந்து மரணத்தை தழுவி கொண்டனர்.

இந்த அவலத்தை நேரில் பார்த்து கொண்டிருந்த பலரில் சிவத்தாரும் ஒருவர். அந் நிகழ்வை கண்டு பலர் மனநிலை பாதிக்கப்பட்டு தமது பொன்னான வாழ்வையே பறிகொடுத்தனர். சிவத்தாரின் நிலைமையும் மிக மோசமாக இருந்தது.

அவர் வீடு வந்து சேர்ந்த போது பெற்றோர் இருவரும் மாலினியை கடுமையாக உடல்ரீதியில் தாக்கி கொண்டிருந்தார்கள்.

'அத்தான்... எனது பெற்றோருடைய நிலமையில் வைத்து பார்த்தால் அவர்களுடைய தீர்மானத்தை மாற்ற முடியாது. அப்படி மாற்ற முயன்றால் அவர்கள் எந்த எல்லைக்கு சென்றாவது உங்களை எனக்கு இல்லாமல் செய்து விடுவார்கள். என்னில் உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால் தயவு செய்து என்னை விட்டு போய்விடுங்கள்.' அவளது விம்மலும் கதறலும் சிவத்தாரை உலுக்கியே விட்டது.

மறுபக்கம் மாலினியின் பெற்றோர் இருவரும் சிவத்தாரின் காலில் விழுந்து மீண்டும் மீண்டும் இறைஞ்சி கேட்டார்கள்.

'நீங்கள் ஊர்போய் உங்கள் அம்மா விரும்பும் பெண் ஒருத்தியை விவாகம் செய்து கொள்ளுங்கள். எங்கள் மகளை எங்களுக்கே கொடுத்து விடுங்கள். எங்கள் மகளின் வயிற்றில் கருத்தரித்திருக்கும் உங்கள் பிள்ளையை நாங்கள் கருக்கலைப்பு செய்வோம். இந்தப்பிரச்சனை இத்துடன் முடியட்டும்.'

சிவத்தார் அன்பு, பாசத்திற்கு பணிந்து நடப்பவர். தன்னுடைய தாயினதும் தனதும் அன்பையும் மாலினியுடையதும், அவரது பெற்றோருடையதுமான அன்பையும் ஒரு தரம் சிந்தித்து பார்த்தார்.

தனது பிரயாண செலவுக்கு வேண்டியதை தவிர மீதி பணத்தை அவர்களது கைகளில் கொடுத்தார். அவர்களுக்கு வார்த்தைகளினாலும் கண்ணீர் சொரிந்தும் நன்றிகளை கூறினார். மாலினிக்கு முத்தம் கொடுத்தார்.

"உன்னை அன்றி ஒரு பெண்ணை எனது மனம் என்றுமே ஏற்காது" என கண்ணீர் மல்க கூறினார்.

அந்த கடைசி வார்த்தையுடன் சிவத்தார் விடைபெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெஹிவளை 'பொலிஸ்' நிலைய வாங்கில் அரைத்தூக்கத்தில் நின்ற சிவத்தாரை சுந்தரேஸ்வரி தட்டி அருட்டிய போது அவர் திடுக்கிற்று எழுந்து மிரள மிரள முழித்தார்.

சுந்ரேஸ்வரியை பொறுத்தவரையில் சிவத்தார் ஏகபத்தினி விரதன். மனைவி மகன் என்ற வட்டத்திற்குள் அவரது வாழ்க்கை தெளிந்த ஓடைபோல் பிரகாசித்தது.

'என்னவாம் அப்பா? மகனை விசாரித்து போட்டாங்களா?' அவள் அப்படி வினவி கொண்டிருக்கும் போதே காலையில் சிவத்தாரை உட்காரவைத்து சிற்றுண்டி கொடுத்து உபசரித்த 'பொலிஸ் சார்ஜன்ட்' அங்கு பிரசன்னமானார்.

'விசாரணைகள் நடந்து கொண்டிருக்கு. மரணமடைந்தவர்களதும், காயமடைந்தவர்களதும் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதாலை கண்டிப்பு கூடுதலாக இருக்கு. உங்களுடைய மகனுடைய விசாரணையை கொஞ்சம் துரிதப்படுத்தலாம், அதற்கு மேலே உதவி செய்யிறது கஷ்டம்.'

'சார்ஜன்ட்' அப்படி கூறவும் சுந்தரேஸ்வரி அவரது கையை இறுகப்பற்றி கொண்டாள்..... ' நீங்கள் தான் எங்களுக்கு தெய்வம் போல நின்று உதவி செய்ய வேண்டும்...' அவளது கண்கள் நீரை உகுத்தன. 'சார்ஜன்ட்' ஆறுதல் கூறி விடைபெற்று சென்றார்.

மதியமாகியும் கூட ஒரு சிலரே விடுவிக்கப்பட்டனர். சில பெற்றோர் கைலஞ்சம் கொடுத்து தமது பிள்ளைகளை மீட்கவும் ஆயத்தமாக இருந்தனர்.

அவர்களுடன் இருந்து அனுபவப்பட்ட இளைஞன் ஒருவன் முணுமுணுத்தான். ' பொலிஸ்' நிலையத்துக்கு கொண்டுவந்தமை பற்றி சந்தோசப்படுங்க.... வழியில் சுட்டுப்போட்டு தூக்கி எறிந்து போட்டு போனால் எந்த 'கோட்டில்' யாரை கேட்கிறது.....?

அங்கிருந்த அனைவருக்குமே அதை கேட்க நெஞ்சு திக் என்றது.

வயோதிபர் ஒருவருக்கு மட்டும் கோபம் பற்றி கொண்டு வந்தது.... அவரும் பதிலுக்கு முணுமுணுத்தார். 'அவர்கள் சுடுகிறதுக்கு இருக்கினம், நாங்கள் சூடுவாங்கிறதுக்கு இருக்கிறம்.'

கதைகள் நீண்டு கொண்டே போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென சுந்தரேஸ்வரி சிவத்தாரை அழைத்தாள்....

'அங்க பாருங்க... மகனை விடப்போறாங்க போல.... சார்ஜன்ட் மகனுடன் கதைத்துகொண்டிருக்கிறார்'

சிவத்தாருக்கு பெரிய ஆச்சிரியம்... 'சார்ஜனும்' மகனும் அவர்களை நோக்கி வந்தார்கள். மகன் சிரித்தபடி வந்தது பெரிய ஆச்சரியம்.

'சார்ஜன்ட' கூறினார் 'காலையிலேயே எனக்கு ஐயாவை பார்க்க பரிதாபமாக போய்விட்டது. விசாரணை நடந்துகொண்டிருக்கேக்க நான் சில சிபார்சுகள் செய்து கொண்டிருந்தேன். அதாலதான் விடுவிக்க கூடியதாக இருந்தது....'

சுந்தரேஸ்வரிக்கு ஆனந்தம் அளவு கடந்த நிலை. மகனை அழைத்து முத்தம் கொடுத்தாள். அவன் அனுபவித்த கஸ்டங்கள் பற்றி துருவி துருவி விசாரித்தாள்....

சிவத்தார் நன்றி உணர்வுடன் சார்ஜண்ட்க்கு கைலாகு கொடுத்து பாராட்டினார்.

'தெய்வம் தான் உங்களை எங்களிடம் அனுப்பியிருக்கிறது... உங்களை எங்கள் மகனுக்கு உயிர்ப்பிச்சை தந்த அவதாரம் என்று நாங்கள் வாழ்நாள் முழுக்க போற்றுவோம்.

உங்களை நாங்கள் மறக்கவேமாட்டோம். நீங்கள் எங்களின் ஒரு குடும்ப அங்கத்தவர்!.

சிவத்தாருக்கு உண்மையிலேயே மெய் சிலிர்த்தது.

'உங்கட ஊர் என்ன மோன'?

'நான் பொலனறுவை'

'சிவத்தாருக்கு திக் என்று இருந்தது.

'உங்கட அப்பாவின்ர பெயர்?

'மகாலிங்க சிவம்.' சிவத்தார் அதற்குமேல் வினாக்கள் தொடுக்க முடியாதபடி அவரது வாய் அடைத்துவிட்டது. திரும்பி பார்த்தார்..... மனைவியும் மகனும் தூரத்தில் சென்று கொண்டிருந்தார்கள்!

தினக்குரல் - 25 ஜன. 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# சம்ஹாரம்.

தலைநகரின் அந்த பிரதான வீதிக்கு தூக்கம் என்பதே கிடையாது இரவு பகல் என்ற பேதமற்ற போக்குவரத்து...

பிரதான வீதியில் இருந்து கடற்கரைப்பக்கமாக பிரிந்து செல்லும் பல ஒழுங்கைகள், தெருக்களில் இருந்து சில வாகனங்கள் பிரதான வீதியுடன் சங்கமித்துக்கொண்டிருந்தன.

எங்கிருந்தோ அந்த பிரதான வீதியில் வந்து ஏறிய பெரியவர் ஒருவர் சாலை இருபக்கமும் தனது பார்வையை செலுத்தினார். அதிகாலை பொழுதாக இருந்தாலும் சாலை ஓர மின்விளக்குகள் உமிழும் பிரகாசம் அவ்விடத்தை பட்டப்பகலாக்கி கொண்டிருந்தன

ஒரு கணத்தில் மின்வெட்டாக பறந்து வந்த வெள்ளை நிற வான் பெரியவரை மோதிவிடப்போவதுபோன்று அவர் அருகாக வந்து சட்டென நின்றது.

அந்த பெரியவருக்கு அது ஒரு அதிர்ச்சி சம்பவமாக போய்விட்டது. முதியவரான அவரை நான்கு இளைஞர்கள் வழிமறித்து அந்த வானில் அலாக்காக தூக்கி எறிந்தபின் தாமும் வேகமாக அதில் தொற்றிக்கொண்டனர்.

வாகனம் வேகமாக இரைந்தபடி புறப்பட்டது. அந்த இளைஞர்களில் ஒருவன் வாகனம் செல்ல வேண்டிய திசை பற்றி சாரதிக்கு அறிவுறுத்திக்கொண்டிருந்தான். மற்றொருவன் நாலாபுறமும் தனது பார்வையை சிதறவிட்டிருந்தான்.

அந்த விநியோக 'வானின்' மத்தியில் முகம் குப்புற படுக்கவைக்கப்பட்டிருந்த முதியவரை தனது இருகால்களாலும் மிதித்தபடி இருந்தவன் வாய்திறந்து எதுவும் பேசவில்லை. அடுத்தவன் அவரது பதட்டத்தை தணிக்கும் முகமாக அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியபடி இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியவரோ தான் வணங்கும் தெய்வம் யாவற்றையும் இறைஞ்சியபடி இருந்தார். அவரது கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக வழிந்தபடி இருந்தது.

வாகனம் ஏற்றங்களில் ஏறிவிழும் போது அவரது தாடை அடிச்சட்டத்தில் அடியுண்டதனால் ஏற்பட்ட உரசல் காயத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது...

உடல் வேதனை ஒரு புறமும் உள்ளக் குமுறல் மறுபுறமுமாக அவர் தத்தளித்துகொண்டிருந்தார்...

'ஏன் இப்படி எனக்கு நேரவேண்டும்... நான் யாருக்கு என்ன துரோகம் செய்தேன்... எனது நீண்ட வாழ்கை அனுபவத்தில் பிறருக்கு நன்மை புரிந்ததைத் தவிர நான் யாருக்கும் எக் கெடுதலும் செய்தறியேனே... பலரும் என்னை இப்படி வதைப்பது என்ன முறையோ...?'

என்றெல்லாம் அவரது உள்ளம் எண்ணிக்கலங்கியது.

ஏறத்தாழ ஒன்றரை மணிநேர ஓட்டத்தின் பின்னர் வாகனம் தனியான இடமொன்றில் அமைந்திருந்த வீடொன்றின் முன் வந்து தரித்தது.

இளைஞர்கள் 'வான்' கதவினை அகலத்திறந்து பெரியவரை சாவகாசமாக இறங்க அனுமதித்தனர். முன்னர் அவர்களிடம் இருந்த பதற்றம் இப்போது அற்றுப்போயிருந்தது.

பெரியவர் வாகனத்தில் இருந்து இறங்கியதுமே அந்த இளைஞர்களை கைகூப்பி வணங்கினார். பின்னர்....

"நான் உங்கள் எவருக்கும் எந்தத் தவறும் செய்யவில்லை. உங்களை யார் என்றும் எனக்கு தெரியாது. என்னை தயவுசெய்து விட்டுவிடுங்கள்" என்று வேண்டினார்.

இளைஞர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. வயோதிபர் மீண்டும் இறைஞ்சினார்.

''என்னிடம் எந்த சம்பாத்தியமும் இல்லை. எனது உழைப்பே எனது ஜீவியத்தைக் கொண்டு செலுத்த போதுமானதல்ல. சேமிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. என்னால் உங்களுக்கு ஆகபோவது எதுவுமே இல்லை. என்னை துன்புறுத்தாமல் செல்லவிடுங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அப்படிக் கூறியபோதுதான் ஒரு இளைஞன் வாய்திறந்தான்.

‘ ஐயா... எங்கள் எவருக்குமே உங்களை யார் என்று தெரியாது. நீங்கள் எங்களில் ஒருவருக்காயினும் துரோகம் செய்தவரும் அல்ல. நீங்கள் எங்களுக்கு வேண்டப்பட்டவரும் அல்ல. தவிர நாங்கள் கூலிக்காக பணிபுரிபவர்களுமல்ல... ஆனால் ஒரு நோக்கத்திற்காக செயலாற்றும் குழு ஒன்றின் அங்கத்தவர்கள் நாங்கள்.

அப்படி அவன் விளக்கமளித்துக்கொண்டிருக்கும் போதே வீட்டின் முன்புற கதவை திறந்தபடி வாட்டசாட்டமான சிறுவன் ஒருவன் வெளியே வந்தான்.

‘இந்த முதியவரை நன்கு கவனி. அண்ணன் மாலையில் வருவார்...’ என்று கூறிவிட்டு அந்த இளைஞர்கள் அனைவரும் வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டனர்.

முதியவருக்கோ ஒரு கால் அடிகூட எடுத்துவைக்க இயலாத நிலை. சிறுவன் அவருக்கு தோள் கொடுத்து உள்ளே அழைத்துச்சென்றான். காயங்களை கழுவி மருந்திட்டான். தேநீர் தயாரித்து கொடுத்தான்...

சிறிது இளைப்பாறிய முதியவர் தன்னை உபசரித்து தேற்றிய சிறுவனைப் பார்த்து....

‘நீங்களெல்லாம் யார் ? ...’ என்று ஒட்டு மொத்தமாக ஒரு கேள்விக் கணையை தொடுத்தார்.

சிறுவன் உரத்து சிரித்தான்....

‘ஐயா... உங்கள் நிலையை கண்டு பரிதாபப்படுகிறேன். அதே சமயம் எனது நிலையை தெரிந்து கொண்டால் நீங்களெல்லாம் அதைவிட பன்மடங்கு என்மேல் கழிவிரக்கம் அடைவீர்கள்... உங்களை கடத்தி வந்தவர்களுக்கே தாம் செய்யும் காரியங்களுக்கு காரணம் புரிவதில்லை. நான் வெறுமனே ஒரு பணியாள்...! நான் யாருக்கு பணிபுரிகிறேன் என்பது கூட எனக்கு தெரியாது. பல வருடங்களுக்கு முன்னர் தேநீர் கடையில் பணிபுரிந்துகொண்டிருந்த என்னை ‘பொலிஸார்’ கைது செய்தனர். அதற்கு பின்னர் எனக்கு மீட்சியே இல்லாமல் போய்விட்டது. பல கைகளுக்கு நான் மாறிவிட்டேன்... நான் பணிபுரிவது இராணுவத்திற்காகவும் இருக்கலாம்... அல்லது பாதாளக் கோஷ்டியினருக்காக கூட இருக்கலாம். ஆனால் நான் நல்லதொரு சேவை செய்கின்றேன்... பலருக்கு சமைத்து போடுகின்றேன்..!’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி கூறிவிட்டு மீண்டும் உரத்துச் சிரித்தான். இப்போது அவனது சிரிப்பில் ஒரு விரக்தி தெரிந்தது...

பின்னர் பெரியவரின் கருத்துக்களை அறிய காவல் இராதவன் போலவும் அவசர பணிகளை மறந்து விட்டு நினைவு கூர்ந்தவன் அவசரப்படுவது போலவும் வேகமாக எழுந்துசென்றான்.

சிறிது நேரத்தில் முதியவருக்கான காலை ஆகாரத்தை தயார் செய்து எடுத்து வந்தான். அவனது சிறுவயதுக்கு அவர் ஒரு தந்தைக்கு சமனாக இருந்தார். எனவே ஆறுதல் வார்த்தைகள் பலகூறி அன்புடன் அவரை உபசரித்தான்.

தூரத்தில் அவ்வீட்டின் வளவினை ஒரு பெண் பணியாள் பெருக்கிகொண்டிருந்தாள்....

முதியவர் தான் அமர்ந்திருந்த வாங்கில் சரிந்தவர் சோர்ந்து மயங்கிவிட்டார்... பெரியவர் தூங்குவதாக எண்ணி சமையற்கார சிறுவன் மதியபோசனம் தயார் செய்யும் வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டான்.

பெண்பணியாள் தனது காலை ஆகாரத்திற்காக சமையல் கட்டுக்கு வந்திருந்தாள்...

"ஏன் சிவம் ... யார் இந்த ஐயா...? வினாவினாள்.

'அதுதான் பார்வதி எனக்கும் தெரியேல்லை... பெரிய கவலையாய் கிடக்கு..." சிவம் அப்படிக் கூறவும்...

'' ஒண்டு மட்டும் உண்மை சிவம்... எங்கடை நாய்கள் கெதியாய் அழிஞ்சு போவான்கள். அதை மட்டும நீ நம்பு... போன மாதம் ஒரு சிறுமியைக் கடத்திக் கொணர்ந்து சிறை வைச்சிருந்தவையெல்லே... அது பணம் கறக்கிறதுக்குதானாம் ' பொலிசார்' விரிச்ச வலையிலை சிறுமி காப்பாற்றபட்டதோடை இவையளிலையும் மூண்டுபேர் அகப்பட்டு போச்சினமாம்..." பார்வதி விளக்கினாள்.

'' இந்த பெரிய விசயம் உனக்கென்னண்டு தெரிய வந்தது பார்வதி...?'

சிவம் ஆச்சரியத்துடன் வினாவினான்.

பார்வதி நாணத்துடன் சிரித்தாள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உனக்கு சொல்லக் கூடாதெண்டு ஒரு கதை என்னட்டை இருக்குதா சிவம்... உந்த வானிலை திரியிறதுகளிலை வெத்திலை குதப்பி ஒருவன் இருக்கிறான் பார்...''அவள் அப்படி கூறி இழுக்கவும்...

'ஓம்... ஓம்... இப்ப புதுக்க வந்த அந்த குண்டன்... " சிவம்

'' அவர்தான்....! அவருக்கு இஞ்சத்தை நடைமுறை தெரியாது...

நாங்களும் இவேன்ரை திருகுதாளங்கள் எல்லாத்திலையும் பங்குதாரர்கள் எண்டு நினைக்கிறார்... அது மட்டு மல்லாமல் என்னோடையும் கொஞ்சம் 'சில்மிஷம்' புரியவும் ஆசை கிடக்கு.... அதாலை அவர் கக்கின உண்மைகள் பல எனக்கு தெரிய வந்திருக்கு....'' பார்வதி

'' நீ கெட்டிக்காரிதான் .... இந்த ஐயா பாவம். ஏழை போலையும் கிடக்கு. சந்தர்ப்பம் கிடைச்சால் என்ன விசயம் எண்டு அலசிபார்..." சிவம்.

பார்வதி மதிய உணவுடன் கடமை முடித்து வெளியேறிவிட்டாள்...சிவம் பெரியவரை குளிக்க வைத்து மதியபோசனம் வழங்கினான். மன உழைச்சல் காரணமாகவும் தாடையில் ஏற்பட்ட காயம் காரணமாகவும் அவரால் உணவருந்த முடியவில்லை.

சிவம் ஆறுதல் வார்த்தைகள் கூறினான்...'ஐயா.... உங்களை இந்த பாவிகள் ஏன் கொண்டுவந்து வைச்சிருக்கிறான்கள் எண்டது எனக்கு புரியேல்லை. அதை தெரிச்சுகொள்றது கஷ்டம். ஆனால் இண்டைக்கு இரவு அந்த பூட்டிக்கிடக்கிற அறையிலை வைச்சு விசாரிப்பாங்கள். நீங்கள் தப்ப வேணுமெண்டால் அவங்களுக்கும் அவங்கட நிபந்தனைகளுக்கும் பணிஞ்சு போறதுதான் ஒரே வழி. உங்களை காப்பாற்றிக்கொள்ளுங்கோ ஐயா...'

சிவத்தினுடைய கண்களில் இருந்து நீர்வடிவதை கண்டதும் பெரியவருடைய பிடிவாதம் கரைந்துவிட்டது. அவனை திருப்தி செய்யும் பொருட்டு சிறிதளவு ஆகாரத்தை உட்கொண்டார். பின்னர் வாய் அலம்பியபடி கூறினார்....

' நீ கவலைப்படாதே தம்பி.... மடியிலை கனம் இருந்தால் தானே வழியிலை பயமிருக்கிறதுக்கு.... ஏதோ தெரியாமல் ஆருக்கோ பதிலாக என்னைக்கொண்டு வந்திட்டாங்கள் போலை... விட்டு விடுவான்கள்....

சிறிதளவு நம்பிக்கை கீற்று அவர் மனதில் இருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை '' உயர்ரக வெள்ளை நிறக்கார்'' ஒன்று அந்த வீட்டின் முன்பாக கம்பீரமாக வந்து நின்றது. ஆஜானுபாகுவான் தோற்றம் கொண்ட ஒரு நடுத்தர வாலிபன் வாகனத்திலிருந்து இறங்கி வந்து வரவேற்பு மண்டபத்தில் போடப்பட்டிருந்த ' ஸோபா'வில் வசதியாக அமர்ந்தான்.

அவனுடன் சிவம் பவ்வியமாக நடந்து கொண்டான். குளிர்பானம் வழங்கினான்... பின்னர் வெளியே காத்து நின்ற மெய்க்காவலர்களுக்கும் சாரதிக்குமாக மூன்று கண்ணாடிக் குவளைகளில் பானத்தை நிரப்பி எடுத்துச்சென்றான்.

அவன் திரும்பி வரவும்....

'சிவா... அந்த ஐயாவை வரச்சொல்லும்...' என்று கட்டளையிட்டான் அந்த நடுத்தர வயதினன்.

சிவா தாங்கிப் பிடித்துவர... தள்ளாடியபடி வந்த முதியவரை அந்த விசாரணை அதிகாரி எரித்து விடுவதுபோல பார்த்தான்... பின்னர் கூறினான்.

''ஐயா... உங்களை இண்டைக்கும் இரவு விசாரிப்பம். விசாரணை இண்டைக்கு முடிவடையலாம்.. சில நாட்கள் செல்லவும் கூடும். எல்லாம் நீங்கள் எங்களோடை ஒத்துழைக்கிறதிலைதான் இருக்கு... இப்ப நீங்கள் போய் அறையிலை படுத்து களையாறுங்கோ...''

பெரியவருக்கு மனம் உறுத்தியது. ''என்னை இதுவரைக்கும் என்ரை தம்பி தேடத்தொடங்கியிருப்பான். ' பொலிஸிலை' முறைப்பாடு கொடுத்திருப்பான். அவனாலை கோபத்தை தாங்க முடியாது. ஆனால் நேருக்கு நேராய் என்னைப்போலை ஆரோடையும் கதைக்கமாட்டான். எண்ணி எண்ணி அழுந்துவான். இப்ப நடக்கிற ஆட்கடத்தல்களையும் மற்ற மற்ற அநியாயங்களையும் தட்டிக்கேட்கிற அவன் என்னைக்கடத்தினதெண்டு கேள்விப்பட்டால் சும்மா இருக்க மாட்டான்....''

என்றெல்லாம் அவரது மனம் எண்ணிக்கலங்கியது.

விசாரணைக்கென அவரை அந்த அலுவலக அறைக்கு அழைத்துச் சென்ற போது இரவு பத்து மணி ஆகிவிட்டது.

தொலைக்காட்சி மற்றும் கணனி சார்ந்த அலுவலக உபகரணங்கள் அனைத்தும் அங்கு நிரம்பி வழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம்தான் அந்த முதியவரை விசாரணை அதிகாரியின் முன் கொணர்ந்து அமரச்செய்தான். பின் வெளியேறிவிட்டான்.

விசாரணை நடைபெறும் சமயம் அங்கு அநாவசியமாக யாரும் இருக்க முடியாது. எனினும் சிவத்திற்கு அந்த பெரியவர் மேல் ஏற்கனவே ஓர் அனுதாபம் உண்டாகியிருந்ததால் வெளியே ஓர் ஓரத்தில் நின்று கண்ணாடி சட்டகம் ஒன்றின் ஊடாக நடப்பனவற்றை அவதானித்தான்.

விசாரணை அதிகாரி பெரியவரை அச்சுறுத்தும் பாணியில் உருட்டி மிரட்டி கேள்விக்கணைகளை தொடுப்பதும் பெரியவர் பயத்துடன் கைகட்டி அழுதழுது பதில் சொல்வதும் அந்த அதிகாரியை இறைஞ்சுவதும் பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது... தொலைக்காட்சியில் அவருக்கு சில காட்சிகள் காண்பிக்கப்பட்டன. பின்னர் மீண்டும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

ஒரு கட்டத்தில் முதியவர் பொறுமையின் எல்லைக்கு போயிருக்க வேண்டும். மிகவும் ஆக்கிரோசமாக தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முயன்றார்....

விசாரணை அதிகாரி அதனை புரிந்து கொள்வதற்கு சாமான்ய குண இயல்பு கொண்டவனல்ல. அவனது கோபம் எல்லை மீறியது. பெரியவரை அந்த அறையிலேயே அடித்துப்போட்டுவிட்டு வெளியேறிவிட்டான்.

அப்போது நடுச்சாமமாக இருக்கலாம்...

அதிகாரியின் ஆடம்பரக் 'கார்' புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது. அதன் பின்னரே சிவம் அந்த அறைக்குள் கால் பதித்தான்.

பெரியவர் மூர்ச்சையற்றிருந்தார். அவரை உணர்வு நிலைக்கு கொண்டுவர அவன் மிகவும் சிரமப்பட்டான். அன்றிரவு அவனுக்கு தூக்கம் கெட்டது. பெரியவருடனேயே காலத்தை கழித்தான்.

மறுநாள் பார்வதி வழமையாக பணிக்கு வரும் நேரத்திற்கு சற்று முன்பதாகவே வந்துவிட்டாள். நேரே சமையல் கட்டுக்குச் சென்று சிவத்தை சந்தித்தாள்...

'சிவம்... இந்த ஐயாவை காணேல்லை எண்டு இராத்திரி தொலைக்காட்சி செய்தியிலை அறிவிச்சவங்கள். படம் போட்டு காட்டினபடியால் எனக்கு புரிஞ்சுகொள்ள கூடியதாக இருந்தது. இவருடைய தம்பி ஒருத்தர் கதறிக்கதறி அழுதவர்...' ஆரெண்டாலும் தன்ரை அண்ணனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தினவை , நிபந்தனை இல்லாமல் அவரை விடுவிக்க வேணும்' எண்டு கெஞ்சிக் கேட்டவர். சாயல்லை இந்த பெரியவர் மாதிரித்தான் தம்பியாரும் இருக்கிறார். கதை பேச்சை பார்க்கேக்கை மிகவும் பக்குவப்பட்ட நல்ல பின்னணியை கொண்ட ஆட்கள் எண்டு தெரியுது...."

சிவம் ஆறுதலாக கேட்டுக்கொண்டிருந்தான். பின்னர் கூறினான்...

''பார்வதி... நல்ல ஆட்களுக்கு இண்டையான் சமூகத்திலை எங்கை இடமிருக்கு... ஏன் கடத்துறாங்கள்...? ஏன் சுடுகிறாங்கள்...? எண்டு ஏதாவது முறை தலை இருக்குதா...? நேற்று இரவு பெரியவரின்ரை விசாரணை முடியேல்லை... போதாக்குறைக்கு நல்ல அடி... விசாரணை போற போக்கைப் பார்த்தால் நன்மையிலை முடியிற வாய்ப்பு இல்லை எண்டுதான் தெரியுது...!

பின் இருவருமாக சேர்ந்து பெரியவருக்கு ஒத்தடம் கொடுத்தார்கள். நாடியில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு மருந்திட்டார்கள். தேநீர் பருக வைத்தார்கள்.

பார்வதி பரிவுடன் கூறினாள்...

''ஐயா... அவங்களோடை போட்டி போட்டு முடியிற காரியம் ஒண்டுமாயிருக்காது. உங்கடை உயிரை காப்பாத்துகிற வழியை பாருங்கோ. நீங்கள் உயிர் தப்பி போனால்தான் உங்களை சார்ந்தவைக்கு ஆறுதலாயிருக்கும்."

அப்படி அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போதே வீட்டு வளவுக்குள் வாகனம் ஒன்று வரும் இரைச்சல் சத்தம் கேட்டது. பார்வதி மெதுவே நழுவிச் சென்றாள்.

சிவம் வீட்டுக் கதவினைத் திறந்தான்.

நேற்றைய தினம் பெரியவரை கடத்தி வந்து விட்டுச்சென்ற அதே இளைஞர்கள்! அவர்களில் சாதாரணமாக சில வார்த்தைகள் தானும் பேசுகிற அந்த இளைஞன் இப்போது பெரியவரை அண்மித்து அட்டகாசமாக சத்தமிட்டான்...

'' நாங்கள் நல்லவங்கள்தான் ஐயா... நீங்கள்தான் எங்களைக் கொண்டுவித்து கெட்டகாரியங்கள் செய்விக்கிறது. இண்டைக்கு உங்களுக்கு திரும்பவும் விசாரணை இருக்கு. உங்கடை பதில்கள் எங்களுக்கு சாதகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேணும்... இல்லாட்டி உங்களைப் போட்டுத்தள்ளுற வேலையைத்தான் அநியாத்துக்கு நாங்கள் பாரம் எடுக்க வேண்டிவரும்..."

பெரியவர் நடுநடுங்கப்போனார்....

'இந்த உலகத்திலை என்னதான் நடக்குது எண்டு புரியேல்லை. நாளாந்தம் களவு, கொள்ளை, ஆட்கடத்தல்... ஒரு குமர்பிள்ளை மரியாதையாய் பாதையாலை திரிய முடியுதே... சந்திக்கு சந்தி 'சென்றி' களும் அவையளின்ரை பரிகாசமும் பெண்பிள்ளைகளாலை தாங்கி கொள்ள கூடியதாக இருக்குதா... போதாதகுக்கு கண்ணை மூடின ' ஷெல்' வீச்சு நாளாந்தம் நூற்றுக்கணக்கிலை சாகிற பொது சனத்துக்கு ஆர் கணக்கு வைக்கின? அதோடை நிண்டால் போதாதே...

செயற்கையான உணவுத்தட்டுப்பாட்டாலை விலை வாசி உயர்வும் பட்டினி சாவுகளும் வேலை வாய்ப்பின்மை... கட்சிகளை வளர்க்கிறதுக்காக இனத் துவேஷத்தை தூண்டி விடுவது... சமாதானத்துக்கான கதவுகளை இறுக மூடி வைத்துக்கொள்வது. எதிர்கால சமுதாயம் தலைதூக்க முடியாதபடி கல்விக்கு குந்தகம் விழைவித்தல்....

பெரியவரின் மனதில் இப்படியெல்லாம் எண்ணங்கள் தோன்றின....

'வானில்' வந்த இளைஞர்கள் தமது காலை உணவை எடுத்துவிட்டு வெளியேறிவிட்டார்கள்.

பெரியவருக்கு அன்றைய பகற்பொழுது நரகத்தில் கழிவது போலிருந்தது.

'எப்படியெண்டாலென்ன இண்டைக்கு விசாரணை அதிகாரிக்கு சமாதானம் சொல்லி வெளியேறுகிற அலுவலைப் பார்க்க வேணும்... தம்பி என்னைத் தேடி எல்லா இடமும் ஓடித்திரிவான். அவனுக்கு நல்ல செல்வாக்கு இருக்கு. ஆனால் இப்படியான விடயங்களில் அவனாலும் எந்த மட்டுக்கு காரியமாற்ற ஏலும்...?

என்று சிந்தித்தபடி பெரியவர் மதியத்தின் பின் தூங்கிவிட்டார். மாலையில் நேற்றையதினம் வந்தவனுக்கு பதில் வேறொரு விசாரணை அதிகாரி வந்திருந்தான். பெரிதாக அட்டகாசம் செய்யக்கூடியவனாக இருக்கவில்லை. பெரியவரை அழைத்துவர ஆள் அனுப்பாமல் தானே அவரை அண்மித்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயா... உங்களுக்கு 'பிரஷர்' , 'டயபிற்றிஸ்' எண்டு ஏதாவது வருத்தமிருந்தால் சொல்லுங்கோ... தேவையான 'பில்ஸ்' வகைகளை எடுப்பித்து தருவேன்'' என்று கூறினான்.

பெரியவர்....

'எனக்கு எந்த வருத்தமும் இல்லை தம்பி...'' என்று பதிலிறுத்தார்.

மாலையில் முதியவருடன் சேர்ந்தே தேநீர் அருந்தினான். அந்த சுமூகமான சமயத்தை பயன்படுத்தி பெரியவர் வேண்டுகோள் ஒன்றினை விடுக்க முயற்சித்தார்.... அவன் விரல்களால் அம் முயற்சியை மறுத்து தடை செய்தான்.

விசாரணை தொடங்கும் சமயம் பெரியவர் தானே அறைக்கு நடந்து சென்றார். சிவம் வேறு வேலையொன்றில் கரிசனையாக இருந்ததால் அறைப்பக்கம் செல்லாதிருந்தான்...

விசாரணை நீண்ட நேரம் நடைபெற்றது. ஒரு சமயம் திடீரென விசாரணை அதிகாரி உச்சஸ்தாயியில் கத்துவது கேட்டு சிவம் வெளியே ஓடி வந்தான்.

அதிகாரி அறையிலிருந்து வெளியேறி கோபத்துடன் மண்டபத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி தொலைபேசியில் சில கட்டளைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திலேயே இளைஞர்கள் ' வானில்' வந்து குதித்தார்கள்...

அதிகாரி அவர்களை நோக்கி கட்டளையிட்டான்...

' இந்த பெரியவரை உரிய இடத்திலை உரிய முறையிலை இறக்கி விடுங்கோ...'.

அவனது 'கார்' உடனேயே புறப்பட்டுச் சென்றுவிட்டது.... அதிகாரியின் கட்டளை என்ன என்பது சிவத்திற்கு நன்கு விளங்கும்.

அன்றைய தினம் அரைமனத்துடன் இளைஞர்களுக்கான உணவு தயார் செய்து வழங்கினான்.

நடுச்சாம அளவில் பெரியவரை ஏற்றிக்கொண்டு 'வான்' புறப்பட்டது. பெரியவர் சிவத்தை பரிதாபமாக பார்த்த பார்வை அவனை வாட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாளே அடையாளம் காணப்படாத முதியவர் ஒருவரின் சடலம் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் மக்களால் அடையாளம் காணப்படுவதற்காக வைக்கப்பட்டிருப்பதாக பிரச்சாரப்படுத்தப்பட்டது.

கடந்த இரு நாட்களாகவே பெரியவரைத்தேடி தம்பி பல இடங்களுக்கும் அலைந்து கொண்டிருந்தான். அந்த வகையில் வைத்திய சாலைகளையும் விட்டு வைக்கவில்லை. அன்றும் அந்த பொது வைத்தியசாலையின் பிரேத அறைக்கு அவன் வந்தபோது பிரேத அறை திறந்திருந்தது. பல பொதுமக்கள் பிரேதங்களை பார்வையிட்டபடியே கதறிக்கொண்டிருந்தனர்.

வழமையாகவே தானும் ஒரு நம்பிக்கையற்ற மனதுடன் பிரேதங்களை பார்வையிட்டுச் சென்றான். ஓர் இடத்தில் ஸ்தம்பித்து நின்றன்!

''ஐயோ என்ரை அண்ணையைக் கொன்று போட்டான்கள்' என்று அவன் போட்ட மரண ஓலத்தில் அங்கு நின்ற ஒவ்வொரு பொதுமகனும் தத்தம் உறவினரை பிரேதமாக கண்டுவிட்டது போல திகிலடைந்தார்கள்.

'அற்றெண்டன்' ஒருவன் அவன் அருகாக ஓடி சென்றான். 'ஐயா அழாதையுங்கோ...' என்று கூறி முதலில் தேற்றினான் பின்னர்...

'உங்களை எனக்கு நல்லாய் தெரியும் ஐயா... உங்கடை பேரை ஒருக்கால் சொல்லுங்கோ... '' என்று வினாவினான்.

'என்ரை பேர் இலக்கியன்!' என்று அழுதபடியே அவன் கூறினான்.

''அற்றெண்டன்' ஒரு கணம் யோசித்தான்.

'உங்கடை பேரைக் கேட்கேக்கை சுதந்திர போராட்ட காலத்திலை மக்களுக்காக இலக்கியப்பணி புரிந்த பாரதியார் போன்ற இலக்கிய வாதிகளின்ரை ஞாபகம் தான் எனக்கு வருகுது...''என்று கூறியவன் திடீரென....

''அப்ப செத்துப்போய் கிடக்கறது...? என்று வினவினான்.

இலக்கியன் கண்களைப் பிசைந்தபடியும் விம்மலை ஒருவாறு அடக்கியபடியும் கூறினான்....

''அவர் ஊடகன்!''

வீரகேசரி - 2007

(2007இல் இரசிகமணி கனக செந்தி கதா விருது பெற்ற சிறுகதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு வாசக நெஞ்சங்களே...!

வாழ்க்கை என்பது நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்பதே நம் ஒவ்வொருவருடைய எதிர்பார்ப்புமாகும். பூஜ்யஸ்ரீ ரவிசங்கர் ஜீ அதுபற்றி குறிப்பிடுகையில் கடன், பகை, நோய் மூன்றையும் தவிர்க்க முடிந்தால் சந்தோசமாக இருக்க முடியும் என கூறுகின்றார்.

நாம் அனைவருமே இன்று ஏதோ ஒரு தொழிலை புரிந்து மாத வருமானம் பெறுகின்றோம். எமது செலவுகளை வருமானத்திற்குள் அடங்கும் படியாக வைத்துக்கொள்வோமாயின் கடன் தொல்லை விட்டது.

இனி தொழில் புரிய என்று புறப்பட்டுவிட்டால் பல தரத்தினருடனும் பழக வேண்டிய கட்டாயம் இருக்கும். மனிதன் அன்பை நிலை நிறுத்தி பிறருடன் பழகினால் பகை உண்டாக இடமில்லை அலுவலகங்களில் மற்றும் தொழில்புரியும் இடங்களில் எப்படி நடந்து கொள்ளவேண்டும். என்கின்ற விதிமுறை உள்ளது. புறம் பேசுதல்.... கோள் சொல்லுதல்.... விரும்பத்தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளல்... மற்றவர்களுக்கு குழிபறித்தல்... தன்னை உயர்த்தி பிறரை தாழ்த்தி கதைத்தல்... பணிவின்றி நடத்தல்... அகங்காரம் பாராட்டுதல்... பாரபட்சம் காட்டல்... இத்தியாதி நடைமுறைகளை தவிர்த்தால் பகைமை உண்டாகாது. "நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தோறும் பண்புடையாளர் தொடர்பு" என்று கூறியுள்ளார் வள்ளுவர் இந்த இரண்டுவிடயங்கயையும் கடைப்பிடித்தால் உங்களுக்கு பகைமை உண்டாகாது. நல்ல நூல்களை நயத்தல் நன்று... அதே போல பண்புடையாருடன் பழகுங்கள். நோய் உண்டானால் மகிழ்ச்சி அற்று போகும் அல்லவா...? மது அருந்துதல்... புகைப்பிடித்தல் போன்ற தவறான பழக்கங்கள் நோய்க்கான பிரதான காரணிகள்! எலும்பும் தசையும் நரம்புகளும் பிரதானமாக கொண்ட எமது உடலுக்கு இவற்றால் என்ன பயன் என உணர்தல் கட்டாயம். அளவான சைவ உணவு... நல்ல தூக்கம்.. உடற்பயிற்சி இவை இருந்தால் நோய் அண்டாது. இவைபோதுமா என கவலையடைய வேண்டாம். நீங்கள் ரமண மகரிஷி, இராமகிருஷ்ண பரம கம்சர், விவேகானந்தர் போன்று ஆக வேண்டும் என்றில்லை. யோக... தியானம் இரண்டையும் பற்றி உரியவர்களிடம் இருந்து சிறிது அறிந்துகொள்ளுங்கள். எந்த நோய் ஒன்றும் உங்களை அண்டமாட்டாது. பிறகென்ன... மகிழ்ச்சி உங்கள் முகத்தின் பிரகாசிக்கும்! உங்கள் வாழ்க்கை சிறக்கட்டும் என்று வாழ்த்தி எனது புதிய சிறுகதை தொகுப்பான "நிகழ்காலத்தில் வாழ்தல்" நூலினை உங்கள் கைகளில் தவள விடுகின்றேன்.

ISBN 978-955-78979-5-0

9 789557 897950

உங்கள் நேசகரத்திற்கு நன்றி!
பணிவன்புடனான
தங்கள்
வீ.என்.சந்திரகாந்தி.

ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org